Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily




மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C



## யாழ். வரும் சல்மான் குர்ஷித் முதல்வர் விக்கியை சந்திப்பார்

யாழ்ப்பாணம், செப். 26
யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் வருகை தரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளார். வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிவடைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில் குர்ஷித் இலங்கைக்கு வருகிறார்.
இருநாள் பயணமாக அடுத்த மாதம் 7 ஆம்



21

## கீரிமலை நகுலேஸ்வரத்தில் ஜனாதிபதிக்கு வாசஸ்தலம்

### கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலை

யாழ்ப்பாணம், செப்.26
மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாத வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் ஜனாதிபதிக்கான வாசஸ்தலம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருணத்தை எட்டியுள்ளன.
வலி.வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னமும் மக்கள் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளை இராணுவத் தேவைக்காகச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கீரிமலை, நகுலேஸ்வரம் பகுதியில், உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிர

21

# 2014 இல் சர்வதேச விசாரணை

### காத்திரமான நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு மார்ச் வரை காலக்கெடு
### ஜெனிவாவில் பகிரங்கமாக அறிவித்தார் ஆணையாளர் நவநீதம்பிள்ளை

ஜெனிவா,செப்ரெம்பர்.26
"போர்க் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு நம்பகரமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.அந்த விசாரணையை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் செய்தாகவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் இலங்கை மீது சர்வதேச சமூகம் தனியாக ஒரு விசாரணையை நடத்த வேண்டி ஏற்படும்" என்று ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் நேற்றுப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை.
காணாமற்போனோர் விவகாரம், தமிழர் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் ஆகியவை குறித்தும் நவநீதம்பிள்ளை தனது அறிக்கையில் கவலை வெளியிட்டுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை, பிரதி ஆணையாளர் பிளேவியா பன்சியெரி சமர்ப்பித்தார்.
அதன் முழு விவரமும் வருமாறு;-
ஐ.நா. மனித உரிமைகள் சபை கவலை கொண்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக, சுதந்திரமான நம்பகமான விசாரணைகளை மேற்கொள்ள, புதிய அல்லது விரிவான எந்த முயற்சிகளும் மேற்கொள்

21



## தியாகி திலீபனின் நினைவு இன்று



யாழ்ப்பாணம், செப்.26
தியாக தீபம் திலீபனின் 26ஆவது நினைவு தினம் தமிழர் தாயகப் பகுதிகளிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்களால் இன்று பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.
பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது 12 நாள்கள் உண்ணா நோன்பிருந்து தனது உயிரைத் தியாகம் செய்தார்.
தான் நேசித்த தமிழ் மக்கள் விடுதலை பெற்று நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதற்காகத் தன்னை வருத்தி இன்னுயிரைத் தியாகம் செய்த திலீபனுக்கு இன்று தாயகம் எங்கும் அஞ்சலி செலுத்தப்படுகிறது.
1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி இந்திய அமைதிப் படையினரிடம் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.
12நாள்கள்உண்ணா நோன்பிருந்த திலீ

21

## இறுதிக் கட்டப் போரில் தோல்வியுற்றது ஐ.நா.

### மஹிந்த சபையில் இருந்தவேளை ஐ.நா. செயலர் பான் கீ மூன் உரை

நியூயோர்க், செப்.26
இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் ஐ.நா. தோல்வியடைந்துவிட்டதாக, ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. சபையில் இருந்த நேரத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐ.நா.பொதுச் சபையின் 68ஆவது கூட்டத் தொடரில், பொது விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்

21



## தமிழருக்கு நீதி வழங்கினால் பழியில் இருந்து தப்பிக்கலாம்

### மஹிந்தவுக்கு சம்பந்தன் ஆலோசனை

கொழும்பு, செப்.26
தமிழர்களுக்கு நீதி கிடைத்தால் இலங்கை பழியில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆலோசனை கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.
ஐ.நா.சபையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக பி.பி.சி.தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார்.
"இலங்கை மீது சில நாடுகள் குறிவைக்கின்றன. தொடர்ந்து நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றன. ஐ.நா. சபையின் பல்வேறு அரங்குகளைப் பயன்படுத்தி இலங்கை மீது அழுத்தம் தருகின்றன என்ற ஜனாதிபதியின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.
இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த

21

## மனித உரிமைகளைச் சாட்டி சர்வதேச தலையீடு அதிகரிப்பு

### ஐ.நாவில் ஜனாதிபதி சாடல்



கொழும்பு, செப்.26
"பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் பற்றிய அக்கறை என்ற போர்வையில் வளரும் நாடுகளின் உள் விவகாரங்களில் சர்வதேச தலையீடுகள் வெகுவாக அதிகரித்துள்ளன" என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் 68ஆவது பொதுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் சபையின் 68 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்றுமுன்

21

## ஏனைய வாக்குறுதிகளையும் அரசு நிறைவேற்ற வேண்டும்

### இடித்துரைக்கிறது இந்தியா

புதுடில்லி, செப். 26
வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கியிருந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறது. அதே வகையில் இலங்கை அரசு சர்வதேசத்துக்கு வழங்கியிருக்கும் 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப் படுத்தல் அடங்கலாக முக்கியமான ஏனைய வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் என்று நாம் எதிர் பார்க்கின்றோம் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.
இலங்கையின் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:
இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆக்க பூர்வமான அறிக்கைகளை விடுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது. வடமாகாண மக்களின் முன்னேற்றம் கருதி இரு தரப்பினரும் ஒன்றாகச் செயற்பட விரும்புகிறார்கள் என்பதைக் காட்டுவதாக அது இருப்பதால் எமக்குத் திருப்தியளிக்கின்றது.
இரு தரப்பினரையும் பங்காளித்துவ உணர்வோடும் பரஸ்பரம்

21

## மீனவர் பிரச்சினை குறித்து வடக்கு முதல்வர் கவனம்

யாழ்ப்பாணம், செப்.26
இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் பேசுவதற்குத் தயாராக உள்ளதாக வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் 'உதயனுக்'குத் தெரிவித்தார்.
"மன்னார் மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளுக்குத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நான் சென்றபோது, அந்தப் பகுதி மக்கள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களால் தமது வாழ்வாதார நடவடிக்கைகள் பாதிப்படைவதாக என்னிடம் கூறியுள்ளனர்" என்றும் அவர் கூறினார்.
"தமிழக முதல்வரும், தமது மீனவர்களின் பிரச் சினை தொடர்பில் பேசித் தீர்க்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்

21

உதயன் 26/09/2013

# வடக்கு மக்கள் அரசுக்கு துரோகம் செய்துவிட்டனர்

## வருத்தம் தெரிவிக்கிறார் அமைச்சர் பஷில்

கொழும்பு, செப்.26

துப்பாக்கிக்கும் சயனைட் குப்பிகளுக்கும் பணிந்து போயிருந்த வடக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தி, மக்கள் விருப்பப்படி வாக்களிக்கக்கூடிய ஒரு அமைதியான சூழலை நாமே அமைத்துக்கொடுத்தோம். குறிப்பாக இராணுவமே வடக்கில் அமைதி ஏற்பட காரணமாக இருந்தது. ஆனால் வட பகுதி தமிழ் மக்கள் அதை மறந்து விட்டார்கள். நடைபெற்று முடிந்த தேர்தலில் அவர்கள் இதனை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நகர அபிவிருத்தி (புறநெகும) திட்டத்தின் கீழ் திவுலப்பிட்டிய, மீரிகம பிரதேச சபைகளுக்கான புதிய கட்டடங்களை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் நோக்கம் கருதி அரசு வடக்கின் வசந்தம் திட்டத்தை முன்னெடுக்கவில்லை. வடக்கு மக்களுக்கு வசந்தத்தை ஏற்படுத்தவே வடக்கின் வசந்தம் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.



வடமேல், மத்திய மாகாண மக்கள் அரசின் மீது வைத்திருக்கும் நல்லெண்ணத்தை நடந்து முடிந்த தேர்தலின் மூலம் வெளிக்காட்டியுள்ளனர். வடக்கு மக்களது தேர்தல் முடிவை நாங்கள் வரவேற்கிறோம். 3 தசாப்தங்களின் பின்னர் வடக்கில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டியமை அரசுக்கு கிடைத்த வெற்றி இந்த வெற்றி பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கும் சக்தியை அரசுக்கு வழங்கியுள்ளது. நான்குவருடங்களுக்குமுன்னர் வடக்கு மக்கள் மட்டுமன்றி தெற்கு மக்களும் நிம்மதியாக வாழமுடியாத ஒரு சூழ்நிலையே காணப்பட்டது. வடக்கில் ஜனநாயக முறை, மக்கள் அமைப்புக்கள்; அரசியல் கட்சிகள் எதுவுமே இருக்கவில்லை.

வடக்கில் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராணுவத்தின் மீது பல குற்றச்சாட்டுக்களை தெரிவித்தது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்துள்ளது. இதன் மூலம் தமிழ் மக்களது தேவைகளை அவர்களே நிறைவேற்ற வேண்டும் என் பதே எனது வேண்டுகோள். பதிலாக இளைஞர் யுவதிகளை துப்பாக்கி தூக்கும் நிலைக்கு கூட்டமைப்பினர் வழிவகுக்கக் கூடாது. தெற்கு மக்கள் இது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# உதவி வழங்கியமை குறித்தே கஜேந்திரனிடம் விசாரணை

யாழ்ப்பாணம், செப். 26

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வழங்கப்பட்ட உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் விவரங்களைப் பெறுவதற்கே கஜேந்திரனை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்ததாகவும் அதனை அவர் வழங்கவில்லை என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனை, விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் அழைத்திருந்தனர். நேற்று இடம்பெற்ற விசாரணை தொடர்பில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரிடம் கேட்டபோதே -

எம்மால் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உதவிகளைப் பெற்றவர்களின் தொலைபேசி இலக்கங்களைத் தமக்குத் வழங்குமாறு புலனாய்வுப் பிரிவினர் கேட்டனர்.

அவர்களின் தொடர்பு இலக்கம் எம்மிடம் இல்லையென்று கஜேந்திரன் பதில் அளித்தார்.

அப்படியாயின் அவர்களை தம்முடன் தொடர்புகொள்ளச் செய்யுமாறு புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு கஜேந்திரன் மறுத்துவிட்டார். அதன் பின்பு அவரை விடுவித்தனர் - என்றார். (கு-5)

# சிவில் உடையினர் என்னை அடித்துக் காயப்படுத்தினர்

## அரச ஊழியர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.26

வட மாகாண சபைத் தேர்தல் தினத்தன்று இராணுவத்தினர் தன்னை அடித்துக் காயப்படுத்தியதாக அரச உத்தியோகத்தர் ஒருவர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தலை, முகம், கை, கால்களில் கொட்டனால் தாக்கப்பட்ட நிலையில்படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு நேற்று வீடு சென்றுள்ளார்.

இளவாலையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் சுதுமலை தெற்கைச் சேர்ந்த இராசநாயகம் பெனீஸ்ரஸ் என்பவரை இளவாலைச் சந்தியில் கடை ஒன்றின் முன்பாக வைத்து 8 பேர் கொண்ட குழுவினர் தாக்கியுள்னர். சிவில் உடையில் நின்ற இராணுவத்தினரே தன்னைத் தாக்கியதாக அவர் சந்தேகிக்கிறார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். இவர் மின்சார சபை அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். சம்பவம் இடம்பெற்ற போது இளவாலைப் பொலிஸாரும் அந்த வழியே சென்றிருந்ததாகவும் ஆனால் அவர்களும் தான் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாயில் உள்ள 51 ஆவது பிரிவு கட்டளைத் தளபதிக்கும், இளவாலைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விளக்கம் கோரி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. (ஐ-4)

# உல்லாச பயணிகளின் வருகை அதிகரிப்பு

கொழும்பு, செப்.26

இலங்கைக்கு இந்த ஆண்டில் உல்லாசப்பயணிகளின் வருகை 26.1 வீதத்தால் அதிகரித்துள்ளது என இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி அலுவலகம் தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத் தில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை 79,256 ஆக இருந்தது. இந்தத் தொகை இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் 100,224 ஆக அதிகரித்துள்ளது என அவ்வலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# அகதிகள் தொடர்பில் இனி உடன் தகவல் தருவதில்லை

## ஆஸி. அரசு அறிவிப்பு

ஆஸ்திரேலிய கடற்பரப்புக்கு வரும் சட்டவிரோத அகதிப் படகுகள் தொடர்பிலான தகவல்களை இனிமேல் வழங்கப்போவதில்லை என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் வரும் சட்டவிரோத அகதிகளை, திருப்பியனுப்புவது உட்பட்ட நடவடிக்கைகளை ஆஸ்திரேலியாவின் விசேட படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் அகதிகளை திருப்பியனுப்புவது உட்பட்ட விடயங்களை மனிதஉரிமைகள் காப்பு அமைப்புக்கள் விமர்சனம் செய்து வருவதால், படகு மூலம் வரும் அகதிகள் தொடர்பான தகவல்களை உடனடியாக வழங்குவதை தவிர்க்கவுள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார்.

சட்டவிரோத படகுகளைத் தடுப்பது ஆஸ்திரேலிய மக்களின் நலன்களை கருத்திற்கொண்டாகும். எனவே தேவையேற்படும் போது மாத்திரமே சட்டவிரோத படகு அகதிகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படும் என்று மொரிசன் கூறினார்.



இதேவேளை கடந்த 12 மாதங்களுக்குள் ஆஸ்திரேலியாவுக்கு 400 படகுகளில் 45 ஆயிரம் பேர் சென்றுள்ளனர் என்று தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது. (ச)

# நீதிமன்றம் உத்தரவிட்டால் மீண்டும் தேர்தல் நடத்தலாம்

## மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, செப்.26

மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து மீண்டும் தேர்தல் நடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டால் மாத்திரமே புத்தளத்திற்கு தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

புத்தளத்தில் வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புத்தளம் சென். அன்ரூஸ் கல்லூரியில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரசஊழியர்கள் குறித்து விசாரணை நடத்துமாறு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - மீட்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 09ஆம் திகதி புதன்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



குறித்த பாடசாலையிலிருந்து வாக்களிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டன. இந்த வாக்குச்சீட்டுகள் புத்தளம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டன.

இதன்போது புத்தளம் உதவி தேர்தல்கள் ஆணையாளர் சுமித் சந்தரனவினால் நீதிமன்றில் விளக்கமளிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 09ஆம் திகதி புதன்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

# ரஜீவ விஜேசிங்க எம்.பியின் கவிதைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.26

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்கவினால் தொகுக்கப்பட்ட 'தெறிப்புப் படிமம்' எனும் கவிதைத் தொகுப்பு எதிர்வரும் திங்கட்கிழமை இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக இந்தியத் துணைத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவினால் தொகுக்கப்பட்டு, இந்திய தேசியப் புத்தக நிதியத்தால் வெளியிடப்படும் 'தெறிப்புப் படிமம்' கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இந்த கவிதைத் தொகுப்பு வெளியீடு இடம்பெறவுள்ளது.

இந்த வெளியீட்டைத் தொடர்ந்து அகிலன், அ.யேசுராசா, சோ.பத்மநாதன், சித்தாந்தன், விவேக், ஐ.சாந்தனின் தமிழ் கவிதை வாசிப்பும் ஆரியவன்சரணவீர சிங்கவின் சிங்கள கவிதை வாசிப்பும் இடம்பெறவுள்ளன. (கு-5)

# இராமேஸ்வரம் மீனவர்கள் 41 பேர் நேற்று விடுதலை

இராமேஸ்வரம், செப்.26

இலங்கைச் சிறையில் வாடிவரும் ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீனவர்கள் 41 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதி மீனவர்கள் 21 பேரை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்துச் சென்றனர். இலங்கை கடற் படையினரின் விசாரணைக்கு பிறகு மன்னார் பொலிஸார் மூலம் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட மீனவர்கள் 21பேரும் 80 தினங்களாக வவுனியா சிறையில் அடைக்கப்பட் டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட மீனவர்கள் 21 பேரையும் விடு தலை செய்ய மன்னார் நீதிமன்ற நீதிபதி ஆனந்தி கனகரெத்தினம் உத்திரவிட்டார்.

இதேபோல், கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் 20 பேரையும் இலங்கை கடற் படையினர் சிறைப் பிடித்து சென்றனர். விசாரணைக்கு பின் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட குறித்த மீனவர்களும் நீதிமன்ற காவலில் வைக்கப் பட்டனர். இந்நிலையில் நேற்று காலை மன்னார் நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்ட மீனவர்கள் 20 பேரையும் விடுதலை செய்ய மன்னார் நீதிமன்ற நீதிபதி உத்திரவிட் டார்.



மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 10 விசைப் படகுகளை விடுவிப்பது தொடர்பான வழக்கு டிசெம்பர் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொள் ளப்படும் என நீதிபதி தெரிவித் துள்ளார்.

கடந்த 3 தினங்களில் பாம் பன், இராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 76 மீனவர்கள் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களது படகுகள் விடுவிக்கப்படவில்லை. படகுகள் விடுவிக்கப்படாதது மீனவர்களி டையே கொதிப்பை ஏற்படுத் தியுள்ளது. (வ-12)

### கணவனுக்கு கன்னத்தில் அறைந்தார்

# மனைவிக்கு ரூ.8 ஆயிரம் தாபரிப்பு பணமாக அறவீடு

யாழ்ப்பாணம், செப்.26

மனைவி கணவனுக்குக் கன்னத்தில் அறைந்தது தொடர்பான வழக்கில் மனைவிக்கு தாபரிப்புப் பணமாக மாதாந்தம் 8 ஆயிரம் ரூபா செலுத்த உத்தரவிட்ட நீதிமன்று வழக்கை அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைத்தது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

யாழ். போதனா வைத்திய சாலை வீதியில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் குடும்பஸ்தர் ஒருவருக்கே அவரது மனைவி கன்னத்தில் அறைந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் தனது அலுவலகத்தில் பணிபுரியும் மற்றொரு பெண்ணுடன் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்குக் கடந்த ஜுலை 30 ஆம் திகதி சென்றுள்ளார் என்றும் அங்கு வைத்து குறித்த பெண்ணின் நெற்றியில் குடும்பஸ்தர் பொட்டு வைத்தபோதே அந்தக் குடும்பஸ்தரின் மனைவி தனது கணவனுக்குக் கன்னத்தில் அறைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. குறித்த குடும்பஸ்தருக்கு 4 வயதுடைய குழந்தை ஒன்றும் உள்ளது.

குறித்த குடும்பஸ்தர் ஒவ்வொரு வாரமும் தனது அலுவலகத்தில் பணிபுரியும் பெண்ணுடன் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்குச் சென்று வருபவர். அதனைக் கேள்விப்பட்டதனாலேயே அன்றைய தினம் அவரின் மனைவி கோயிலுக்குச் சென்று அவரைப் பின் தொடர்ந்த போதே தனது

> “ போதனா வைத்தியசாலை வீதியில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் குடும்பஸ்தர் ஒருவருக்கே அவரது மனைவி கன்னத்தில் அறைந்துள்ளார்.

கணவன் குறித்த பெண்ணுக்குப் பொட்டு வைப்பதைக் கண்டு கணவனுக்குக் கன்னத்தில் அறைந்ததாகத் தெரிவிக்கப்பட்டவர். இவர்கள் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர்கள்.

சம்பவத்தை அடுத்த 2 தரப்பினரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். தனது மனைவி கன்னத்தில் அறைந்ததை அவர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மனைவியால் யாழ். நீதிமன்றில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தபாரிப்புப் பணம் செலுத்துமாறு மனைவியால் கோரப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிவான் மாதாந்தம் 8 ஆயிரம் ரூபா செலுத்த உத்தர விட்டதோடு வழக்கை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்தார். (வ-4)

### நயினாதீவு- குறிகாட்டுவான்

# பாதைச் சேவை அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், செப்.26

நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான பயணிகள் பாதைச் சேவை ஒக்ரோபர் மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ்.சுதாகர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சீரற்ற கால நிலை மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக இரவுப் பாதை சேவையை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனினும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்தக் கடற்பாதைச் சேவை ஆரம்பித்து வைக்கப்படும்- என்றார்.

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு இந்தக் கடற்பாதைச் சேவையின் வெள்ளோட்ட விழா அண்மையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-17)

> “ தற்போதைய சீரற்ற கால நிலை மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக இரவுப் பாதை சேவையை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

# பிரதேச அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவேன்

### மாகாண சபை உறுப்பினர் சிவயோகன் உறுதி

வடமராட்சி, செப்.26

பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்க மாகாண சபை மூலம் கிடைக்கும் உதவிகளைப் பெற்றுத் தந்து சபைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவேன் என மாகாண சபை உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் கரவெட்டிப் பிரதேச சபையில் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முற்பகல் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற போது சபையின் செயற்பாடுகளைப் பார்வையிட வந்திருந்தார் சிவயோகன்.

அவ்வேளை உறுப்பினர்கள் எழுந்து நின்று கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

சபையில் அவர் உரை நிகழ்த்தும்போது, பிரதேச சபைகள், நகர சபைகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாகாண சபை சட்ட வரம்புக்கமைய வழங்க எமது மாகாண சபை முன்வரும் எனக் கூறினார்.

சில நிமிடங்கள் உறுப்பினர்கள் கலந்துரையாடிய பின்னர் அவர் சபையை விட்டு வெளியேறினார். எனினும் சபைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (வ-8)

### நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,செப்.26

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் வி.சுப்பிரமணியத்தின் 17 ஆவது நினைவுப் பேருரை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'அறிவாற்றலும் ஒழுக்கமும் உள்ள சமுதாயத்தை உருவாக்குதல்' என்னும் தலைப்பில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை செயலாளர் எஸ்.சத்தியசீலன் நினைவுப் பேருரை வழங்குவார். (வ)

### தாய், சேய் நிலையம் திறந்து வைப்பு

மன்னார், செப். 26

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்தில் 'வேள் விஷன்' அமைப்பின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட தாய், சேய் நலன்புரி நிலையம் நேற்று புதன்கிழமை காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக நானாட்டான் பிரதேச செயலாளர் சி.ஏ. சந்திரையா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நானாட்டான் வைத்திய அதிகாரி எஸ்.சிவபாலன், நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் அன்புராஜ் லெம்பேட், வேள் விஷன் அமைப்பின் முகாமையாளர் செல்வபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களின் நலன் கருதியே குறித்த தாய், சேய் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டதாக நானாட்டான் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (க-12)

### கல்விக் கண்காட்சி

நெல்லியடி, செப். 26

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த வட இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்விக் கண்காட்சி நாளை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து வைபவரீதியாகக் கல்விக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (வ-35)

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டில் அனிஞ்சியன்குளம் கிராமம்

துணுக்காய், செப். 26

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவில் கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருவதாக கிராம மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

அனிஞ்சியன்குளம் இரண்டாம் பகுதியில் குடிதண்ணீர் கிடைக்காததால் மக்கள் நீரைப் பெறும்பொருட்டு வேறு இடங்களுக்குச் செல்வதைக் காண முடிகின்றது. இந்தக் கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள் வசிக்கின்றன. பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அவையும் பயன்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

தேர்தல் காலத்தின்போது அவசர அவசரமாகக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அவை தற்போது பயன்படாத நிலையிலேயே காணப் படுகின்றன.



தற்போது இங்குள்ள குளங்களிலும் நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றது. தமது கிராமத்தில் காணப்படும் குடிதண்ணீர் பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்குமாறு அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)

# போக்குவரத்து விதிமுறை விழிப்புணர்வுப் பிரசாரம்

வடமராட்சி, செப். 26

வாகனச் சாரதிகள் மத்தியில் போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிப்பதை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் தெருமுடி மடம் தொடக்கம் வல்லை வரையான பிரதான வீதியின் கரையோரத்தில் நிறுவப்பட்டுள்ளன.

நெல்லியடிப் பொலிஸார் தனியார் மோட்டார் வாகன இறக்குமதி நிறுவனத்தின் அனுசரணையுடன் நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்வாய் கிழக்கு தெருமுடி மடம் தொடக்கம் பிரதேசத்தின் மற்றொரு எல்லையான வல்லை வரை 4 விழிப்புணர்வு விளம்பரப் பலகைகளை நிறுவியுள்ளனர்.



முறையான சாரதிகளை வரவேற்கின்றோம். விபத்துக்கள் நடைபெறும் இடம் என்பன போன்ற வாசகங்கள் இந்த விளம்பரப் பலகைகளில் தமிழிலும், சிங்களத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. (வ-8)

# வாக்களிக்கும் முறை குறித்த விழிப்புணர்வு மக்களிடம் இல்லை

### தெற்காசியத் தேர்தல்கள் கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்து

கொழும்பு, செப்.26

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்களிலும் அதிகளவான வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகள் என நிராகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர் பில் வாக்காளர்களுக்கு விழிப் புணர்வூட்டும் நடவடிக்கைகள் தேர்தல் திணைக்களம் மேற் கொள்ள வேண்டும் என்று தெற்காசிய தேர்தல்கள் கண் காணிப்புக் குழுவின் தலை வர் என். கோபாலசாமி பரிந்துரைத்துள்ளார்.

வடமாகாண சபை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக தெற்காசிய தேர்தல்கள் கண்காணிப்புக் குழு இலங்கைக்கு வந்திருந்தது. தமது கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் அவதானங்கள் தொடர்பிலும் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை முக்கியமாக குறிப்பிட்டுள்ள அதேவேளை நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தொடர்பிலும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 615 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எனவே தேர்தல்கள் திணைக்களம் வாக்காளர்களை அறிவூட்டும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தெற்காசிய தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் என்.கோபாலசாமி தெரிவித்துள்ளார். (வ-5)

> “ இதில் தேர்தல்கள் திணைக் களத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை முக்கியமாக குறிப்பிட்டுள்ளார்

# வெடிப்புச் சம்பவத்தில் காணமற் போனவர் சாவு

### காணாமற் போனவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 26

முகமாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் காணாமற் போனவர் சடலமாக நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் இதயராஜா சுதாகரன் (வயது-27) என்று இனங்காணப்பட்டுள் ளார்.

முகமாலை முன்னரங்கப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றப்படாத பகுதிக்குள் விறகு எடுப்பதற்காக டிராக்டரில் மூன்று பேர் சென்றுள்ளனர். கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசத்தினுள் ஒரு கிலோமீற்றர் தூரம் வரையில் உள் சென்றுள்ளனர். அப்போது தாங்கி எதிர்ப்பு மிதிவெடியில் இவர்களது டிராக்டர் சிக்கியுள்ளது. இதில் பயணம் செய்த மூவரும் தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

காயமடைந்த நிலையில் குகானந்தன் ராசா (வயது-17). துரை சிங்கம் நிரோஜன் (வயது -17) இருவரும் நேற்று முன் தினம் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். எஞ்சிய ஒருவர் காணாமற் போயிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சடலம் தற்போது கிளிநொச்சி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ-5)

# கூட்டமைப்புக்கு வாழ்த்துக்கள்

## தா.பாண்டியன், ஏ.சி.சண்முகம்



“இலங்கைத் தமிழர்கள் ஜனநாயகத் தீர்ப்பின் மூலம் ஜனநாயக வழியில் நிரந்தர அரசியல் தீர்வை வேண்டி வாக்களித்துள்ளதால் அவர்களது ஜனநாயக உணர்வை மதித்து இலங்கை அரசு காலம் தாழ்த்தாது அரசியல் தீர்வுக்கு உதவிட நாம் குரல் கொடுப்போம்

சென்னை, செப்.26
இலங்கை வடக்கு மாகாண தேர்தலில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதற்கு இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் வடகிழக்கு மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் ஈழத்தமிழ் மக்கள் மிகத் தெளிவான தீர்ப்பை வழங்கியிருப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. இலங்கைத் தமிழர்கள் ஜனநாயகத் தீர்ப்பின் மூலம் ஜனநாயக வழியில் நிரந்தர அரசியல் தீர்வை வேண்டி வாக்களித்துள்ளதால் அவர்களது ஜனநாயக உணர்வை மதித்து இலங்கை அரசு காலம் தாழ்த்தாது அரசியல் தீர்வுக்கு உதவிட நாம் குரல் கொடுப்போம்-என்றுள்ளது.

புதிய நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் தீர்ப்புக்கு தலைவணங்கி, தமிழர் பகுதிகளில் உள்ள ராணுவத்தை உடனடியாக திரும்ப பெற வேண்டும். இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதை தெரிவித்துக் கொண்டு, முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ள சி.வி.விக்னேஸ்வரனுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் -என்றுள்ளது.

(வ)

# எரிந்த யாழ்.நூலகத்துக்கு நூல் சேகரித்தவர் சாவு



நா.ப.இராமசாமி.

உலகத் தமிழர்களின் சொத்தாக இருந்த யாழ்ப்பாண பொது நூலகம் 1981ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி நள்ளிரவு நேரத்தில், தீ வைத்து எரிக்கப் பட்டதைத் தொடர்ந்து அந்த எரியூட்டப்பட்ட நூலகத்துக்காக நூல்களை திரட்டிய நாமக்கல்லைச் சேர்ந்த ப.இராமசாமி உயி ரிழந்தார்.

1939 ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி பிறந்த ப.இராமசாமி 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை உயிரிழந்தார் என்று இந்தியச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாக அன்றைய கணக்குப்படி 97, 000 அரிய நூல்களுடன் திகழ்ந்த அந்த நூலகம் எரிந்த போது கண்ணீர் விட்டு அழாத தமிழர்களே இல்லை. அப்படி அழுதவர்தான் இந்த நா.ப.இராமசாமியுமாவார்.

எல்லோரும் அழுததுடன் நின்று விட்டார்கள். ஆனால், நாமக்கல்லைச் சேர்ந்த ப.இராமசாமி எரிந்து போன நூலகத்தை புதுப்பிக்க புதிய நூல்களை திரட்டத் தொடங்கினார். கண்ணில் தென்படும் பழைய நூல்களை வாங்கத் தொடங்கினார். பழைய நூல்கள் எங்கு கிடைக்கும் என்று சொன்னாலும், உடனடியாக கிளம்பி போய் விடுவார். இடைவிடாத பயணம், தேடல் என்று போன நா.ப.இராமசாமி.

40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்ட நூலகத்தைப் பாதுகாத்து பராமரித்து வந்தார்.

2004 ஆம் ஆண்டு ஜன வரியில், யாழ்ப்பாணம் சென்ற நா.ப. இராமசாமி, விடுதலை புலிகளின் தலைவர்களை யும் சந்தித்து பேசியுள்ளார். பல நாள்கள் தங்கிப் பல ஊர்களையும் முக்கி யமான தலைவர்களையும் கண்டு வந்த அவர், ரூபா ஐந்து இலட்சம் மதிப்புள்ள 3800 நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

மீதமுள்ள நூல்கள் அனைத்தும் யாழ்பாண நூலகத்துக்கு என தன்னுடைய உயிலில் எழுதி வைத்துள்ளார் என்றும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை இனப் படுகொலை சுதந்திர விசாரணை தேவை

## ஐ.நா.வில் அன்புமணி வலியுறுத்தல்

“இலங்கையில் தற்போதும் இனப் படுகொலைகள் நடைபெற்று வருகின்றன. இது திட்டமிட்டுச் செய்யப்படும் செயலாகும்.



சென்னை, செப்.26
இலங்கை இனப் படுகொலை தொடர்பாகச் சுதந்திரமான சர்வதேச விசாரணை தேவை என்று ஐ.நா. கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் பசுமைத் தாயகம் சார்பில் அன்புமணி பங்கேற்று வருகிறார்.

ஐ.நா.வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொது அமர்வில் அன்புமணி பேசியதாவது:-

இலங்கையில்தற்போதும்இனப் படுகொலைகள் நடைபெற்று வருகின்றன. இது திட்டமிட்டுச் செய்யப்படும் செயலாகும். இலங்கை வடக்கு மாநிலத்தில் செயற்பட்டு வரும் மனித உரிமை அமைப்புகள் தமிழ்ப் பெண்கள் மிரட்டிக் கட்டாயக் கருத்தடை செய்யப்பட்டது தொடர்பான பதிவுகளை வெளியிட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களாகச் சந்தேகிக்கப்படும் தமிழ்ப் பெண்களுக்குக் கட்டாயக் கருக்கலைப்பு செய்வது தொடர்பாக விக்கிலீக்ஸ் அம்பலப் படுத்தியுள்ளது.

கட்டாயக் கருத்தடையும், கருக்கலைப்பும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும்.இந்தக் குற்றச் சாட்டுகள் தொடர்பாக ஐ. நா.வால் விசாரிக்கப்பட வேண் டும். எனவே, இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பாக சுதந்திரமான பன்னாட்டு விசாரணைஆணையம்அமைக்க வேண்டும் என்று அவர் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# மலேசியாவில் இலங்கையர் 49 பேர் கைது

மலேசியாவில் கனரக வாகனம் ஒன்றில் பதுங்கிய நிலையில் பயணித்த 49 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத குடியேறிகளை மலேசிய அதிகாரிகள் கைது செய்ய முனைவதாக கிடைத்த தகவலை அடுத்தே இவர்கள் கனரக வாகனம் ஒன்றில் பதுங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை நடத்தப்பட்ட சுமார் 4 மணித்தியால தேடுதலின் போது சுமார் 60 சட்ட விரோத குடியேறிகளான வெளிநாட்டவர்கள் கைதாகினர்.

அவர்களில் 49 பேர் இலங்கையர்களாவர். வீசா நிறை வடைந்தும் மலேசியாவில் தங்கியிருந்தமை, மற்றும் போலியான ஆவணங்களை கொண்டிருந்தமை போன்ற காரணங்களுக்காகவே அவர்கள் கைதானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**தவறிவிட்டது**

எ.ஸ்ரீபன்ராச் ஆகிய எனது NIC, இன்சூரன்ஸ், ரக்ஸ், லைசன்ஸ்சிற்கான தடக்கொட ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கொடிகாமத்துக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். 0777600198

**தவறிவிட்டது**

குடவத்தை துன்னாலை தெற்கு, கரவெட்டி எனும் விலாசத்தில் வசிக்கும் சுபேந்திரராஜா மதிவதனன் ஆகிய எனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பையை தவறவிட்டுவிட்டேன் (துன்னாலையை அண்டிய பகுதியில்). தயவு செய்து அருகில் உள்ள தபால் பெட்டியில் போட்டு உதவுமாறு தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொடர்பு இல:
072 782 8523
(ச/12303) (10.14)

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**
**விசேட பொதுக்கூட்டம்**

எதிர்வரும் 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு இந்துமத குருமார்களுக்கான பொதுக்கூட்டம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் உள்ள தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைத்து குருமார்களையும் இந்துமத குருமார் ஒன்றிய எழுத்தாளர் அவை உறுப்பினரையும், ஸ்ரீமாத மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினரையும் பிரம்ம கான சபா உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சிறிகாந்த குருக்கள்

சர்வதேச குருமார் ஒன்றியம்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C/12156) (10.14)

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 21.01.1949 — மறைவு 30.09.2010



அன்பின் உருவே பண்பின் பிறப்பிடமே
ஆண்டுகள் மூன்று ஆனாலும் உம் பிரிவால்
எம் நெஞ்சம் நெஞ்சுருகி கண்ணீர் சிந்துகின்றோம் அப்பா
அப்பா என்று உறவாட யாரும் இல்லை
அன்பான வார்த்தை பேசவும் நீங்கள் இல்லை அப்பா
ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும்
அன்பான எங்கள் அப்பாவுக்கு நிகராகுமா?
தூய வாழ்க்கை நடத்தி வாழ்ந்தீர்கள் அப்பா!
நமக்கெல்லாம் ஓர் உற்ற துணையாய், நிழலாய் நம்மை
இணைக்கும் ஓர் பாலமாய் இருந்தீர்கள் அப்பா
காலமெல்லாம் உங்களுக்காக கண்ணீர்ப் பூக்கள் சொரிகின்றோம்
அம்மாவும் நாங்களும் உங்கள் உயிரோடு உயிராகக் கலந்த உறவே
என் உயிர் தங்கள் உயிருடன் சங்கமிக்கும் நன்னாள் வரும்வரை
உங்கள் நிஜமான நினைவுகள் என் உள்ளத்துள் வாழும், வளரும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய சுட்டிவேரகத்து
அம்பாளை மனமுருக வேண்டுகின்றோம்.
சாந்தி, சாந்தி, சாந்தி.

மனைவி,மக்கள்,பேரப்பிள்ளைகள்.

அமரர்
Dr. K.V. துரைராஜா
(அகத்தியர்)
(ஓய்வுதியர்-யாழ். போதனா வைத்தியசாலை, பணிப்பாளர் அகஸ்தியர் குழுமம்)

TR.மொபைல்
மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
077 353 5516

அகஸ்தியர் ஒழுங்கை,
35/3, செங்குந்தா வீதி,
திரு கிழக்கு, நல்லூர்.
SK Building & Consultant Service

(32084) (7.3)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



அமரர் கந்தையாப்பிள்ளை செல்வரத்தினம்
(உரிமையாளர், செல்வம்ஸ், நெடுங்கேணி)

கடந்த (27.08.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நினைவாக நாளை(26.09.2013) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறவிருப்பதனால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

S.M. கேணியடி,
புதுறோட், காரைநகர்.
(32009, 14)

மனைவி,மகன்மார்,மகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்**




மலர்வு 28-07-1964 — உதிர்வு 27-08-2013

27.08.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் மாசிலாமணி ஜெகதீஸ்வரன்

அவர்களின் நினைவு அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இன்று (26.09.2013) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், மலரஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீரஞ்சலி வெளியிட்டவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

51, 1ஆம் ஒழுங்கை, புறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 0777698409
(32057-23-14) குடும்பத்தினர்



# ஐந்து பேருக்கு நீரிழிவு நோய்

## நடமாடும் சேவையில் இனங்காணல்

தென்மராட்சி, செப். 26

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவினரால் நேற்று தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட நீரிழிவு நடமாடும் சேவையில் ஐந்து பேருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நடமாடும் நீரிழிவுப் பரிசோதனை முகாம் வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தலைமையிலான வைத்திய அதிகாரிகள் குழுவினரால் நடத்தப்பட்டது.

பிரதேச செயலகத்தில் பணியாற்றும் 200 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு நீரிழிவு பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

> பிரதேச செயலகத்தில் பணி யாற்றும் 200 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு நீரிழிவு பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இவர்களில் ஐந்து பேருக்கு நீரிழிவு ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் காணப்படுவதால் வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடத்தப்பட்டது. (வ-9)

# இறங்குதுறை புனரமைப்பிலிருந்து விலகியது ஐ.ஓம்.எம். நிறுவனம்

## கிளாலி மக்கள் திண்டாட்டம்

வலி.தென்மேற்கு, செப்.26

கிளாலி கடற்கரையில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட இறங்குதுறையைப் புனரமைக்க முன் வந்துள்ள ஐ.ஓம்.எம். நிறுவனம், இறங்குதுறைக்குச் செல்லும் பாதையைக் கடற்படையினர் மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் புனரமைக்கும் பணியிலிருந்து ஒதுங்கியுள்ளது.

கடற்படையினரின் இந்த நடவடிக்கை குறித்து விரக்தியடைந்துள்ள கடற்றொழிலாளர் கடற்படையினரின் ஆதிக்கத்திலுள்ள பாதையை மீட்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.



நாட்டில் ஏற்பட்டிருந்த போர் காரணமாக பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் கிளாலிப் பகுதியிலிருந்து 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மீனவக் குடும் பங்கள் சமாதானத்தை அடுத்து 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மீள்குடியமர்ந்தனர்.

அவர்கள் காலம் காலமாகப் பயன்படுத்தி வந்த இறங்குதுறையையும் அதற்குரிய பாதையையும் அந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்த கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தபடியால் மீனவர் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

இந்த நிலை குறித்து கிளாலிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையைத் தொடர்ந்து கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த துறைமுகமும் பாதையும் விடுவிக்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக பலத்த சேதத்துக்குள்ளான இறங்குதுறையைப் புனரமைக்க ஐ.ஓ.எம். நிறுவனம் முன்வந்தது.

ஆனால் இறங்குதுறைக்குச் செல்லும் பாதையைக் கடற்படையினர் மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளமை யால் இறங்குதுறை புனரமைக்கும் பணிகள் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் விரக்தியடைந்துள்ள மீனவர், கடற்படையினரின் ஆதிக்கத்திலுள்ள பாதைய மீட்பதற்கான முயற்சியில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளனர். (வ-115)

# இடைநிறுத்தப்பட்ட வீதி அகலிப்பு பணி ஆரம்பம்

வடமராட்சி, செப்.26

மாகாண சபைத் தேர்தலையொட்டி கடந்த ஒரு வார காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெல்லியடி-பருத்தித்துறை பிரதான வீதி அகலிப்புப் பணிகளின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த பிரதான வீதியில் மாலுசந்தி, மந்திகை ஆகிய இடங்களில் அகலிக்கப்பட்ட வீதிக்கு இன்னமும் காப்பெற் இடப்படவில்லை. குறுகிய தூரங்களைக் கொண்ட குறித்த வீதிகளுக்குக் காப்பெற் இடப்பட்டால் வீதி அகலிப்புப் பணி நிறைவடைந்துவிடும் எனினும் அந்தப் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இன்னும் ஒரு சில வாரங்களில் 'காப்பெற்' இடும் பணி ஆரம்பமாகும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இருப்பினும் இந்த வீதி அகலிப்புப் பணியின் ஓரங்களாக அகலிக்கப்பட்ட வீதியின் கரையோரத்தில் வடிகால்கள் கட்டும் பணி நெல்லியடி நகரத்தில் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் காப்பெற் இடப்பட்ட வீதியின் இருமருங்கும் மண் போடப்பட்டு பாதசாரிகளுக் கான பாதையை சமச்சீர் செய்யும்பணிகள் இடம்பெறுகின்றன.(வ-8)

# வலி.தென்மேற்கு வீதிகளுக்கு விரைவில் பெயர்ப் பலகைகள்

வலி.தென்மேற்கு, செப்.26

பொதுமக்களின் நலன்கருதி, வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள சகல வீதிகளுக்கும் பெயர் சூட்டப்பட்டுப் பெயர்ப் பலகைகள் நடப்படவுள்ளன.

இதற்கான பிரேரணை வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் ரமணனால் முன்மொழியப்பட்டுள்ளது.

தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர் ரமணன் மேற்படி பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள வீதிகளுக்குப் பெயர்கள் சூட்டப்படாததால் இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக் கள் மட்டுமல்ல, வெளியிடங்களிலிருந்து வரும் மக்களும் குறிப்பிட்ட இடங்களை இனங்காண முடியாமல் திண்டாடுகின் றனர்.



> இதற்கான பிரேரணை வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் ரமணனால் முன் மொழியப் பட்டுள்ளது.

இதேவேளை பிரதேச சபையால் வீதி அபிவிருத்திப் பணி கள் மேற்கொள்ளப்படும்போது வீதிகளக்குப் பெயர் இல்லாத தால் அபிவிருத்தி வேலைகள் தாமதம் ஏற்படுவதுடன் தடங்கலும் இடம் பெறுகின்றது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு அனைத்து வீதிகளுக்கும் பெயர் சூட்ட வேண்டுமென்று பிரேரிக்கின்றேன்.

அடுத்துவரும் கூட்டத்தில் இந்தப் பிரேரணை ஆராயப்பட்டுத் தீர்மானிக்கப்படவுள்ளது.- என்றார். (வ-115)

# சுகாதாரம் பேணாததால் பேக்கரிக்கு மூடுவிழா

வடமராட்சி, செப். 26

விற்பனையாளர்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் இன்மையால் மந்திகை வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள பேக்கரி விற்பனை நிலையம் மூடப்பட்டது.

சில காலங்களுக்கு முன்னர் மந்திகை வைத்தியசாலை வீதியில் பேக்கரி உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வந்தது.

குறித்த விற்பனை நிலையத்தை சுகாதாரப் பரிசோதகர் கண்காணித்து பரிசோதனை செய்த போது விற்பனையாளரிடம் சுகாதாரக் குறைபாடுகள் இருப்பது தெரியவந்தது. அத்துடன் உணவுப் பொருள் களை விற்பனை செய்யும் விற்பனையாளரிடம் வைத் திய அத்தாட்சிப் பத்திரமும் இருக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

அதனையடுத்து விற்பனையாளரின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தி வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெறும் வரை பேக்கரி விற்பனை நிலையத்தை மூடுமாறு உத்தரவிடப்பட்டது. (வ-8)

# தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேறும் காலம் வந்துள்ளது

## முகமது ஹரிஸ் தெரிவிப்பு

தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேறும் காலம் வந்துவிட்டது. அவர்களுக்கான சுயநிர்ணயம் கிடைத்துவிட்டது. இந்த நிலையில் சிந்தித்து வாக்குகளை கூட்டமைப்பினருக்கு வழங்கிய அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவித்தார் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் முகமது ஹரிஸ்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் இன்றும் அடிப்படை வசதிகள்



எதுவுமற்ற நிலையில் வாழ்கின்றனர். அவர்களின் மீள்குடியேற்றம், அடிப்படை வசதிகள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

விரைவில் முஸ்லிம் மக்களுக்கு விடிவு கிடைக்கும் என அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேறும் காலம் வந்துவிட்டது. அவர்களுக் கான சுயநிர்ணயம் கிடைத்து விட்டது.

முஹமது ஹரிஸ் வடமாகாண சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழு 3 இல் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தும் அதிலிருந்து விலகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (வ-10)

# தென்மராட்சியில் வேகமாக பரவுகிறது வயிற்றோட்டம்

தென்மராட்சி, செப். 26

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக்காலமாக வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவி வருகிறது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில்வயிற்றோட்டநோயால் பீடிக்கப்படும் பெருமளவு நோயாளர்கள் தினமும் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதுடன் விடுதி களிலும் தங்கி சிகிச்சை பெற்று வருவதைக் காணமுடிகிறது.

வயிற்றுளைவு நோய்க்கு வீடுகளில் கை மருந்து செய்து சாப்பிட்டு நிலைமை மோசமாகி வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்படுவோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

பிரதேசத்தின் அனைத்துப் பிரிவுகளிலிருந்து வயது வேறுபாடின்றி வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் விவரங்கள் உடனுக்குடன் சாவகச்சேரி வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவிக்கப்பட்டு அந்தந்த பொது சுகாதார பரிசோதகர்கள் மூலம் கிணறுகளுக்கு குளோரின் இடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வயிற்றுளைவு நோயினால் பீடிக்கப்படுவோர் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுமாறு வைத்திய வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன. (வ-9)

# கடற்றொழிலாளருக்கு கடன் வழங்கல்

வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்றொழிலாளர்களின் தொழில் விருத்திக்காக தலா 5 மில்லியன் ரூபா வரையான கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள அலுவலகத்தில் கடற்றொழிலாளர்களுடனான கலந்துரையாடல் நடத்தப்பட்டு கடனுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட் டுள்ளதாகவும் கடன்கள் இலங்கை வங்கியூடாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மன்மோகன் அமெ. பயணம்

**பாதுகாப்பு குறித்த வகையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு 12க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களில் இரு நாட்டு தலைவர்களும் கையெழுத்திட உள்ளனர்.**

புதுடில்லி, செப்.26

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஒருவாரகால பயணமாக அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கு அமெரிக்க ஜனாதிபதியை சந்திக்கும் அவர் பாதுகாப்பு, பயங்கரவாதம், வர்த்தகம், கடவுச்சீட்டு தொடர்பான பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கவுள்ளார்.

அவர் அங்கு ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளதுடன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் செரிப் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

### முக்கிய சந்திப்பு

இந்தபயணத்தின்போதுவொஷிங்டனில் நாளை ஒபாமாவுடன் நடக்க உள்ள சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரலில் அணு சக்தி ஒப்பந்தம், பாதுகாப்பு மற்றும் பொருளாதார துறைகளில் ஒத்துழைப்பு என பல முக்கிய விடயங்களில் இடம்பெற்றுள்ளன.

### ஒப்பந்தங்கள்

இந்தப் பயணத்தின்போது இந்தியா - அமெரிக்கா இடையே பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. அவை குறித்து கடந்த இரண்டு மாதங்களாக இருநாட்டு அதிகாரிகளும் அடங்கிய உயர்மட்ட குழு ஆய்வு செய்து இறுதி செய்துள்ளன. அந்த வகையில், இந்திய அணுமின் நிறுவனம் மற்றும் அமெரிக்க நிறுவனத்திற்கும் இடையில் மிக முக்கியமான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பாதுகாப்பு குறித்த வகையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு 12க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களில் இரு நாட்டு தலைவர்களும் கையெழுத்திட உள்ளனர்.

### பிரதமர் நம்பிக்கை

அமெரிக்கா புறப்படுவதற்கு முன்னர் விமான நிலையத்தில் கருத்துத் தெரிவித்த பிரதமர் மன்மோகன்சிங்,

"கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவுடனான உறவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. சர்வதேச அளவிலான விவகாரங்களை இரு நாடுகளும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டுள்ளன.

முதலீடு, பாதுகாப்பு, பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை, புலனாய்வு, உள்நாட்டு பாதுகாப்பு, சைபர் செக்யூரிட்டி, அணு சக்தி, சுற்றுச்சூழல், சுகாதாரம், கல்வி, விண்வெளி ஆய்வு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கலை மற்றும் கலாசாரம் ஆகியற்றில் இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. எனது இந்த பயணம், இரு நாட்டு உறவுகளை மேலும் மேம்படுத்தும் என்பதுடன், எதிர்கால வளர்ச்சி, ஒத்துழைப்பு குறித்தும் விவாதிக்க உதவும்." என்று தெரிவித்துள்ளார்.(ற)

# நீங்கள் எதிர்பார்க்கும் கட்சிகளுடனே கூட்டணி

## கட்சித் தொண்டர்களுக்கு வைகோ அறிவிப்பு

சென்னை, செப். 26

நீங்கள் எதிர்பார்க்கும் கட்சிகளுடன் தான் கூட்டணி அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

ம.தி.மு.கட்சியின் மாவட்டச்செயலர்களுக்கான பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"உயர்நிலைக்குழு ஆட்சி மன்றக்குழு கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி குறித்து முடிவு எடுக்க எனக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் கூட்டணி நீங்கள் எதிர்பார்க்கும் கட்சிளுடன் தான் அமையும். இந்த் நாடாளுமன்றத் தேர்தல் ம.தி.மு.க..வு க்கு ஒரு பரீட்சை தான். நமது இலக்கு 2016ஆம் ஆண்டு ஆட்சியை பிடிப்பது தான். அதில் நாம் வெற்றி பெறுவோம். தமிழருவி மணியன் சில ஆலோசனைகளை தெரிவித்துள்ளார். எக்காரணத்தை கொண்டும் காங்கிரஸ், தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி கிடையாது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு நான் தயாராகி விட்டேன். நீங்களும் தயாராகுங்கள்.

இம்மாத இறுதியில் தூத்துக்குடியில் வாகன பிரசாரத்தை நடத்துகிறேன். ம.தி.மு.க. போட்டியிடும் தொகுதிகளில் 50 பேர் கொண்ட குழு அமைக்கப்படும். அந்தக் குழுவினர் தொகுதியில் உள்ள வாக்காளர் பட்டியலின் பெயர்களை சரிபார்க்க வேண்டும். எந்தெந்த தொகுதிகளில் ம.தி.மு.க போட்டியிடும் என்பதை இப்போது சொல்ல விரும்பவில்லை. அந்தந்த மாவட்ட செயலர்களிடம் இன்னும் ஒரு வாரத்தில் தெரிவிப்பேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# தீவிரமாகும் தெலுங்கானா பிரச்சினை

## ஜெகனுக்கு பெருகும் ஆதரவு


புதுடில்லி, செப். 26

ஆந்திராவில் தெலுங்கானா பிரிவு விவகாரம் காங்கிரசுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. தெலுங்கானா பிரிப்பதால் தெலுங்கானா பகுதி மக்கள் காங்கிரசை வரவேற்கிறார்கள். ஆனால் சீமாந்திரா பகுதி மக்கள் ஒருங்கிணைந்த ஆந்திராவாக நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். அவர்கள் தெலுங்கானா பிரிப்பு முடிவு எடுத்த காங்கிரசுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து 59 நாள்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே சீமாந்திரா பகுதியில் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டிக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகிறது. அவரை சொத்துகுவிப்பு வழக்கில் சி,பி.ஐ. சிறையில் அடைத்ததால் அவர் மீது அனுதாபம் ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் ஜெகன் மோகன் ஆதரவு அலையால் காங்கிரஸ் செல்வாக்கு இழந்து வருகிறது.


இந்த நிலையில் திடீர் என்று ஜெகன்மோகன் ரெட்டி பிணையில் விடுதலை செய்யப்பட்டார். காங்கிரஸுக்கும் ஜெகன் மோகன் ரெட்டிக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டதால் அவர் விடுதலை செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது. எனினும் அதை காங்கிரஸ் மறுத்துள்ளது.

இதற்கிடையே தெலுங்கானாவை எதிர்க்கும் சீமாந்திரா பகுதியை சேர்ந்த 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகன் மோகன் ரெட்டி கட்சியில் சேர முடிவு செய்துள்ளனர். இவர்கள் விரைவில் புதுடெல்லியில் சபாநாயகர் மீராகுமாரை சந்தித்து பதவி விலகல் கடிதங்களைக் கொடுக்கவுள்ளனர். அதனால் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (ற)



# மோடியால் உயர்ந்தது குஜராத்

## திடீரெனப் புகழ்கின்றார் அத்வானி



போபால், செப்.26

மோடியாலேயே குஜராத் மாநிலம் வளர்ச்சியடைந்தது என்று திடீரெனப் புகழாரம் சூட்டியுள்ளார் பா.ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானி.

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் பா.ஜ.வின் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உரையாற்றும் போதே அத்வானி இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளார்.

2014ஆம் ஆண்டு நடைபெற்றவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான பரப்புரைகளை இப்போதே ஆரம்பித்துள்ளது பா.ஜ.கட்சி. அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக குஜராத் முதல்வர் நரேந்திரமோடி கடந்த 13ஆம் திகதி அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

அதையடுத்து முதன்முறையாக அரியானா மாநிலம் ரிவாரியில் நடந்த பொதுக்கூட்டத்தில் மோடி தனது முதல் பரப்புரையை ஆரம்பித்தார். அதன் பின்னர் மத்தியபிரதேச மாநிலம் போபாலில் நடக்கும் பிரசாரக் கூட்டத்தில் மோடி உரையாற்றினார். பிரதமர் வேட்பாளர் தெரிவில் மோடியுடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்த அத்வானியும், ஒருவாறு சமாதானமாகி அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

பிரதமர் வேட்பாளராக மோடி அறிவிக்கப்பட்ட பின்னர் அத்வானியும், மோடியும் பங்கேற்கும் முதல் கூட்டம் இதுவாகும். கூட்டத்தில் பா.ஜ. தேசிய தலைவர் ராஜ்நாத் சிங், அத்வானி, மோடி உள்ளிட்டோருக்கு தொண்டர்கள் மாலை அணிவித்தனர். அங்கு யாரும் எதிர்பாராத விதமாக அத்வானி காலில் மோடி விழுந்து ஆசி பெற்றார்.

அதன் பின்னர் கூட்டத்தில் உரையாற்றி அத்வானி, "மோடியின் ஆட்சியினாலேயே குஜராத் வளர்ச்சியடைந்தது. அவர் பிரதமராகும் பட்சத்தில் இந்தியாவும் வளர்ச்சியடையும்" என்று தெரிவித்துள்ளார்.(ற)

# அனுமதி பெறாத பாடசாலைகள் ஒருவாரத்தில் மூடப்படவேண்டும்

## ஹரியானா மாநிலத்தில் அதிரடி

புதுடில்லி, செப்.26

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் பல வருடங்களாக மாநிலக் கல்வித்துறையின் அங்கீகாரம் இல்லாமல் செயற்பட்டு வரும் ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட தனியார் பாடசாலைகளை ஒரு வாரத்திற்குள் மூட வேண்டும் என்று அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

பாடசாலைக் கல்வி நிர்வாக இயக்குநர் மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு இந்த உத்தரவினை வழங்கியுள்ளார். இந்தப் பாடசாலைகளை மூடுவதற்கு உள்ளூர் அரசு நிர்வாகம் அல்லது பொலிஸாரின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"இந்தப் பாடசாலைகளுக்கு முறைப்படி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளத் தேவையான பல வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் அதற்கு முன்வரவில்லை. குறிப்பிட்ட பாடசாலைகளில் அங்கீகாரம் பெறுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளோ, ஊழியர்களோ இல்லாததினால் அவர்கள் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த நடவடிக்கை பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்ற உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றது" என்று மாநில கல்வித்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பெரும் எண்ணிக்கையான பாடசாலைகள் மூடப்படுவதால் பெருந்தொகையான மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கல்வித்துறை அதிகாரிகள்,

"பாடசாலைகளை மூடும் நடவடிக்கையால் பாதிக்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை குறித்துத் தெரியவில்லை. ஏனெனில் இந்தப் பாடசாலைகள் தங்களுடைய மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவித்ததில்லை. அங்கீகாரம் பெறாத பாடசாலைகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க வேண்டாம் என்று முன்னரே பெற்றோர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தோம்" என்று தெரிவித்துள்ளனர்.

கல்வி ஆண்டின் இடையில் இந்தப் பாடசாலைகள் மூடப்படுவதால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள அரசுப் பாடசாலைகளில் அனுமதி வழங்குமாறு மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அரசின் கல்வித்துறை கேட்டுக் கொண்டுள்ளது. (ற)

# வெங்காய விலையேற்றத்தால் சூடு வாங்கினார் கடைக்காரர்

பாட்னா, செப்.26

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் முட்டைப் பொரியலில் வெங்காயம் போடாததால் ஆத்திரமடைந்தவர்கள் கடைக்காரர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அளிகன்ஜ் பகுதியில், தீபு காஷ்யாப் என்பவர் கடை நடத்தி வருகிறார். இவர் கடைக்கு வந்த புஜாரி என்னும் நபர் அவரது 4 நண்பர்களுக்கு முட்டைப் பொரியல் கேட்டார்.

இதனை தயார் செய்த தீபு, புஜாரியிடம் கொண்டுவந்து கொடுத்தார். அதில் வெங்காயம் இல்லாததை கண்ட புஜாரி கோபமடைந்து, ஏன் வெங்காயம் போடவில்லை என தீபுவை கேட்டுள்ளார். இதற்கு பதிலளித்த தீபு, அண்மை காலமாக வெங்காயத்தின் விலை அதிகமாக உள்ளதாகவும், அதனால் வெங்காயம் வாங்குவதை குறைத்துக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

தீபுவின் பதிலுக்கு சமாதானம் ஆகாத புஜாரி, தன்னிடம் இருந்த துப்பாக்கியால் தீபுவை சுட்டுவிட்டு, நண்பர்களோடு அங்கிருந்து வெளியேறினார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டதை அடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ற)

# உறுப்புகள் வெட்டப்பட்டு சிறுவன் கொலை நரபலியாக இருக்கலாம் எனச் சந்தேகம்

செய்யாறு, செப்.26

பாடசாலைக்கு சென்ற 9 வயது சிறுவன் உடல் உறுப்புகள் அறுக்கப்பட்ட நிலையில் குளத்தில் பிணமாக கிடந்த சம்பவம் இந்தியாவின் திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சிறுவன் நரபலி கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம், செல்லபெரும் புலிமேடு கிராமத்தை சேர்ந்த துரை என்பவரின் மகன் 9 வயதுடைய மதன். அங்குள்ள பாடசாலை ஒன்றில் 4 ஆம் வகுப்புப் படித்து வரும் மதன் வழக்கம்போல நேற்று முன்தினம் காலையில் பாடசாலைக்கு சென்றான்.

மதியம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு மீண்டும் பாடசாலைக்குச் செல்வதுதான் வழமை. ஆனால் அன்று அவன் பாடசாலைக்கு சென்று சேரவில்லை. நீண்ட நேரமாகியும் அவன் வகுப்புக்கு வராததால் ஆசிரியர்கள் வீட்டுக்கு தகவல் தெரிவித்தனர். அதையடுத்து பெற்றோர் அக்கம் பக்கத்தில் தேடினர். அப்போது வீட்டிலிருந்து சற்று தூரத்தில் உள்ள ஒரு குளத்தில் மதன் இறந்து கிடந்தான். அவனது உடலை வெளியே எடுத்தபோது பெற்றோரும் பொதுமக்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

மதனின் இடது காது அறுக்கப்பட்டிருந்தது. அவனுடைய உயிர் நாடியும் வெட்டி எடுக்கப்பட்டிருந்தது. உடல் முழுவதும் 'பிளேடால்' வெட்டப்பட்டிருந்தது.

அதையடுத்து மதன் சாவில் மர்மம் இருப்பதாகவும், இதுகுறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவனுடைய பெற்றோர் முறைப்பாடு செய்தனர். அதை யடுத்து மதனது உடல் பிரேத பரிசோதனைக்கான அனுப்பப்பட்டுள்ளது.

சிறுவன் உடல் உறுப்புகளை அறுத்து கொலை செய்யப்பட்டிருப்பதால் நரபலியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார், அதுகுறித்துத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# 200 பேர் சாவு

## பாகிஸ்தானில் அதிர்ந்தது நிலம்



இஸ்லாமாபாத். செப்.26
பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 200க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ரிச்டர் அளவுகோலில் 7.7 அலகுகளாகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் பலூசிஸ்தான் மாகாணம் பெருமளவு சேதமடைந்துள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. அந்த மாகாணத்தின் குஜ்தார் மாவட்டத்திலேயே உயிரிழப்பு எண்ணிக்கை அதிகமாகப் பதிவாகியுள்ளது.

- குஜ்தார் மாவட்டத்தின் ஆவாரன் நகரில் இருந்து 69 கிலோ மீற்றர் தொலைவில் 23 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.
- இந்த நிலநடுக்கத்தின் அதிர்வு கள் கராச்சி, லர்கானா மற்றும் சிந்து மாகாணங்களிலும் உணரப்பட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. மீட்புப் பணிகள் இன்னும் முழுமையாக ஒருங்கிணைக்கப்படாத நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் வெகுவாக அதிகரிக்கக் கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.


"பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதற்கட்டமாக 20 பேர் கொண்ட மீட்புக் குழு அனுப்பப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளில் அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன" என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

குஜ்தார் மாவட்ட அரச அதிகாரி ஒருவர் கூறுகையில், "இந்தப் பகுதியில் பெரும்பாலான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. மீட்புப் பணிகள் தொடங்காத நிலையில், உயிரிழப்புகளின்எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. உயிரிழப்புகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் ஏற்படுகின்றது" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் கராச்சி, லர்கானா மற்றும் சிந்து மாகாணங்களிலும் உணரப்பட்டுள்ளன. அதனால் பீதியடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டன். அதனால் அந்த மாகாணங்களிலும் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, இந்த நிலநடுக்கம் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உணரப்பட்டபோதும், சேதங்கள் ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகவில்லை. (ற)

### உருவானது குட்டித்தீவு



பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக செங்கடல் பகுதியில் சிறிய தீவு ஒன்று உருவாகியுள்ளது என்று கூறப்படுகின்றது. 30 அடி உயரமும், சுமார் 100 மீற்றர் சுற்றளவும் கொண்டதாக அது அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### சி.ஐ.ஏ. முகவருக்கு சிறை



நியூயோர்க், செப்.26
தேசிய பாதுகாப்புத் தகவல்களைக் கசியவிட்டார் என்று தெரிவித்து முன்னாள் சி.ஐ.ஏ. முகவர் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது அமெரிக்க நீதிமன்றம்.

அல்-குவைதா இயக்கத்தின் குண்டுத் தாக்குதல் திட்டங்கள் தொடர்பாகச் சேகரித்த தகவல்களை செய்தியாளர் ஒருவருக்குக் கொடுத்தமை தொடர்பிலேயே 55 வயதான சாஸ்சிட்லேபன் என்ற குறித்த முகவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். விசாரணைகளின் முடிவில் அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது நீதிமன்றம்.

யேமனை தளமாக கொண்ட அல்-குகைதா இயக்கத்தின் தாக்குதல் சதித் திட்டத்தை வெளியிட்ட அசோசியேட் பிரஸ் நிறுவனத்தின் தொலைபேசித் தரவுகள் அமெரிக்க தேசிய புலனாய்வு நிறுவகத்தால் கையகப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த நபர் இனங்காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

### சிறுவர் துஷ்பிரயோகம்: பாதிரியாருக்கு சிறை

பூனுஸ்அய்ரே. செப்.26
சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த பாதிரியார் ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது அந்நாட்டு நீதிமன்றம்.

ஜூலியோ சீசர் கிராஸி என்னும் பாதிரியார் சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1996ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அப்போது அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

எனினும் தன்மீதான குற்றச்சாட்டை மறுத்த கிராஸி, தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்தார். இதுவரை காலம் நடைபெற்ற குறித்த வழக்கின் முடிவில் கிராஸியின் சிறைத்தண்டனையை உறுதிசெய்துள்ளதுமேன்முறையீட்டு நீதிமன்றம்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஆர்ஜென்ரீன சட்ட அதிகாரிகள், "கிராஸி மீதான அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்துக்கு உட்பட்டே மேற்கொள்ளப்பட்டன. எனினும் மேன்முறையீடு என்ற பெயரில் குறித்த வழக்கு தேவையில்லாது காலம் தாழ்த்தப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளனர். (ற)

### இறுதிச் சடங்கில் குண்டு வெடிப்பு: ஈராக்கில் 14 பேர் சாவு

பாக்தாத், செப்.26
ஈராக்கில் இறுதிச் சடங்கு ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயங்களுக்குள்ளாகினர்.

அஸாமியாவில் இரு தினங்களுக்கு தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த ஒருவரின் இறுதிச் சடங்கிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் ஷியா பிரிவு முஸ்லிம் தீவிரவாத அமைப்பாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஈராக்கில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலைமை 2004ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரில் கூட காணப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ற)

### கம்போடிய பிரதமராக ஹன்சென் தெரிவு

நாம்பென், செப்.26
கம்போடியாவின் பிரதமராக மீண்டும் ஹன்சென் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கம்போடியாவில் கடந்த 28 ஆண்டுகளாக ஹன்சென் தலைமையிலான கம்போடிய மக்கள் கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில் அங்கு கடந்த ஜூலை 28ஆம் திகதி நடைபெற்ற தேர்தலிலும் அந்தக் கட்சி அமோக வெற்றி பெற்றது. எனினும் எதிர்க்கட்சிகள் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றன என்று குற்றஞ்சாட்டின. அதனை அந்நாட்டுதேர்தல் ஆணையம் நிராகரித்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஹன்சென் மீண்டும் பிரதமராகத் பதவியேற்றார். (ற)

## அணு ஆயுத தொழில்நுட்பங்கள் வடகொரியாவுக்கு இனி இல்லை

### சீனா அதிரடித் தீர்மானம்

பீஜிங், செப்.25
எதிர்காலத்தில் அணு ஆயுத வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய தொழில்நுட்பங்களை வடகொரியாவுக்கு வழங்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளது சீன வர்த்தக அமைச்சகம்.

அணு ஆயுத சோதனைகளால் சர்வதேச நாடுகளில் இருந்து ஒதுக்கப்பட்ட வடகொரியாவுக்கு ஒரே ஆறுதலாக சீனா மட்டுமே இருந்து வந்தது. எனினும் கடந்த சில மாதங்களாக சீனாவிற்கும், வடகொரியாவிற்கும் இடையிலான உறவு பலவீனப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே சீன வர்த்தக அமைச்சகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

வடகொரியா மீது ஐ.நா. மற்றும் பல்வேறு நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும் சீனா அவற்றைக் கருத்தில் கொள்வதில்லை என்று ஐ.நா. உட்பட சர்வதேச நாடுகள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், வடகொரியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது சீனா.

"சீனாவின் இந்த நிலைப்பாடு வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபை கொண்டுவந்துள்ள பல தீர்மானங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. உடனடியாக நடைமுறைக்கு வரும் இந்தத் தீர்மானம், ஐ.நாவின் வடகொரியா தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த உதவும்" என்று சீனா தெரிவித்துள்ளது. (ற)

## அணுக் கசிவு விடயத்தில் ஐப்பான் அலட்சிய போக்கு

### அமெரிக்க அணு விஞ்ஞானி கிரேக்கரீ ஜோஸ்கோ

டோக்கியோ, செப்.26
புகுஷிமா அணு உலையில் கசியும் அணுக்கதிர் வீச்சுத் தொடர்பாக ஜப்பான் அரசு மெத்தனமாகச் செயற்படுகின்றது என்று கவலை வெளியிட்டுள்ளார் அமெரிக்க அணு விஞ்ஞானிகிரேக்கரீஜோஸ்கோ.

அமெரிக்க அணு உலை ஒழுங்காற்று ஆணையத்தின் முன்னாள் தலைவரும், பிரபல அணு விஞ்ஞானியுமான கிரேக்கரீ ஜோஸ்கோ இதுகுறித்துக் கூறுகையில், "2011ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி காரணமாக புகுஷிமாவில் உள்ள டெய்சி அணு உலையில் கசிவு ஏற்பட்டது. அப்போது உலையைக் குளிர்விப்பதற்காக ஏராளமான நீர் பயன்படுத்தப்பட்டது.

அணுக்கதிர் வீச்சால் பாதிக்கப்பட்ட இந்த நீர் மிகவும் ஆபத்தானது. இந்த தண்ணீர் வெளியேறினால் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் ஜப்பான் அதிகாரிகள் மிகவும் அலட்சியமாக இருந்து விட்டனர். ஆரம்பத்திலேயே இந்தத் தண்ணீர்க் கசிவு ஏற்படாமல் தடுத்து நிறுத்தி இருக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜப்பான் அரசு மிகவும் மெத்தனமாக செயற்படுகிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மனைவிக்கு பயந்து புகைபிடிப்பதை நிறுத்திய ஒபாமா



நியூயோர்க், செப்.26
மனைவிக்குப் பயந்தே புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிட்டேன் என்று கூறியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

நியூயோர்க்கில் நடைபெற்ற மக்கள் குழு சந்திப்பின்போது, ஐ.நா. சபை அதிகாரி மைனா கியை ஒபாமாவிடம், "உங்களுக்குப் புகை பிடிக்கும் பழக்கம் இருக்கின்றதா?" என்று கேட்டார்.

அதற்குச் சிரித்தவாறு பதிலளித்த ஒபாமா, "நான் எனது மனைவிக்குப் பயந்து புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிட்டு விட்டேன்" என்று கூறினார்.

இதுகுறித்து மிச்செல் ஒபாமா, "எனது கணவர் வெற்றிகரமாக புகைப்பழக்கத்தில் இருந்து விடுபட்டு விட்டார். அதற்கு எமது மகள்கள்தான் முக்கிய காரணம்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். (ற)

## போ சிலாய் மேன்முறையீடு

பீஜிங், செப்.26
ஊழல் குற்றச்சாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சீன அரசியல் தலைவரான போ சிலாய் அதுகுறித்து மேன்முறையீடு செய்துள்ளார்.

தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், மேன்முறையீடு செய்வதற்கு 10 நாள்கள் கால அவகாசம் வழங்கியிருந்தது.

இந்தநிலையிலேயேயே போ சிலாய், இந்தத் தண்டனை சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்து நேற்று முன்தினம் மேன்முறையீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# காணாமற்போனோர் முறைப்பாடுகளை எழுத்துமூலம் உடன் அனுப்பிவையுங்கள்

## ஜனாதிபதி ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு.செப்.26
காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை எழுத்து மூலம் அனுப்பி வைக்குமாறு காணாமற்போனோர் தொடர்பாக விசாரிப்பதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் காணாமற்போனோரது உறவினர்கள் இந்த முறைப்பாடுகளை ஆணைக் குழுவுக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும் என்று ஆணைக்குழுவின் செயலர் எச். டபிள்யூ. குணதாஸ அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியான மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கும் அறிக்கை இடுவதற்கும் இந்த ஆணைக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அ) 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதியில் தொடங்கி 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையில் வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் வசித்து வந்த ஆள் எவரும் தம்மிச்சைக்கு மாறாக தமது வசிப்பிடங்களை விட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்களா? அல்லது காணாமற் போயுள்ளார்களா?

ஆ) அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது காணாமற்போனதாக நிரூபிக்கப்பட போதுமான சான்றுகள்

இ) அவ்வாறு எடுத்துச்செல்லப்பட்ட அல்லது காணாமற் போன ஆள்கள் யார்?, அத்துடன் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படும் ஆள்கள் தற்போது இருக்கின்ற இடங்கள்.

ஈ) மேற்சொன்ன எடுத்துச் செல்லல்கள் அல்லது காணாமற்போதல்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய ஆள் அல்லது ஆள்கள் குறித்த ஒரு கருத்தோட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள துணிந்த நம்பகத் தகுந்த காரணிகள் அல்லது சான்றுகள்.

உ) அவ்வாறு பொறுப்புக்கூற வேண்டும் எனத் தீர்மானிக்கப்படும் ஆள் அல்லது ஆள்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள்

ஊ) அவ்வாறான செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள்.

எ) அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது காணாமற்போனதாகக் குறிப்பிடப்படும் ஆள்களின் பெற்றோர்களுக்கு, வாழ்க்கைத் துணைக்கு, தங்கி வாழ்வோருக்கு அரசின் ஒருபொறுப்பு என்ற வகையில் அளிக்கப் படவேண்டிய நிவாரணங்கள் எவையும் இருப்பின் அத்தகைய நிவாரணங்கள்

மேற்குறிப்பிட்ட ஒரு விடயமோ, அல்லது சில விடயங்களோ அடங்கலான ஏதாவது முறைப்பாடுகள் சிங்களத்திலோ, தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ ஆணைக் குழுவின் செயலாளருக்கு பின் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புவதற்கு யாராவது தனிப்பட்டவருக்கோ அல்லது குழுவினருக்கோ அல்லது அமைப்புக்களுக்கோ அழைப்பு விடுக்கப்படுகின்றது (பதிவுத் தபாலில் அனுப்புதல் மிகவும் பொருத்தமானது) சகல முறைப்பாடுகளும் 31.10.2013 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ காணாமற்போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழு, இல.9/8, சுரனிமல இடம்,கொழும்பு-06 என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இதுதொடர்பான மேலதிக தகவல்களை 011 2199944 என்னும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்

ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் யாவும் பரிசீலனைசெய்யப்பட்டபின்னர் உரிய நபர், நபர்கள் அல்லது அமைப்புக்கள் வாய்மூல விசாரணைகளுக்காக அழைக்கப்படுவதுடன் முறைப்பாட்டாளர்களின் வசதிக்கு ஏற்ப மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், கிராமசேவையாளர் அலுவலகம் அல்லது வேறு பொருத்தமான ஓர் இடத்தில் விசாரணை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான திகதி மற்றும் இடம் என்பன உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

இரகசியமான முறையில் சாட்சியம் அளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக் குழுவுக்கு பொருந்தும் என்பதை தெரிவிக்கின்றேன். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அரச சாஹித்திய விழா செப்ரெம்பர் 30 இல்

கொழும்பு,செப்.26
2013ஆம் ஆண்டுக்கான அரச சாஹித்திய விழா எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையிலுள்ள கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக நடத்தப்படவுள்ள இந்த விழாவில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த வைபவத்தின்போது 2012 ஆம் ஆண்டு இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவந்த சிறுகதைகள், நாவல்கள், உண்மைச் சம்பவங்கள் பற்றிய கதைகள், பாடல்கள், நாட்டியம், இளைஞர் - சிறுவர் ஆக்கங்கள் , மொழிபெயர்ப்புகள் மற்றும் ஏனைய விடயங்களில் சிறப்பான ஆக்கங்களை உருவாக்கியவர்களுக்கு சாஹித்திய விருதுகள் வழங்கப்படும்.

> **உள்நாட்டு சிங்கள, தமிழ், ஆங் கிலப் பத்திரிகைகளில் சிறப் பாகக் கடமையாற்றிய மூவருக்கும் விருதுகள் வழங்கப்படும்.**

உள்நாட்டு சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் சிறப்பாகக் கடமையாற்றிய மூவருக்கும் விருதுகள் வழங்கப்படும். அதற்கமைய இந்த முறை இந்த மூன்று விருதுகளும் பேராசிரியர் வினி விதாரண (சிங்களம்), கந்தையா நடேசன்(தமிழ்), எட்வர்ட் ஆரிய தாச(ஆங்கிலம்) ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளன. (ச)

# புகைவிடும் வாகனங்களை துரத்திப் பிடிக்க நடவடிக்கை



கொழும்பு,செப்.26
கொழும்பிலும் அதன் அயல் பிரதேசங்களிலும் ஓடும் வாகனங்கள் வெளியிடும் புகையைப் பரிசோதனை செய்வதற்காக அந்த வாகனங்களைப் பின்தொடர்ந்து சென்று பரீட்சிக்கும் அதிரடி முறையொன்றை மத்திய சுற்றாடல் அதிகாரசபை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

முன்னால் செல்லும் வாகனம் வெளியிடும் புகையை பின்னால் தொடரும் அதிகாரசபையின் வாகனத்தில் இருந்தவாறே நவீன கருவிமூலம் பரீட்சிக்கக் கூடிய வசதி இருக்கின்றது.

இந்த நவீன கருவி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கியுள்ள வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

முதலாவது கட்டமாக இந்தப் பரீட்சார்த்தம் மாலபே சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மாவத்தையில் ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து கொழும்பு நகரில் வெள்ளவத்தை, மகரகம, களனி ஆகிய பகுதிகளில் இந்த அதிரடி பரீட்சார்த்தம் நடைபெறவுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்தார். (ச)

# இரண்டு லொறிகளுடன் மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் சாவு

கொழும்பு.செப்.26
அவிஸாவளை கொஸ்கம சலாவ பகுதியில் இரண்டு லொறிகளும், மோட்டார் சைக்கிளொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில், மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு லொறிகளும் ஒன்றோடு ஒன்று மோதியுள்ளதுடன்,அதன் பின்னர் மோட்டார் சைக்கிளும் லொறிகளுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் கொழும்பில் இருந்து ஹப்புத்தளை நோக்கி பயணித்த லொறியின் உதவியாளரே உயிரிழந்துள்ளார். ஹப்புத்தளையைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

**விற்பனைக்கு**

புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடர்புலத்தில் கடைக் கட்டடத்துடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(32001)(45.3.6) தொ.பே.077 658 2818

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre**
(சியோன் தேவாலயத்துக்கு அருகில்)
Spoken English With Grammar
சிங்களம்
Short hand Typing
ESOL, IELTS போன்ற வகுப்புகளுக்கு ஆயத்தம் செய்து விடல் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 27.09.2013
ஆசிரியை: இ.லோகநாயகி T.P: 077 6779 340
(11963.63.4)
பாட முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.

**பெயர்மாற்றம்**

வரணி குடமியனைச் சேர்ந்த ஆறுமுகம் அம்பிகாபதி என்னும் நான் எனது பெயரை இன்றிலிருந்து (26.09.2013) ஆறுமுகம் அம்பிகாநிதி என பெயர்மாற்றம் செய்து கையொப்பமிடுவேன் என அனைவருக்கும் அறியத்தருகிறேன்.
ஆ.அம்பிகாநிதி
(29844)(4.3)

# வெலிக்கடை சிறை மோதல் அறிக்கை அமைச்சரிடம்

கொழும்பு.செப்.26
வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பான அறிக்கை சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, செவ்வாய்க்கிழமை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது என்று சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலர் ஜி.எஸ். விதானகே தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கான 17 யோசனைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். கடந்த வருடம் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி ஏற்பட்ட மோதல் சம்ப வத்தில் கைதிகள் உள்ளிட்ட சிறைச் சாலை உத்தியோகத்தர்கள் சில ரும் உயிரிழந்தனர்.

சிறைச்சாலை அதிகாரிகளும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் வெலிக்கடை சிறைச்சாலையை சோதனையிடச் சென்ற சந்தர்ப்பத்திலேயே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)




உலகத்தரம் வாய்ந்த மூன்று கணக்கீட்டு கற்கை நெறிகளில் ஒன்றை யாழ் நகரிலேயே தொடர விரும்புகிறீர்களா?

CA
ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS
CIMA

K-AIMS
We Make You Progress Everyday

No. 147 - 2/2,
K.K.S Road, [top of DFCC Bank]
Jaffna
0773722104/0212219422

No 35-1/1, Upatissa Road,
Colombo 04
0772 555 814

புதிய பிரிவுகள் 1st October முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்
(32026)(10,3)

## மூத்த எழுத்தாளர் தெணியானுக்கு 'சாகித்திய ரத்னா' விருது

அச்சுவேலி, செப். 26
அரச இலக்கிய விழாவில் இந்த வருடம் மூத்த எழுத் தாளர் 'தெணியான்'' சாகித் திய ரத்னா விருது வழங்கி கௌர விக்கப்படவுள்ளார்.
அரச இலக்கிய விழாவில் மொழி ரீதியாக அறிஞர்கள் கௌர விக்கப்படுவதுண்டு.
இந்த வருடம் மூத்த தமிழ் எழுத்தாளர் தமிழ்மொழி ரீதி யில் கௌரவிக்கப்படவுள்ளார்.
வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட தெணியான் நூற்றுக் கணக்கான தமிழ்ச் சிறுகதை களையும் பல தமிழ் நாவல் களையும் எழுதியுள்ளார். ஆசிரி யர்மற்றும்அதிபராகப்பணியாற்றி ஓய்வு பெற்றவராவர். (வ-11)

## வினைத்திறன் காண் தடைப் பரீட்சை பிற்போடல்

யாழ்ப்பாணம், செப்.26
பொது சுகாதார பரிசோதகர் சேவை தரம்- 111 இல் பணி புரிவோருக்கு நடத்தப்பட விருந்த வினைத்திறன்காண் பரீட்சை மீண்டும் பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. குறித்த உத்தியோகத் தர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சை கடந்த 7.8 ஆகிய திகதிகளில் நடத்தப்படு மென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.
செப்ரெம்பர் மாதத்தில் மாகாண சபைத் தேர்தலுக்கான ஏற் பாடுகள் நடைபெறவிருந்த தால் எதிர்வரும் 28, 29 ஆகிய திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டிருந்தது.
எதிர்வரும் 29 ஆம் திகதி மொழித் திறன் (சிங்களம்/ தமிழ்) பரீட்சை நடை பெறுவதாக அறிவிக்கப்பட் டுள்ளதால் வினைத்திறன் காண் பரீட்சைகள் பிறிதொரு தினத்தில் நடத்தப்படுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மொழித் திறன் பரீட்சை எதிர் வரும் 29 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடை பெறவுள்ளதாக குறிப்பிடத் தக்கது. (வ-9)



### மாகாண உறுப்பினரான ஊழியர்களுக்கு

# விடுவிப்புக் காலத்தில் சம்பள உயர்வு இல்லை

அச்சுவேலி, செப்.26
அரசியல் உரிமை உள்ள அரச ஊழியர்கள் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு சம் பளமற்ற லீவில் மாகாண சபை உறுப்பினர் கடமைக்கு விடுவிக்கப்பட்ட காலப்பகு திக்கு வருடாந்த சம்பள ஏற்றத் தைப் பெற முடியாது என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.
அரசியல் உரிமை உள்ள அரச ஊழியர்களின் மாகாண சபை உறுப்பினர் கால பணிநிலை தொடர்பாக 2013 ஜுலை 25 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர் மானத்தின் அடிப்படையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல் கள் அமைச்சு 19/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.
சுற்றறிக்கையில் மேலும் தெரி வித்துள்ளதாவது:
199.04.22 ஆம் திகதிய 01/ 89/01 ஆம் இலக்க சுற்ற றிக்கை கவனத்துக்கு உட் படுத்தி புதிய 19/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையை கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது.
அரசியல் உரிமை உள்ள அரச ஊழியர்கள் அரச சேவையில் இருந்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக சம்பளமற்ற விடுப் பில் இருந்து மாகாண சபை உறுப்பினர் கடமைக்காக சம்பள மற்ற லீவில் விடுவிக்கப்பட்ட பின்னர் மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடைந்து மீளவும் கடமையில் இணைந்து சேவையாற்றும் போது, அல் லது அரச சேவையில் இருந்து ஓய்வுபெறும்போது வருடாந்த சம்பள ஏற்றத்தை நிலுவை யாக பெறவோ அல்லது வரு டாந்த சம்பள ஏற்றத்தைச் சேர்த்து ஓய்வுக் கொடுப்பன வைப் பெற் றுக் கொள்ளவோ முடியாது.
சம்பந்தப்பட்ட ஊழியர் மாகாண சபை உறுப்பினர் பதவிக்காக கொடுப்பனவற்ற லீவு கோரிய போது பெற்றிருந்த மாதாந்த கொடுப்பனவு மற்றும் சலுகை நிலையில் இருந்தே கொடுப்பன வற்ற லீவுக் காலத்தை தவிர்த்து கொடுப்பனவு பெறுவது அல் லது ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது.
இந்த நடைமுறை 2013. 07.25 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருவதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

> இந்த நடை முறை 2013. 07.25 ஆம் திகதியில் இருந்து நடை முறைக்கு வருவ தாக வும் தெரி விக்கப் பட்டுள்ளது



## லயன்ஸ் ஆளுநர் சாவகச்சேரியில்

தென்மராட்சி,செப்.25
சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ சாவகச் சேரி லயன்ஸ் கழக அலுவ லகத்துக்கு வருகை தந்தார்.
கழகத் தலைவர் லயன் பி.தளிர் ராஜ் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் கழகத்தின் பல்வேறு நலத்திட்டங்களை மாவட்ட ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.
வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளையும், தென் மராட்சி பிரதேச குடும்பநல சேவையாளர்கள் கர்ப்பிணி களுக்கு நடத்தப்படும் இரத்தப் பரிசோதனை கருவிகளை உத்தி யோகத்தர்களிடமும் கையளித் தார்.
இதேவேளை மாவட்ட ஆளு நர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ சாவகச்சேரி லயன்ஸ் கழகத் துக்கு ஒரு தொகுதி கண் வில்லை களையும் கையளித்தார். (வ-9)

# ஒருவார காலம் டெங்கு தடுப்பு

### பருவ மழைக்குப் பின்னர் தீவிரம்

யாழ்ப்பாணம், செப். 26
பருவகால மழைக்குப் பின்னர் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதால் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தும் நோக்கில் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான ஒருவார காலப் பகுதியை டெங்கு கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தி பணி கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
எனவே ஆள்கொல்லி டெங்கு நோயிலிருந்து ஒவ் வொரு வரையும் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட வருமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.
பிரதேச செயலாளர் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிர தேசத்திலுள்ள நிறுவனங்களையும் கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் திட்ட மிடல் வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுதல் வேண்டும்.
கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை கிராம சேவகர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பொது சுகாதார பரிசோதகர்கள் இதற்கு ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட வேண்டும்.
சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஒவ்வொன் றும் 7 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கு ஒவ்வொரு நாள் ஒதுக்கப்பட வேண் டும். நிறுவனங்கள், வைத்தியசாலைகள், பொது இடங்கள், வணக்கத் தலங்கள், வர்த்தக நிலை யங்கள், வீடுகள், பராமரிப்பற்ற காணிகள் நுளம்புக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்படல் வேண்டும்.
பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புக்களின் தொண் டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தி யோகத்தர்கள் உள்ளிட்ட பல குழுவினர் ஒவ் வொரு இடங்களுக்கும் சென்று பார்வையிடுவர்.
டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள், பங்குபற்றும் உத்தியோகத்தர் களின் விவரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தினமும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று பணிமனை தெரிவித்துள்ளது. (வ-4-9)

> “ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஒவ் வொன் றும் 7 வலயங் களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத் துக்கு ஒவ்வொரு நாள் ஒதுக்கப்பட வேண்டும்.

## இளையோர் நாடகவிழா சனியன்று பல்கலையில்

யாழ்ப்பாணம், செப்.26
செயற்றிறன் அரங்க இயக் கத்தின் ஏற்பாட்டில் ''நாமும் நமக்கோர் நலியாக் கலையு டையோம்'' என்னும் தொனிப் பொருளிலான இளையோர் நாடக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கும் யாழ்ப் பாணம் பல்கலைக்கழக கைலா சபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளது.
செயற்றிறன் அரங்க இயக்க இயக்குநர் தே.தேவானந்தின் எழுத்துரு, நெறியாள்கை களில் உருவாக்கப்பட்ட 5 நாடகங்கள் மேடையேற்றப்பட வுள்ளன. நாடக ஆற்றுகை களாக 'கருப்பைத் தறுக் கணிப்பு', 'வெப்பக்குடுவை', 'ஈசி லீசிங்' போன்ற நாடகங் களும் தனி மனித அரங்காற் றுகைகளாக 'கடலில் கிடந்த பெருமூச்சு' 'நல்ல தங்காள்' போன்றவையும் இடம்பெற வுள்ளன.
இதில் நாடக ஆர்வலர்கள், கலைஆர்வலர்கள்அனைவரும் கலந்துகொள்ளலாம். (வ-ரி)

## பரீட்சைக்குத் தயாராகும் மாணவருக்கு சுற்றுலாவா?

### பெற்றோர் கவலை

யாழ்ப்பாணம், செப். 25
பரீட்சைக்குத் தயாராக வேண் டிய மாணவர் களை அகில இலங்கைக் கல்விச் சுற்றுலா வென பாடசாலைகள் அழைத் துச் செல்வது குறித்து பெற் றோர் கவலை தெரிவித்தனர்.
யாழ்.மாவட்டப் பாடசாலை களில் அண்மைக் காலமாக கல்விச் சுற்றுலாவென பாட சாலை நிர்வாகத்தினர் மாண வர்களை அழைத்துச் செல் கின்றனர்.
இன்னும் இரண்டு மாதங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பிக்கவுள்ள நிலையில் தரம் 11 இல் கற்கும் மாண வர்களை நிர்வாகத்தினர் பலவந்தமாக சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்கின்றனர்.
சுற்றுலாவில் பங்குபற்றும் மாணவர்களிடம் போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக் கென பெருமளவு நிதி கோரப் படுவதாகவும் , நிதியை செலுத்த முடியாத மாணவர் கள் விரக்தி நிலையடை வதாகவும் பெற்றோ ரால் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சேதமடைந்து வருகின்றன பதிவுத் தபால்கள்

### பொதுமக்கள் விசனம்

கொழும்புத்துறை,செப்.26
யாழ்.பிரதம தபாலகத்திலி ருந்து பொதுமக்களுக்கு அஞ் சல் செய்யப்படும் பதிவுத் தபால் கள் பிரிக்கப்பட்டு சேதம டைந்த நிலையில் கிடைப்ப தாக மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.
குறிப்பாக வெளிமாவட்டங் களில் இருந்து வரும் பதிவுத் தபால்களின் மேலுறைகள் கிழிவடைந்து அவற்றில் உள்ள சில தஸ்தாவேஜுக்கள் காணா மற் போனநிலையில் தபால் ஊழியர்களால் விநியோகிக் கப்படுகின்றன.
அண்மையில் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு தொடர் பான அழைப்புச் சான்றிதழ் பதிவுக் கடிதம் முற்றாக பிரிக் கப்பட்ட நிலையில் அதனுள் இருந்த சாமஸ்ரீ அடையாள அட்டை, விண்ணப்பப் படிவம் என்பன தொலைந்த நிலை யில் உரியவரிடம் ஒப்படைக் கப்பட்டதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.
குருநகர்ப் பகுதிக்கு அனுப் பப்பட்ட இந்தப் பதிவுத் தபால் வீடுகண்டுபிடிக்கமுடியவில்லை என சேதமடைந்த நிலையில் மீண்டும் அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்துக்கு அனுப்பப்பட்டு அவை புதிதாக தயாரிக்கப்பட்டு திரும்பவும் அனுப்பப்பட்டது. அதுவும் இவ் வாறு சேதமடைந்த நிலையில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.
இது தொடர்பாக உரியவர்கள் தபாலகத்துக்குச் சென்று கேட்ட போது பொறுப்பற்ற விதத்தில் அசமந்தப் போக்கான பதில் தரப்படுவதாக விசனம் தெரிவிக் கப்படுகிறது. (வ-135)

## உள்ளூராட்சி வார நிகழ்வு ஒக்ரோபர் 9 இல் ஆரம்பம்

### சாவகச்சேரி நகர சபைத் தலைவர் தெரிவிப்பு

தென்மராட்சி, செப். 26
சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறவுள்ளதாக நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.
கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த உள்ளூராட்சி வார நிகழ்வுகளை, மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்ற பகுதிகளின் உள்ளூராட்சி சபை களுக்கு ஒக்ரோபர் மாதத்தில் நடத்துமாறு உள் ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச் சால் அறிவிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி வார நிகழ்வுகளில் தினம் ஒரு நிகழ்வாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார்.
நடமாடும் சேவைகள், வருமான மேம்பாடு, சுகாதாரம் மற்றும் துப்புரவு ஏற்பாடு மக்கள் பயன்பாடு, சுற்றாடல் மற்றும் மரம்நடுகை, கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி, விளையாட் டுப் போட்டிகள் ஆகியவை இந்த வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.
இந்த வாரத்தில் சிரமதானப் பணிகள், உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம், பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் புத்தகக் கண்காட்சி, விளையாட்டுக் கழகங்கள், முன்பள்ளி சிறார்கள், அலுவலக உத்தியோகத் தர்கள் ஆகியோருக்கான விளையாட்டுப் போட்டி கள், மலர் வெளியீடு, போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் வழங்கல் போன் றவை இடம்பெறுமெனவும் தெரிவித்தார். (வ-9)


# மதுப் பாவனையைத் தடுப்பதற்கு விழிப்புணர்வுத்திட்டம்

மதுபானப் பாவனையைத் தடுப்பதற்கான ஆத்மீக விழிப்புணர்வு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு,செப்.26
காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில், சமுர்த்திப் பயனாளிகளுக்கு மதுபானப் பாவனையை தடுப்பதற்கான ஆத்மீக விழிப்புணர்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், காத்தான் குடி பிரதேச செயலக சமுர்த்தி தலைமை யக முகாமையாளர் இ.குணரட்னம், வலய முகாமையாளர் ஏ.எல்.சுல்மி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
மதுபானப் பாவனையைத் தடுப்பதற்கான ஆத்மீக விழிப்புணர்வு வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



# அடிப்படை வசதிகள் இன்றி வாழ்கின்றனர் விதவைகள்



திருகோணமலை,செப்.26
திருகோணமலை, மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூதூர் தெற்கு பிரதேசத்திலுள்ள கிராமங்களில் கணவனை இழந்த பெண்கள் அடிப்படை வசதிகளின்றி அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.
இந்தப் பிரதேசத்திலுள்ள கிராமங்களான பாலத்தடிச் சேனையில் 28 விதவைகளும், ஸ்ரீ நாராயணபுரத்தில் 28 பேரும், பட்டித்திடலில் 48 பேரும், மணற்சேனையில் 52 பேரும், மேன் காமத்தில் 54 பேரும், பாரதி புரத்தில் 126 பேரும் வாழ்ந்து வருகின்றனர்.
இந்த எண்ணிக்கைக்கு அமைய பாரதிபுரம் கிராமம் மிகவும் மோசமாக கடந்த கால போரால் பாதிக்கப்பட்டுள்ளது என்று மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ.இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.
இந்தக் கிராமத்திலுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் எந்த வித செயற்பாடும் இன்றி காணப்படுகின்றன என்று அவர் கூறினார். அதனால் இந்தக் கிராமத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள் கூட தடைப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

# கூட்டமைப்பின் வெற்றி கிழக்கு தமிழர்களுக்கு கைகொடுக்க வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை



வடமாகாண மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை வேகமாக முன்னெடுக்கும் களமாகவும் வடமாகாண சபை அமைய வேண்டும்.

திருகோணமலை,செப்.26
வடமாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றியினை பெற்று ஆட்சி அமைக்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கிழக்கு மாகாண தமிழர்களுக்கும் கைகொடுக்க வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
வலியையும் துயரத்தையும் அனுபவித்து இன்று வரை அதன் வடு மறையாமல் வாழ்ந்து வருகின்றனர் வட மாகாண தமிழ் மக்கள். எனினும் இணக்க அரசியல், அபிவிருத்திகள், சலுகைகள், பேரம் பேசுதல் போன்ற மாயைக்குள் மறைந்து விடாமல் எதற்கும் அஞ்சாமல் உணர்வு பூர்வமாக ஒன்றுபட்டு செயற்பட்டதன் விளைவே தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்த அமோக வெற்றி.
வடக்கு மக்களின் அரசியல் விழிப்புணர்வு அச்சமற்ற ஒன்றிணைந்த அர்ப்பணிப்புடனான செயற்பாடு ஆகியவற்றை கிழக்கு தமிழர்கள் பெருமையுடன் கௌரவிக்கின்றோம்.
இந்த வெற்றியின் பயன் வெறுமனே தேர்தல் வெற்றியாக மட்டும் அமையாமல் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை அடைவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையினை உருவாக்கியுள்ள வெற்றியாக அமைய வேண்டும்.
வடமாகாண மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை வேகமாக முன்னெடுக்கும் களமாகவும் வடமாகாண சபை அமைய வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# அழகியல் கற்கை டிப்ளோமா பட்டத்துக்குச் சமமானதல்ல

மட்டக்களப்பு,செப்.26
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவனத்தில் சித்தி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ், பல்கலைக்கழகங்களின் பட்டச் சான்றிதழுக்கு சமமானது அல்ல.
இவ்வாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்த தீர்மானம் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவனத்தில் டிப்ளோமா சான்றிதழ்கள் பெற்றவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
ஏற்கெனவே இசை மற்றும் நடனம் உட்பட அழகியல் கல்வி ஆசிரியர்களில் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவனத்தில் 4 வருட டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் கல்வி அமைச்சின் 12.08.2009 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பட்டதாரி ஆசிரியர்களாக உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்கள்.
20.04.1998 ஆம் ஆண்டு தொடக்கம் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நெறி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருந்த ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலரினால் உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.
இந்தப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேலதிக செயலரின் அறிவித்தலால், இந்த நியமனம் ரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)




சிறுவயதினரின் நீரிழிவு நோய் எதிர்ப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் விழிப்புணர்வு கலை நிகழ்வு இடம்பெற்றது. (ச-40)

# மட்டக்களப்பில் சிறு பராய கர்ப்பம் அதிகரிப்பு

மட்டக்களப்பு,செப்.26
மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 வயதுக்கும் குறைவான இளம் பெண்கள் கர்ப்பம் அடைவது அதிகரித்துள்ளது என்று காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.நசிர்தீன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த ஆண்டு குடும்ப சுகாதார அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் புள்ளி விவரப்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் வயது குறைந்த அதிலும் 20 வயதுக்கும் குறைவான பெண்கள் கர்ப்பம் அடைவது அதிகரித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு 10.6 வீதமான 20 வயதுக்கும் குறைவான பெண் கர்ப்பம் அடைந்திருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
வயது குறைந்த இளம் பெண்கள் கர்ப்பம் அடைவதால் உள மற்றும் உடல் ரீதியான பாதிப்புக்களுக்குள்ளாகின்றனர். அத்தோடு பொருளாதார ரீதியான பாதிப்பையும் அவர்கள் சந்திப்பதானது உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. என்றார். (ச)

# நாச்சியாரின் சிலையை உடைத்த நபர் மாட்டினார்



மட்டக்களப்பு,செப்.26
மட்டக்களப்பு,ஆரையம்பதி பிரதேசத்தின் பிரதான வீதியிலுள்ள உலக நாச்சியாரின் சிலையை உடைத்த சந்தேகத்தின் பேரில் ஒருவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பாதுகாப்பு ரோந்து கடமையில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வீதியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார் குறித்த உருவச் சிலையை சேதப்படுத்தியவரை கைது செய்துள்ளனர்.
இந்தச் சந்தேகநபர் ஓட்டமாவடி பிரதேசத்தை சேர்ந்தவர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சிலையின் கைப்பகுதி சேதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆசிரியர் சங்க தேசிய மாநாடு திருமலையில்

மாங்குளம்,செப்.26
இலங்கை ஆசிரிய சங்கத்தின் 56 ஆவது தேசிய மாநாடு நாளை வெள்ளிக்கிழமை திருகோணமலை மாதனை அம்பாள் வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த மாநாட்டில் இலங்கையில் உள்ள அனைத்து இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர், செயலர்களும், ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த மாநாட்டில் ஆசிரியர்களின் நலன்கள், கல்வி அபிவிருத்தி தொடர்பான பல முடிவுகளும் எடுக்கப்படவுள்ளதால், அனைத்து ஆசிரியர்களையும் தமது மாவட்ட தலைவர், செயலர்களுடன் கலந்து கொண்டு மாநாட்டுக்கு வருகை தருமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (ச-422)


# உரிமைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்தது தேர்தல் முடிவு

## துரைரெட்ணசிங்கம் கூறுகிறார்



திருகோணமலை,செப்.26
தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் உரிமைப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் ஆணையை வடமாகாண சபைத் தேர்தல் மூலம் எமது மக்கள் வழங்கியுள்ளனர்.
இந்த ஜனநாயகக் குரலை அரசு மதித்து, ஏற்றுக் கொள்ளக்கூடிய நியா யமான தீர்வைத் தர முன்வர வேண்டும்.
இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவரும், மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
அபிவிருத்தியும் இணக்கப்பாடும் மட்டும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் அல்ல என்பது இத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தத் தேர்தல் மூலம் மக்கள் நாட்டிற்கும் சர்வதேசத்துக்கும் மிகத் தெளிவான செய்தியை தெளிவாகக் கூறியுள்ளனர்.
இந்தத் தேர்தல் முடிவுகள் கிழக்கு மாகாணத்திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.
எங்கள் ஜனநாயக ஆணையை மதித்து எமது தலைவர்கள் உறுதியுடனும் இலட்சியத்துடனும் செயற்படுவார்கள்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# ஐ.நா. பொதுச் செயலர்- மஹிந்த சந்திப்பு



கொழும்பு.செப்.26
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனுக்கும் இடையில் சந்திப்பு செவ்வாய்க்கிழமை ஐ.நா தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்பின்போது அவர்கள், இலங்கையின் போருக்குப் பின்னரான நிலைமை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் நாட்டின் ஒத்துழைப்பு தொடர்பான கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.
இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு இன்னும் முழுமையான அணுகுமுறைகள் தேவை என்று ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் , ஜனாதிபதி மஹிந்தவிடம் வலியுறுத்தியுள்ளார்.
இந்தச் சந்திப்பின்போது, வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன, பதில் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.
ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுடன், ஐ.நாவின் அரசியல் விவகார தலைவர் ஜெப்ரி பெல்ட்மன், மனித உரிமைகள் அதிகாரி ஐவன் சிமோனோவிக் ஆகியோர் பங்கேற்றனர். (ச)

## விவாகரத்து வழக்கை விசாரிப்பதற்கு புதிய நீதிமன்றம்

கொழும்பு.செப்.26
விவாகரத்து வழக்குகளை விசாரிக்கவென புதிய நீதிமன்றத்தினை செவ்வாய்க்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றின் 7ஆம் இலக்க அறையில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் திறந்து வைத்துள்ளார்.
இந்த நீதிமன்றத்தை திறந்து வைத்து அவர் உரையாற்றியபோது: நீதிமன்றத்துக்காக அரசு பொது மக்களின் பணத்தை செலவிடுவதால் அந்தப் பணத்தை பயன்படுத்தி மக்களுக்கு முடிந்தளவு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
விவாகரத்து வழக்குகளை விசாரிக்க பல காலம் எடுப்பதால் குழந்தைகள் குறித்து பிரச்சினைகள் எழுகின்றன. அதனால் விவாகரத்து வழக்குகளை விரைவில் விசாரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் புதிய நீதிமன்றம் திறக்கப்பட்டுள்து.
விவாகரத்து வழக்கு தாமதமடைவதால் சம்பந்தப்பட்டவர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.- என்றார். (ச)

## வாக்குச் சீட்டுகள் மீட்பு; விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு.செப்.26 .
வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயல்பட்ட புத்தளம் சென். அன்று வித்தியாலயத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உத்தரவிட்டுள்ளார்.
பாடசாலையின் கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த மூன்று பொலித்தீன் உறைகளில் இந்த வாக்குச் சீட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தால் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதி காரிக்கும் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பில் பிரதேச மக்கள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி, உதவி தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் ஆராயும் பொருட்டு தேர்தல்கள் ஆணையாளர் அந்த இடத்திற்கு சென்றுள்ளார்.
பொதுவாக வாக்கு சீட்டுக்கள் எண்ணும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் அவை தேர்தல்கள் செயலகத்துக்கு எடுத்து வரப்படுவது வழமையாக உள்ள போதிலும், இவ்வாறு வாக்கு சீட்டுக்கள் மத்திய நிலையத்தில் தேங்கியிருந்தமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு, மத்திய, வடமேல் மாகாணத் தேர்தல்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கூட்டமைப்பின் நகர்வுகள் கண்காணிக்கப்படுகின்றன

### பொது பல சேனா எச்சரிக்கை



கொழும்பு.செப்.26
"வடமாகாணசபையைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அடுத்தகட்ட நகர்வுகள் இலங்கை அரசின் ஒழுங்குப் பத்திரத்துக்கு அமையவா அல்லது இந்தியா, சர்வதேசத்தின் ஒழுங்குப் பத்திரத்துக்கு அமையவா என்பதைக் கவனமாக அவதானிக்கிறோம்" என்று பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் வண.கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அடுத்த கட்ட நகர்வைப் பொறுத்தே தமது நடவடிக்கைகள் அமையும் என்று அவர் கூறினார்.
வடமாகாணசபையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

> வெற்றி பெற்ற பின்னர் கூட்டமைப்பினர் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை நாம் பொறுத் திருந்து பார்க்க வேண்டும்.

வடமாகாணசபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கைப்பற்றும் என்பது நாம் அறிந்ததே. இந்த நிலை யில் வெற்றிபெற்ற பின்னர் கூட்டமைப்பினர் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் முடியும்வரை இனவாதத்தை முதன்மைப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரங்களை முன்னெடுத்தது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச-சி)

## பண மோசடியில் ஈடுபட்டோர் கைது

கொழும்பு.செப்.26
அரசில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக கூறி, பண மோசடியில் ஈடுபட்ட இருவர் அவிசாவளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மிரிஹான விசேட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றுக்கு அமைய, அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர்களிடமிருந்து நியமனக் கடிதங்கள், அடையாள அட்டைகள், இறப்பர் முத்திரைகள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.
தொழில் வாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி 5 பேரிடமிருந்து 12 லட்சத்துக்கு அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச)

## ஜப்பானின் 3 கப்பல்கள் இலங்கை துறைமுகத்தில்



கொழும்பு.செப்.26
ஜப்பானின் கரையோர சுய பாதுகாப்பு படையினரின் மூன்று கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இந்தக் கப்பல்கள் நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
குசிமா டிவி-3508, சிராயுகி டிவி-3517, இஸோயுகி டிடி -127 ஆகிய கப்பல்களே இலங்கை வந்துள்ளன. இதில் கசிமா என்ற பயிற்சிக் கப்பல் 143 மீற்றர் நீளத்தை கொண்டது.
சிராயுகி என்ற நாசகாரி கப்பல் 130 மீற்றர் நீளத்தை கொண்டது. இஸோயுகி என்ற நாசகாரி கப்பல் 130 மீற்றர் நீளத்தை கொண்டது.
இந்தக் கப்பல்கள் இன்று வியாழக்கிழமை வரை இலங்கையில் தரித்திருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## எதிர்ப்புகள் எவ்விதத்தில் வந்தாலும் சிகரெட் ஒழிப்பு போராட்டம் தொடரும்

### சுகாதார அமைச்சர் மைத்திரிபால சவால்



கொழும்பு.செப்.26
எவ்வித எதிர்ப்புகள் வந்தாலும் சிகரெட் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்வேன். மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு இந்தப் போராட்டத்தில் எனது உயிரையும் அர்ப்ப ணிக்கத் தயாராக இருக்கிறேன்.
இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சிகரெட் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்களை விளக்கும் வகையிலான படங்களை சிகரெட் பெட்டிகளில் பிரசுரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதனை சீர்குலைக்க முயற்சி மேற்கொண்டால் அது தேசியப் போராட்டமாக உருவெடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.
இந்தப் போராட்டத்துக்கு தலைமை தாங்க எனது வாழ்வையும் அர்ப்பணிக்க தயா ரெனக் கூறிய அமைச்சர், சிகரெட் எதிர்ப்பு போராட்டத்தை எந்தவொரு சக்தியும் நிறுத்த இடமளிக்க மாட்டேன் என்று அவர் கூறினார்.
நாட்டின் அப்பாவி மனிதர்கள் சிகரெட் கொலைஞர்களிடமிருந்து பாதுகாப்பு பெற வேண்டும் என்பதே எனது எண்ணமாகும். சிகரெட் பாவனையை நாட்டில் இருந்து அகற்றுவதே எமது கொள்கையாகும். உலகில் மிகவும் மகிழ்ச்சியாக இருப்போர் வாழும் 194 நாடுகளில் இலங்கை 137 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்று அவர் கூறினார்.

## தேர்தல் ஆணையாளருக்கு கூடிய அதிகாரங்கள் வழங்க வேண்டும்

### கொழும்பு மாநகரசபை உறுப்பினர் குகவரதன் கோரிக்கை

கொழும்பு.செப்.26
"நீதியானதும் நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்தும் மனோதைரியம் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்க வேண்டும். கூடுதலான அதிகாரங்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கு வழி வகுக்கும் "
இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவிப் பொதுச்செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சண்.குகவரதன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் வெளயிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
"இந்தியத் தேர்தல் ஆணையத் துக்கு இணையான முழுமையாக அதிகாரம் இல்லையென்றாலும் தனது சக்திக்கு உட்பட்ட விதத்தில் நீதியானதாகவும், அரசியல் கட்சிகளுடன் சிநேகபூர்வ அணுகுமுறையைக் கடைப்பிடித்து நடத்தி முடித்தமைக்கு எமது பாராட்டுக்கள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு உரித் தாகட்டும்.
17 ஆம் திருத்தத்தில் இருந்த சுயா தீன தேர்தல்கள் ஆணைக்குழு இன்று இல்லை. அதை 18 ஆவது திருத்தம் மூலம் அரசு அழித்துவிட்டது.
அதற்கு நாம் ஆணையாளரை குறை சொல்ல முடியாது. 18 ஆவது திருத்தத்திற்கு கைகளை உயர்த்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதை கொண்டு வந்த அரசும்தான் இந்தப் பாவச் செயலுக்கு பதில் கூற வேண்டும்.
எனவே இன்று தேர்தல்கள் ஆணையாளர் இருக்கும் சட்ட இடைவெளிகளுக்குள் தான் செயல்பட வேண்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இன்றைய ஆணையாளர் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கிறார்.
விசேடமாக வட மாகா ணத்தில் தமிழ் மக்கள் வாக்களிப்பதை தடுப்ப தற்கு அரச மட்டத்தில் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. படையினர் தேர்தல் பிரச்சாரங்களுக்கு பயன்படுத்தப் பட்டனர். தமிழ் தேசியக் கூட்டமைப் பின் வெற்றியைத் தடுப்பதற்கு அனைத்து வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
இவ்வாறான கடும் சவால்களுக்கு முகம் கொடுத்த தேர்தல்கள் ஆணையாளர் வடக்கில் அதிகளவு சதவீத மக்கள் வாக்களிக்கும் நிலையை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளை வெளிக் கொணர்ந்துள்ளார்.
துணிந்து வாக்க ளித்த மக்களுக்கும், அங்கு தேர்தல் ஆணையக பொறுப்புகளை முன்னெடுத்த பிரதி ஆணையாளர் மொஹ மட்டையும் நான் பாராட்டுகின்றேன்.
அதேபோன்று, மத்திய மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் அடாவடித்தனமான அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளுக்கு மத்தியில் தேர்தல் நடந்தது. வாக்க ளிப்பு நிலையங்களுக்கு சமீபத்தில் நின்றபடி பிரச்சாரம் செய்வது நிறுத்தப்பட வேண்டும். இவை சம்பந்தமாக எதிர்கால தேர்தல்களில் கவனம் செலுத்தப்படும் என ஆணையாளர் தேசப்பரிய கூறியுள்ளது பாராட்டத்தக்கது.
மலைநாட்டில் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு சமீபமாக நின்று வாகனங்களில் மது விநியோகித்து முறையற்ற நடவடிக்கைகள் நடைபெற்றன. மலைநாட்டில் தேர்தல் வாக்களிப்பில் ஓர் ஆயுதமாக மது பானம் பயன்படுத்தப்படுவதை ஆணையாளர் முடி வுக்குக் கொண்டு வர வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## இந்தியா வலியுறுத்தும் வழியில் நடப்பதற்கு இலங்கை இசையுமா...?

மத்திய அரசின் ஆட்சி ஒரு கட்சியின் வசமிருக்க, மாகாண ஆட்சியை வேறொரு கட்சி கைப்பற்றி உள்ளமை இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவை--

இத்தகைய நிலையில் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முரண்பாடுகளைத் தவிர்த்து, எவ்வாறு செயற்படப்போகின்றன என்பதனை அனைத்துலக நாடுகள் மிகவும் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன--

வட மாகாண சபையைக் கைப்பற்றி உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கு சிறந்த ஆட்சியை அமைக்கும். அதற்குத் தேவையான நிதி உள்ளிட்ட பல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்--

நாட்டு மக்களது தேவைகளையும் மற்றும் அபிலாசைகளையும் புரிந்துகொண்டு பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு கண்டு, ஜன நாயகத்தை நாடு முழுவதுக்கும் பரவலாக்க இரு தரப்புகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்--

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், இரு தரப்பினரும் எவ்வாறு செயற்படப் போகின்றனர் என்பதனை அனைத்துலக நாடுகள் கூர்ந்து அவதானிக்கின்றன--

அர்த்தமுள்ள இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பவர் வெளியார் எவரும் அல்லர். இலங்கை அரசின் மூத்த அமைச்சரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான டியூ குணசேகரா ஆவார்.

அவரது கருத்து அரசின் காதில் விழுமா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, இந்த நாட்டில் சௌஜன்யமும், முன்னேற்றமும் மேலோங்குவதற்கு இன்றியமையாத அமைச்சரின் கருத்து, இப்போதைய சந்தர்ப்பத்தில் ஊன்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் அமைச்சர் டியூ குணசேகரா இந்தக் கருத்தைக் கூறி வாய் மூடுவதற்குள், எமது நாட்டின் ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 68ஆவது கூட்டத் தொடரில் ஆற்றிய உரையின் பிரதான கருப்பொருள், அமைச்சரின் கருத்தை தூரத்தே வீசி எறிந்து விட்டது எனலாம்.

பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்த அக்கறை என்ற போர்வையிலேயே வளரும் நாடுகளின் உள்விவகாரங்களில் அனைத்துலக நாடுகளின் தலையீடு அதிகரிக்கிறது என்றும், அது குறித்துத் தாம் கவலை கொள்வதாகவும் ஜனாதிபதி சாடியுள்ளார்.

- இத்தகைய முயற்சிகள் அந்தந்த நாடுகளில் நிரந்தர அரசியல் இருப்புக்கோ அன்றி நல்ல மாற்றங்களுக்கோ அடிகோலி உள்ளதா என்பதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்-
- மாற்றங்களை நோக்கி மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதிர்மறையான விளைவுகளையே தருகின்றன.
- அதாவது, வெவ்வேறான வாழ்க்கை நெறிமுறைகளையும், கலாசாரங்களையும், வரலாற்றையும் கொண்ட நாடுகளில் பெரிய குழப்பங்களையே உண்டாக்குகின்றன.
- அதனாலேயே, உலகளாவிய ரீதியில் அரசியல் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள், வன்முறைகளைத் தூண்டுவதனைக் காண முடிகின்றது- என்று விசாலமாக எடுத்துரைத்து இருக்கிறார் எமது நாட்டின் தலைவர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபையின், பொதுக் கூட்டத்தில், உள்நாட்டு விடயங்களில் அனைத்துலக நாடுகளின் தலையீடுகளைக் கண்டித்துக் கொண்டிருந்த வேளையில்-

வட இலங்கையில் மாகாண சபைக்கென நடத்தப்பட்ட தேர்தலில் வாக்காளர்கள்- இப்பகுதி மக்கள்- வெளிப்படுத்திய நிலையை வரவேற்று- மெச்சிக் கருத்து வெளியிட்டிருந்தது இந்திய வெளிவிவகார அமைச்சு.

மூன்று மாகாண சபைகளின் வாக்காளர்களும், தேர்தலில் ஆர்வத்துடன் அமோகமாக வாக்களித்தமை இலங்கை மக்கள் ஜனநாயக விழுமியங்களைக் காப்பாற்றுவதில் அக்கறையாக உள்ளதைப் பிரதிபலிப்பதாகப் பாராட்டியுமுள்ளது.

அத்தோடு, வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அனைத்துலக சமூகத்துக்கு அளித்த வாக்குறுதியை, இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளதையும் இந்திய அரசு மெச்சியுள்ளது.

அதே வகையில் அல்லது வழியில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதாகவும், அதற்கும் மேலதிகமான (13+) அதிகாரங்களை வழங்குவதாகவும் அனைத்துலக நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதியை, இலங்கை அரசு நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கிறோம், பெரிதும் நம்புகிறோம் என்றும் இந்திய அரசு தெரிவித்திருக்கிறது.

மிகக் குறிப்பாக, வட மாகாணம் வாழ் மக்களின் முன்னேற்றத்துக்கு, அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்படுவதாக அளித்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும். முப்பதாண்டுப் போரினால் மிகவும் பாதிப்புற்ற வடக்கு மக்களின் அவசர, அவசிய தேவைகளை விரைந்து நிறைவேற்றுவதற்கு இரு தரப்புகளும் இணைந்து செயற்பட வேண்டும்- என்றும் இந்தியா ஊன்றி வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசுக்கு அவ்வழி நடப்பதற்கு, செயற்படுவதற்கு மனதார்ந்த விருப்பம் உண்டா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை, இந்தியா உட்பட அனைத்துலக நாடுகள் கூர்ந்து திரும்பிப் பார்ப்பதற்கு, எமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒருமித்து வழங்கிய அமோக ஆதரவும் அதனூடான மகத்தான வெற்றியும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்லவே...?

# கனவு நனவாகும் காலம் கனிந்திருக்கிறது



தில்லாலங்கடி

ஆயிரம் காந்தியர்கள் அணிவகுத்து நின்றாலும் அவர்களை விஞ்சிய அஹிம்சாவாதியின் உயிர் மூச்சு காற்றுடன் கலந்து 26 வருடங்கள் காலக் கனதியில் சென்று விட்டன.

இருந்தும், வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் மீண்டும் இந்திய - இலங்கை ஒப்பந்தங் களின் நினைவுகளை கிளறியுள்ள நிலையில் திலீபனை நினைக்காமல் இருக்க முடியவில்லை. இந்திய இராணுவம், ஈழத்துக்கு வந்தமை, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதல் எல்லாவற்றுடன் சேர்த்து தியாக தீபத்தின் நினைவுகள் கிளறப்பட்டுள்ளன.

காலச் சக்கரத்தில் சில நினைவுகள் எங்களை விட்டுச் சென்றாலும், மீளவும் ஏதோவொரு வகையில் வருவதைத் தான் 'வாழ்க்கை ஒரு வட்டம்' என்றும் வரையறுத்திருக்கின்றார்கள்.

இந்திய இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளிட்ட 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி நல்லூரில் தனது பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தான் திலீபன். இராசையா பார்த்தீபன் என்ற பெயர் கொண்ட இவன் மருத்துவ பீட மாணவனாக இருந்து புலிகளின் தளபதியானவன்.

சிங்கள அரசுகளின் கொலைவெறியாட்டத்தினால் ஆயுதம் ஏந்தத் தள்ளப்பட்டவன். துப்பாக்கிச் சத்தங்களால் செய்ய முடியாததை அஹிம்சா வழியால் செய்யத் துணிந்தான்.

காந்திய தேசம் அஹிம்சாவாதிகளின் தேசம் என சர்வதேசத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பதியப்பட்ட பெயர் இந்தியாவுக்கு உண்டு.

ஈழத் தமிழர்களுக்கு துரோகங்கள் இழைப்பதற்காகவே படைக்கப்பட்ட நாடு என்று ஈழத்து வரலாற்றுப் பக்கங்களில் எழுதப்பட்ட இந்தியாவின் முன் காந்திய வழியில் போராட வந்தான் திலீபன்.

திலீபனின் 5 அம்சக் கோரிக்கைகளை செவிசாய்ப்பதற்கு இந்தியா தலைப்படவேயில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் உயிர் செத்தது என்று தூக்கி எறிந்து விட்டார்கள். அஹிம்சை ஆயுதத்தை எடுத்து 12 தினங்கள் நீராகாரமுமின்றி பட்டினிப் போராட்டம் நடத்திய திலீபன் 26.09.1987 அன்று சாவடைகின்றான். நல்லூரில் கூடியிருந்த லட்சம் பேர்களின் கண்களிலிருந்தும் கண்ணீர் பொல பொலவெனக் கொட்டுகிறது. அதனைத் துடைப்பதற்கு யாரும் இல்லை.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்' என்ற திலீபனின் வாசகங்கள் இன்றும் சுவர்களில் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தச் சுவர்களை, அவனது நினைவுகளையோ, நினைவிடங்களையோ விட்டு வைப்பதற்கு சிங்கள பேரினவாத சக்திகள் தயாரில்லை. அஹிம்சை வழியில் போராடியவனின் நினைவும் ஈழத்தவர்களைச் சென்றடையக் கூடாதென்பதில் தெளிவாகத்தான் இருந்தார்கள் பேரினவாதிகள்.

> இந்திய இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளிட்ட 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி நல்லூரில் தனது பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தான் திலீபன். இராசையா பார்த்தீபன் என்ற பெயர் கொண்ட இவன் மருத்துவ பீட மாணவனாக இருந்து புலிகளின் தளபதியானவன்.

இதனால்தான் நல்லூர் பின் வீதியில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியை முதலில் அழித்த பேரின வாதம் கடந்த ஆண்டு நல்லூர் ஆலயச் சுற்றாடலில் திலீபன் பட்டினிப் போராட்டம் நடத்திய இடத்தில் அமைக்கப்பட்டிருந்த நடு கல்லையும் அழித்தொழித்திருக்கின்றார்கள்.

இந்த நினைவிடங்களை அழித்த அவர்களே, தியாக தீபம் உண்ணா நோன்பிருந்த செப்ரெம்பர் மாதத்தில் வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்தி அந்த நினைவுகளை மீளவும் மீட்டச் செய்திருக்கின்றார்கள்.

இந்தத் தேர்தலில் இலங்கை இராணுவம் தாயகப் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்ற ஆணைக்கு வாக்களித்திருக்கின்றனர் தமிழ் மக்கள். திலீபனின் கனவு அது.

திலீபன் 26 வருடங்களுக்கு முன்னர் கூறிய, மக்கள் புரட்சி இப்போது வெடித்திருக்கின்றது. இராணுவ அடக்கு முறையை - அச்சுறுத்தலை தகர்த்தெறிந்து வாக்குகளால் புரட்சி செய்திருக்கின்றார்கள் தமிழர்கள். இந்தப் புரட்சி சர்வதேசத்திற்கு தெளிவான செய்தியை வழங்கியிருக்கின்றது.

அஹிம்சைப் போராட்டத்தை புறந்தள்ளியவர்கள், அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றத் தயங்கியவர்கள் இன்று மக்கள் வழங்கியுள்ள தெளிவான ஆணையை நிறைவேற்ற வேண்டிய நிர்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

வரலாறு மீளவும் திரும்புகின்றது. திலீபனின் கனவுகளும் இனி நனவாகலாம்.

## "தியாகச் செம்மல்!"

அணைந்திடாத் தீபமே
அழிந்திடாத் திலகமே
அகிம்சைக்கு வித்தான
ஆருயிர்த் தெய்வமே
இணையான எம்தேசத்தே
உனையே உருக்கினாய்
இடும்பு அரசுக்கே
இடியாய் விழுந்தாய்!
துணையான தமிழரசிடம்
தோள் கொடுத்தது எம்தேசம்
துடைத் தெறிந்திடும்
துயர்தந்த வலிகளை...!
அணை உடைந்த எம்
உறவுகளின் கண்ணீர் - இன்று
அகிலமே அதிர்ந்திட நன்னீரானது
உன் தாகம் தீர்ப்பதற்காய்...!

என்.பகலவன்

## முருகனே வியக்க தாய் பொட்டிட்ட மகன்

கோரிக்கை ஒவ்வொன்றையும்
உணவாக்கிக் கொண்டாய் அதனால்
உனது உடலில் பசி தெரியவில்லை.

அஹிம்சையை போராட்ட வடிவமாய்
கொண்டாய் அதனால் உனது
முன்னே மகாத்மா காந்தியும்
நிற்க முடியவில்லை.

நல்லூரில் முருகன் தேருக்கு
கூடும் சனத்திடம் பக்தி இருந்தது
ஆனால் உனது சாவுக்கு கூடிய
சனத்திடம் உணர்வு இருந்தது.

அரோகரா கரகோசம் கூடும் இடத்தில்
கண்ணீர் தான் கூடியது. ஒரு தாய்
உனது நெற்றியில் பொட்டிட்ட போது
முருகனையே வியக்க வைத்தாய்.

மரணப் படுக்கையில் இருந்து
கொண்டே ஒவ்வொரு நிமிடமும்
விடுதலைக்கான போராட்டத்தை
கைவிடக் கூடாது என்று
எங்களிடம் வேண்டுகோள் விடுத்தாய்.

நீ இறந்த போதுதான் எமது உடல்
பசியை அறிந்தது கோரிக்கைகள்
நிறைவேற்றப்பட வேண்டும்
என்று ஒரு துளி தண்ணீரும்
கூட அருந்தாமல் நீ இறந்த
நாளில் இருந்து ஈழம் பிறக்காமல்
இன்றும் அழுகிறது.

பரந்த வெளிப்பாடு ஒட்டிய பண்பாடு
சமூக விடுதலை உனது இதயத் துடிப்பு
குறைந்து கொண்டு போன
ஒவ்வொரு நாளிலும் உயிர் பெற்றது

தாய் மண் சுவாசம் நிகழ்வு படுக்கையில்
உனது உடல் அசைந்த இலக்கியம்
பரிமாறுகிறது. பகுப்பாய்வு செய்கிறது.
உனது எண்ணங்கள் தனியாக
நின்றாலும் முதன்மைப்படுத்தி
செயற்படுகிறது.

நீ இறந்தது பழைய செய்தி ஆனாலும்
மாறுபடாமல் உனது எண்ணம்
புதுப்பிக்கப்படுகிறது. கடைசி வரையும்
அறிவின் எல்லையில் நின்று
பல வடிவங்களாக செயற்படுகின்றது

உனது உடல் ஈழத்தில் ஒரு வடிவம்
பெற்று தெளிவு கொண்டு பல அர்த்தம்
பேசப்படுகிறது சம காலம்
வாழ்வோடு ஒட்டிய பிரச்சினை
வரையறைக்குள் மீண்டு
சமூகம் மீள்தலாக
அமையும் உனது சாவு.

நீ விட்டுச் சென்ற பாதையில்
ஆழமாகப் பதிகிறது மரபுத் தமிழ்
ரேகை. தளராமல் எமது பலம்
தக்க வைத்து விட்டது முடிவு தூரம்
இல்லை உறுதியில் துடிக்கிறது இதயம்.

12 நாள்களில் எந்த நாளை
நினைவுபடுத்த எத்தனை வருடங்கள்
கடந்தாலும் மறக்க முடியாது.
உனது மேடையில் ஏறிய
ஒவ்வொருவரும் அழுதபடி
பேசினார்களே. நீ சிரித்தபடி
பார்த்தாயே உனது விடுதலைக்கான
பார்வைத் தேடல் தொடரும்....



துன்னாலைச் செல்வம்



# மலரட்டும் நல்லாட்சி

ராஜராஜன்

பெரும்எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இடம்பெற்ற வடமாகாண சபைக்கான தேர்தல் ஆரவாரங்கள் ஓய்ந்து காணப்படுகின்றன. முதலமைச்சரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாகாண அமைச்சர்களும் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் சபையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் நாள்கள் எண்ணப்பட்டு வருகின்றன.

வடபகுதி மக்களைப் பொறுத்த வரையில் நடந்து முடிந்தவை யாவும் ஒரு கனவு போன்றே உணர்கின்றனர். வடமாகாண சபைத் தேர்தல் இடம்பெறுமென அவர்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இமாலய வெற்றி பெறுமெனவும் அவர்கள் எண்ணியிருக்கவில்லை. கூட்டமைப்பு வெல்லும் என்றே அவர்கள் கணித்திருந்தனர்.

தேர்தல் காலத்தில் ஆளும் தரப்பினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட இடையூறுகள். அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமது கடமைகளைச் சீராக நிறைவேற்றிய வாக்காளர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதிலும் சரியான தீர்க்கமான முடிவுகளை எடுத்தவர்களுக்கு இரட்டிப்புப் பாராட்டுக்கள் உரியவை.

தமது வெற்றி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே வியப்புத் தெரிவித்திருப்பார்கள் என்பதில் எள்ளளவிலும் சந்தேகமே இல்லை. தேர்தல் கூட்டங்களில் தமக்கு மூன்றில் இரண்டு மாகாண சபை உறுப்பினர்களை வழங்க வேண்டுமெனவே அவர்கள் பரப்புரை செய்தனர். ஆனால் மக்கள் 30 உறுப்பினர்களை அள்ளிக் கொடுத்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் விட்ட தவறுகளை இம்முறை மக்கள் ஈடு செய்துள்ளனர் எனவும் கூறலாம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடமாகாணத்தில் மொத்தமாக 1 லட்சத்து 6 ஆயிரத்து 792 வாக்குகளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தன. ஆனால் இந்தத் தேர்தலில் 3 லட்சத்து 53 ஆயிரத்து 555 வாக்குகள் கிடைத்துள்ளன. 2 லட்சத்து 46 ஆயிரத்து 763 வாக்குகள் அதிகமாக அளிக்கப்பட்டுள்ளன. இந்த வாக்கு வித்தியாசம் ஒன்றே போதும் மக்களின் எழுச்சியை எடுத்துக் காட்டுவதற்கு.

அதிலும் போரினால் உடுத்த துணியைக்கூட இழந்து அல்லல் வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கும் வன்னி மக்கள் தமக்கு உதவிகளும் சலுகைகளும் வேண்டாம் உரிமைகளே வேண்டுமென முகத்தில் அறைந்தாற் போன்று தமது வாக்குகளால் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களுக்கு எப்போதுமே உடனிருந்து கொல்லும் புல்லுருவிகளால் ஆபத்து ஏற்படுகின்றமை வழக்கமான நிகழ்வுகளாகும். கட்டப் பொம்மனுக்கு ஓர் எட்டப்பனும், பண்டார வன்னியனுக்கு ஒரு காக்கைவன்னியனும் வாய்த்தமை போன்று இங்கும் சிலர் இருக்கின்றனர். தமது இனத்தின் மீது எவ்வித அக்கறையும் காட்டாத இந்தப் பிறவிகள் தமது எஜமானர்கள் இட்ட வேலைகளை சிரமேற்கொண்டு ஆற்றுவதில் வல்லவர்கள். இந்தத் தேர்தலிலும் இத்தகையானவர்களின் பிரசன்னமும் செயற்பாடுகளும் அதிகளவில் இருந்தன. ஆனால் பயனொன்றும் கிடைக்கவில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் அங்கு வாழுகின்ற மக்களே எஜமானர்கள். அவர்களே ஆட்சியாளர்களை எந்த மட்டத்திலும் தெரிவு செய்கின்றனர். தமக்குப் பயன்படாதவர்களை அடுத்த தேர்தலில் புறமொதுக்கக்கூடிய வல்லமையும் இவர்களுக்கே உண்டு. ஆட்சியாளர்கள் நீதியானதும், நியாயமானதுமான தேர்தல்கள் இடம் பெறுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஆனால் இந்தத் தேர்தலில் இவை சாத்தியமாக இருந்ததாவெனக் கேள்வியொன்று எழுமாயின் இல்லையென்ற பதிலே கிடைக்கும்.

ஏனென்றால் ஜனநாயக விழுமியங்களுக்கு இந்தத் தேர்தலில் இடமில்லாத வகையில் ஏராளமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிக்கை விடுமளவுக்கு இராணுவத்தினரின் பிரசன்னம் இங்கு காணப்பட்டது. புலனாய்வாளர்கள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து காணப்பட்டதுடன் மக்களை அச்சுறுத்தும் விதத்திலும் செயற்பட்டனர். வாக்காளர்கள் மட்டுமல்ல வேட்பாளர்களும் அச்சுறுத்தப்பட்டனர். சில இடங்களில் பொருள்கள், மதுபானம், பணம் என்பன வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதைவிட தமக்கு வாக்களிக்காதுவிட்டால் இனிமேல் அபிவிருத்தி எதுவும் இங்கு இடம் பெறாது, உதவிகள் நிறுத்தப்படும் என்ற பயமுறுத்தல் வேறு.

மேலும் நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த அரச நியமனங்கள் அவசரம் அவசரமாக வழங்கப்பட்டன. சில பகுதியினருக்கு தேர்தல் முடிந்ததும் பெரியளவிலான சம்பள உயர்வு கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இவையெல்லாவற்றையும் தாண்டி மக்கள் இந்த இமாலய சாதனையைப் புரிந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் எதற்கும் துணிந்திருக்கிறார்கள் என்பது தான் அர்த்தம்.

இத்தகைய அஞ்சாமையும், துணிவும் கொண்ட மக்கள் கூட்டம்தான்

> மக்களின் தேவையறிந்து செயற்படக் கூடியவர்கள். முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஆளும் தரப்பினருக்கு ஆதரவாகச் செயற்பட்டு தமது பதவிகளைத் துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள் இனம் காணப்பட்டு களைந் தெறியப்பட வேண்டும்.

இன்றைய தேவையாகும். வியட்நாமில் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டு புரிந்த அட்டூழியங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்த அந்த நாட்டு மக்கள் இறுதியில் பெரும் வெற்றியையும் ஈட்டிக் கொண்டனர். லட்சக்கணக்கானவர்கள் மடிந்தபோதிலும் அவர்கள் துவளவில்லை. வீறு கொண்டு எழுந்தனர். கோழையாக இருப்பவன் தனது வாழ்நாளில் பலமுறை இறக்கின்றான். ஆனால் துணிவு படைத்த ஒருவன் ஒரேமுறைதான் இறக்கின்றான் என்ற அறிஞர் ஒருவரின் வாழ்க்கையை நாம் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இனிவரும் நாள்கள் கூட்டமைப்புக்குச் சோதனை நிறைந்தவையாக அமையப்போகின்றன. வடமாகாண சபை பதவி ஏற்பதிலிருந்து அதன் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. ஆனால் அன்றைய தினத்திலிருந்தே சோதனைகளும் ஆரம்பமாகின்றன. வடக்கில் கிடைத்த தோல்வியால் வெகுண்டு போயுள்ள இனவாதிகள் தமது மனம் போன போக்கில் பிதற்றத் தொடங்கி விட்டனர். இவர்களின் இயலாமையின் வெளிப்பாடாக இதனைக் கொள்ள வேண்டுமென்றாலும் கடந்த கால அனுபவங்கள் எமக்கு இன்னமும் மாறாத ரணங்களாகவே காணப்படுகின்றன.

இந்த நிலையில் இவற்றையெல்லாம் தாண்டிச் செயற்படவேண்டிய தார்மீகக் கடமைகள் புதிதாகப் பதவியேற்கவிருக்கும் வடக்கு மாகாண சபைக்கு உண்டு.

ஊழலற்ற ஆட்சி என்பது அதன் தாரக மந்திரமாக அமைய வேண்டும். தமக்கு வேண்டியவர்களுக்கு உதவுவது என்ற கொள்கை அங்கு பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும். நியமனங்கள் வழங்குவதிலும் வெளிப்படைத் தன்மை பேணப்படவேண்டும். மக்களின் தேவையறிந்து செயற்படக் கூடியவர்கள். முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஆளும் தரப்பினருக்கு ஆதரவாகச் செயற்பட்டு தமது பதவிகளைத் துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள் இனம் காணப்பட்டு களைந்தெறியப்பட வேண்டும். குறிப்பாக மக்களைக் கவரக்கூடிய வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு அவை உடனடியாகவே செயற்படுத்தப்பட வேண்டும். நலிந்து போய்க் காணப்படும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு புத்துயிர் வழங்க வேண்டும். மக்களுடன் உள்ளூராட்சிச் சபைகளே நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளதால் அவற்றின் மீது அதிக அக்கறை காட்ட வேண்டும்.

வாக்களிப்பில் மக்கள் சாதனை புரிந்ததைப் போன்று நல்லாட்சியிலும் புதிய வடமாகாண சபை சாதனை புரிய வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தால் அங்கத்தவருக்கான அனுகூலங்கள் அதிகரிப்பு

ப.மகேந்திரதாசன்

மேற்படி நிதிய அங்கத்தவர்கள் தற்போது செலுத்தும் மாதாந்த அங்கத்துவக் கட்டணமான ரூபா 20 ஐ, ரூபா 50 ஆக அதிகரிப்பது எனவும், அந்த அதிகரிப்பின் படி தற்போது வழங்கப்படும் அனுகூலங்களை அதிகரித்து வழங்குவதெனவும், நிதியத்தின் தேசிய ரீதியான 12 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க, 2013 செப்ரெம்பர் மாதத்திலிருந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அங்கத்தவர்களிடம் இருந்து விருப்புக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு எமது யாழ்ப்பாண மாவட்டச் சங்கமும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுச் சங்கங்களும் கடந்த மூன்று வருட காலமாக வலியுறுத்தி வந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஒரு வருட அங்கத்துவத்தைப் பூர்த்தி செய்த அங்கத்தவரொருவர் இந்த அதிகரித்த அங்கத்துவக் கட்டணத்தை மூன்று மாதங்கள் செலுத்திய பின்னர், அதிகரிக்கப்பட்ட அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதிகரிக்கப்படும் விகிதங்களைக் குறிப்பிடும் விளக்கக் கடிதத்துடன், விருப்புத் தெரிவிக்கும் படிவம் நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அவற்றைப் பூரணப்படுத்திப் பிரதேச செயலாளர் பிரிவுச் சங்கங்களின் செயலாளர்களிடம் ஒப்படைத்து ஒத்துழைக்குமாறு சகல அங்கத்தவர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றோம். அதிகரிக்கப்பட்ட அனுகூலங்களின் விவரங்களாவன:

**1. இறப்பு மானியம்:**
தற்போது ஒரு வருடத்துக்கு ரூபா 1,200 வீதம் 07 வருடங்களுக்கு ரூபா 8,400 உடன் அதிகரிக்கும் ஒவ்வொரு வருடத்துக்கும் ரூபா 100 வீதமான கொடுப்பனவு ஒரு வருடத்துக்கு ரூபா 1,700 வீதம் 07 வருடங்களுக்கு ரூபா 11,900 உடன் அதிகரிக்கும் ஒவ்வொரு வருடத்துக்கும் ரூபா 150 வீதமாக அதிகரிக்கப்படுகிறது.

**2. வைத்தியசாலைக் கொடுப்பனவு:**
தற்போது ஒரு நாளுக்கு ரூபா 200 வீதம் 10 நாள்கள் வரை ரூபா 2000 ஆன கொடுப்பனவு. ஒரு நாளுக்கு ரூபா 250 வீதம் 15 நாள்கள் வரை ரூபா 3,750 ஆக அதிகரிக்கப்படுகிறது.

**3. கண் சிகிச்சை**
தற்போது ஒரு கண்ணுக்கு ரூபா 2,500 வீதம் இரு கண்களுக்கு வழங்கப்படும் ரூபா 5,000 கொடுப்பனவு, ஒரு கண்ணுக்கு ரூபா 4,000 வீதம் இரு கண்களுக்கு ரூபா 8,000 ஆக அதிகரிக்கப்படுகிறது.

**4. புலமைப்பரிசில்**
தற்போது இரு பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக முதலாவது வருடப் பட்டப்படிப்புக்கு ஒருவருக்கு ரூபா 3,000 வீதம் வழங்கப்படும் கொடுப்பனவு இரு பிள்ளைகளுக்கு முதலாவது வருட பட்டப்படிப்புக்கு ஒருவருக்கு ரூபா 5,000 என்ற வீதத் தில் அதிகரிக்கப்படுகிறது.

**5. இதயம், சிறுநீரகம் மற்றும் மூளை சத்திரசிகிச்சை**
தற்போது மானியம் வழங்கப்படாதுள்ள இந்தச் சிகிச்சைகளுக்காக ஏதாவது ஒன்றுக்கு ஒரு தடவை ரூபா 10,000 வழங்குதல் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**6. கடன் கொடுப்பனவு**
தற்போது வழங்கப்படும் ரூபா 10,000 ஆன கடன் தொகையை ரூபா 25,000 ஆக அதிகரித்து வழங்கப்படவுள்ளது.

மேற்படி அதிகரிக்கப்பட்ட அங்கத்துவக் கட்டணமான ரூபா 50 ஐச் செலுத்துவதன் மூலம் அதிகரிக்கப்பட்ட அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு சகல அங்கத்தவர்களையும் இதுவரை நிதிய அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளாத சகல ஓய்வூதியர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே



நவீனத்துவ வளர்ச்சியின் புரட்சிப் பின்னணியில் பல துறைகளுமே சங்கமித்து நிற்பதோடு உலக மய சிந்தனைத் திறனடிப்படையில் போட்டிமிகு உலகு இன்று மனிதனையே ஆட்டிப் படைக்கின்றது.

அந்த வகையில் இருபத்தியோராம் நூற்றாண்டைப் பொறுத்தவரையில் ஆண்களுக்குச் சமமாகவே பெண்களும் விளங்குகின்றார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இருப்பதற்கு இடமில்லை.

கல்வி, விளையாட்டு, அரசியல், அறிவியல், விண்வெளி, மருத்துவம், சட்டம் என்று இன்றைய பெண்கள் பல துறைகளிலும் தடம்பதித்து பல்துறைகளிலும் விற்பன்னர்களாகத் திகழ்வது கண்கூடு. எனினும் பெண்களைப் பொறுத்தவரை அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதில் இறங்குமுகம் தான். அரசியலைப் பொறுத்தவரை பல்வேறு வியூகங்களையும் தந்திரோபாயக் கொள்கைகளையும் வகுப்பதுடன் பன் முக சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டும். ஆளுமையுடன் உலக மயமாற்றங் களுக்கு இசைய வல்லாதிக்க அரசியல் பாணியில் காய் நகர்த்துவதில் பெண்கள் ஆண்களைக் காட்டினும் பிரகாசிப்ப தில்லை.

இத்தகைய நிலைக்கு ஆணாதிக்க சிந்தனையாளர்களின் முன் பெண்களின் அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவதென்பது முயற் கொம்பாகவே நோக்கப்படுவதுடன் வல்லாதிக்கப் போக்குடைய உலக அரசியல் மேடையில் மென்மை படைத்த பெண்களின் அரசியல் தந்திரோபாயங்கள் பலங்குன்றி விடுகின்றமை மற்றும் பெண்கள் எப்போதும் ஆண்களுக்குசமமான வர்களாகவே பார்க்கப்படுகின்றார்களே தவிர அவர்கள் ஆண்களுக்கு நிகராக நோக்கப்படுவதில்லை. இத்தகைய நிலையிலேயே ஆண்களால் இயலுமான விடயங்கள் அனைத்திலுமே பெண்க ளால் பிரகாசிக்க முடிவதில்லை என்பது புலனாகிறது. பொதுவாகவே அரசியலில் குதிப்பவர்களில் தம் முன் வருகின்ற சவால்களையும் அச்சுறுத்தல்களையும் விமர் சனக் கருத்துக்களையும் எதிர்கொள்ளத் தயங்குபவர்களே அரசியலில்இருந்து ஒதுங்குகின்றனர். அன்றேல் ஒதுக்கப் படுகின்றனர். எனவேதான் அரசியல் என்பது பலருக்கு எட்டாக் கனியா கின்றது.

ஒருவருடைய அரசியல் வாழ்வை வாழைக்கு ஒப்பிடுவார்கள் பலர். ஏனெனில் வாழையில் ஏறுவதென்பது அவ்வளவு எளிதான விடயம் அன்று. அவ்வாறு ஏறிவிடினும் தம்பிடிதளின்விரைவில்கீழேவழுக்கி வந்து விடுகின்றனர். இல்லையெனின் சுமை தாங்க முடியாது வாழையுடன் சேர்ந்து விழுந்தே விடுகின்றனர். அதுபோலவே தான் அரசியலிலும் எதிர்பாராத நிகழ்வுகளால் மேல் நிலையிலுள்ளோர் தோல்வியடைகின்றனர். தோல்வியடைந்தோர் எழுச்சி பெறுகின்ற எதிர்பாராத நிலையுள்ள களமே அரசியல் துறை.

இவ்வாறான நிச்சயிக்கப் படாத நிகழ்ச்சி நிரலைக் கொண்ட அரசியல் அரங்கில் பெண் களைப் பார்க்கிலும் ஆண்களின் ஆதிக்கமே அதிக மென்பதே யதார்த்த உண்மை.

## படியுங்கள்... சிந்தியுங்கள்...

மீனுக்கு அவசியம் தண்ணீர்
மின்னலுக்கு அவசியம் மழை
முகத்துக்கு அவசியம் சிரிப்பு
மனிதனுக்கு அவசியம் சிரிப்பு

விழித்துப் பார்
உழைத்துப் பார்
உயர்ந்து பார்

பிறருக்காக நீ கஷ்டப்பட்டால்
அது பாசம்
பிறர் உனக்காக
கஷ்டப்பட்டால் அது பாவம்

எப்போதாவது வந்தால்
பிரியமாக இருக்கும்
எப்போதுமே வந்தால்
பிரிகிற மாதிரி தான் இருக்கும்

தனிமையில் இருந்தால்
மனதை கட்டுப்படுத்து
கூட்டத்தில் இருந்தால்
நாவைக் கட்டுப்படுத்து

சிந்து சிவதாஸ்,சுதுமலை.




## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.


பெயர் :-........................................................

முகவரி :- ........................................................

........................................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





## உதவிக்கரம் நீட்டுவோம்

காரிருள் சூழ்ந்த கலியுகமதில்
பேரிருள் சூழ்ந்த பேதையிவள்
ஓட்டைக் குடிலினிலே
ஒய்யாரமாய் தூங்கும்
பிள்ளையிதன் பின்னணி யாதோ?
அறிந்தனன் யானும்
அயலவர் ஒருவரிடம்
முள்ளிவாய்க்காலில்
முனகிக் கிடந்து
முழுச் சொந்தங்களையும் இழந்த
பச்சிளம் பாவையே இவள்
ஏடறியாள் எழுத்தறியாள்
எண்ணும் எண் கூட அறியாள்
ஆறு வயதும் ஆயிற்றாம்
அடிப்படைக்
கல்வி ஆகல்லயாம்
பள்ளி செல்லப்
பாதையில்லை
பாவம் இந்தப் பாவையிவள்
துறந்த நல் துறவியாய்
துக்கமின்றி தூங்குகிறாள்
தூக்கமில்லை என்னிடமே
துயிலில் அவளைக்
கண்டது முதல்

பணமில்லை என்னிடமோ
பாவைதனை கரை சேர்க்க
சேர்த்தனன் யானும்
சிறுதொகையை
சேர்க்க அவளைப் பள்ளியிலே
கண்ட இடம் தேடி வர
காணவில்லை பாலகியை
நீராவது கண்டீரெனில்
நீட்டுமையா சிறுகையுதவி

துவர்னிகா.பா
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## யோசித்துப் பார்!



மனமென்ன காகிதங்களா
உன் நினைவுப்
பதிகங்களைத் தூக்கியெறிய
நீயற்றுக் கிடக்கும்
நாள்களில்
இமைகள் கூட
சுமையாகத் தான்
தெரிகின்றது......

என்னையே
புரிந்து கொள்ள
முடியாத நீயும்
ஒரு காகிதப் பூத்தானே!
யாசிக்கும்
என் இதயம் பற்றி
யோசித்துப்பார்.....

எஸ்.தர்சி
சுண்டுக்குளி

## ஆரோக்கியபுரம் கிராமத்தில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு

அக்கராயன்,செப்.26
துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராம மக்கள் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.
இங்குள்ள பாலங்குளம் வற்றியதால் இந்தப் பகுதியிலுள்ள கிணறுகளும் நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றன.
மேலும் மக்களின் பாவனையில் உள்ள பொதுக் கிணறுகளிலும் நீர் முற்றாக வற்றியுள்ளது. இதன் காரணமாக குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.
அத்துடன் குளிப்பதற்குக் கூட நீர் கிடைக்காத நிலையில் மக்கள் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.
மேலும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி நிலவி வருகின்றது.
அத்துடன் துணுக்காயிலுள்ள பல குளங்கள் நீர் வற்றிய நிலையில் காணப்படுவதால் கால்நடைகள் குடிதண்ணீர் தேடி அலைந்து திரிவதையும் காணமுடிகின்றது.
புனரமைப்புக்கென சில குளங்களின் நீர் திறந்து விடப்பட்டுள்ளமையால் அங்கு நீர் முற்றாக வற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)




## வறிய மாணவருக்கு தனியாரின் நிதியுதவி

துணுக்காய், செப். 26
மாந்தை கிழக்கில் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாதாந்தம் நிதியுதவி வழங்குவதற்குத் தனியார் ஒருவர் முன் வந்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களில் மிகவும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்குவதற்கு தனியார் நிறுவனமொன்றை நடத்தும் கி.சடாச்சரநாதன் என்பவர் முன்வந்துள்ளார்.
இன்றையதினம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நண்பகல் 12 மணியளவில் இந்த நிதியை வழங்கும் நிகழ்வு முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
மாந்தை கிழக்கில் பல்வேறு கிராமங்களிலும் உள்ள வறிய நிலையிலுள்ள மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளதை இனம் கண்ட மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் ரி.பிரிந்தாகரன் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் அதிபருடன் தொடர்பு கொண்டு இந்த மாணவர்களுக்கு உதவி வழங்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த நிதியுதவிகள் வழங்கப்படவிருப்பதாக உதவி அரச அதிபர் தெரிவித்தார்.
அத்துடன் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்கும் இரண்டு மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (க-415)

## வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டு

வேப்பங்குளம்,செப்.26
நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களைப் பாராட்டும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.
வவுனியா மாவட்டத்தில் அதிக வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டிய மருத்துவர் ப.சத்தியலிங்கத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றபோது பெருந்திரளான ஆதரவாளர்கள் அங்கு சமூகமளித்ததுடன் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.
மேலும் பலர் வெற்றிபெற்ற மாகாணசபை உறுப்பினருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். (க-421)

# உடைந்து விழும் நிலையில் பெரிய இணைப்புப் பாலம்



துணுக்காய், செப். 26
மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவபுரத்தையும், பாண்டியன் குளத்தையும் இணைக்கும் பெரிய பாலம் உடைந்து விழும் நிலையில் காணப்படுகின்றது.
இந்தப் பாலமானது பாலிநகர் பகுதியில் இருந்து பாண்டியன் குளம் பிரதேசத்துக்குச் செல்லும் போது சிவபுரத்துக்கு அண்மையில் காணப்படுகின்றது.
இதுவொரு மிகவும் பழைமை வாய்ந்தபாலமாகும். தற்போது இந்தப் பாலத்தின் நடுவில் பள்ளங்கள் தோன்றியுள்ள தால் உடைந்துவிழும் நிலை ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் உடைந்து விழுந்தால் மக்களின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு நெருக்கடியான நிலை தோன்றுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு என கிராமத்து மக்கள் தெரிவித்தனர். இந்தப் பாலத்தைப் புனரமைப்பதற்கு இது வரை எவரும் முன்வரவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
எனவே இந்தப் பாலத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)



வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தி.ரவிகரன் அவரது ஆதரவாளர்களால் மாலையிட்டு கௌரவிக்கப்படுகின்றார். (க-5)

## பெரும்போக நெற்செய்கை

வேப்பங்குளம்,செப்.26
இந்த ஆண்டின் பெரும்போக நெற் செய்கைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
சிறுபோக நெற் செய்கை இங்கு பெரியளவில் பலன்தராத போதிலும் விவசாயிகள் காலபோக நெற் செய்கையை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் நம்பிக்கையுடன் ஈடுட்டுள்ளனர்.
அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து வயல்கள் உழுது பண்படுத்தப்படுவதைக் காண முடிகின்றது.
குறிப்பாக வவுனியா துரவிக் குளம் பகுதியில் இந்த நடவடிக்கைகள் முழுவீச்சில் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. (க-421)



## நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல்

மன்னார், செப். 26
மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் பெரும்போக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.
பெரும்போகச் செய்கைக்கான காலம் அண்மித்திருக்கும் நிலையில் அது தொடர்பிலான சாதக, பாதக நிலையினை ஆராயும் பொருட்டு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
மன்னார் உயிலங்குளம் பாடசாலையில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
மேற்படி கலந்துரையாடலில் இந்தமுறை பெரும்போகச் செய்கையில் ஈடுபடவுள்ள பெருமளவிலான விவசாயிகள் கலந்து கொண்டனர். (க-12)

## இடைநடுவில் இறக்கி விடப்படும் மாணவர்கள்

### நெரிசலைக் காரணம் காட்டி

அக்கராயன், செப். 26
காலை வேளையில் வேறு கிராமங்களிலிருந்து பஸ்களில் அக்கராயன் மகாவித்தியாலயம் செல்லும் மாணவர்கள் இடைநடுவில் இறக்கி விடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களிலிருந்து காலை வேளையில் அக்கராயன் மகாவித்தியாலயம் செல்லும் மாணவர்களே நெரிசலைக் காரணம் காட்டி இடைநடுவில் இறக்கி விடப்படுவதாக மாணவர்கள் பாடசாலை அதிபரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தினமும் கட்டணம் செலுத்திப் பயணிக்கின்ற போதிலும் அக்கராயன் மகாவித்தியாலயத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இறக்கிவிடப்படுவதாகத் தெரிய வருகின்றது.
கடந்த 23ஆம் திகதி இவர்கள் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஆரோக்கியபுரத்தில் இறக்கி விடப்பட்டதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி மேற்கில் உள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.
எனவே இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கென பாடசாலை பஸ் சேவையை நடத்த வேண்டுமென இங்குள்ள பெற்றோர் நீண்ட காலமாகவே கோரிக்கைவிடுத்து வருகின்றனர். (க-18)

## வீதியிலிருந்து எழுகின்ற புழுதியால் சிரமங்களுக்கு உள்ளாகும் மக்கள்



மல்லாவி, செப். 26
மல்லாவி நகரப்பகுதியில் அமைக்கப்பட்டுவரும் காப்பெற் வீதியில் இருந்து எழுகின்ற புழுதிப் படலத்தால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
வீதியில் காணப்படும் புழுதியை அகற்றுவதற்கு நினைத்த வேளையில் இயந்திரம் பயன்படுத்தப்படுவதால் மக்கள் செய்வதறியாத நிலையில் சுகாதாரப் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
வாகனங்களில் செல்வோர் புழுதிப் படலம் மூடிக் காணப்படுவதால் விபத்துக்களை எதிர்கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. ஆனால் வீதிப்புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுபவர்கள் இதனைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.
இந்த நிலை நீடிக்குமேயானால் சுவாச நோய்கள் ஏற்படக் கூடிய அபாயநிலை தோன்றுமென மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.
எனவே, வீதியைப் புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மக்களின் நலன்கள் பாதிப்படையாத வகையில் செயற்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-415)

## பாரதியார் நினைவு கருத்தாடல்

புரட்சி கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வொன்று அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
வரவேற்புரையை த.தனசீலன் நிகழ்த்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவுச் சிறப்புரையை இலக்கியச்சுடர் ஐ.கதிர்காமசேகரன் நிகழ்த்தினார். நன்றியுரையை கவிஞர் த.பிரதாபன் வழங்கினார். இந்த நிகழ்வின் போது வவு னியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் 16 ஆவது ஆண்டு நிறைவுவிழா மற்றும் மாருதம் சஞ்சிகையின் வெளியீடு தொடர்பான கலந்துரையாடல் என்பன இடம்பெற்றது. (க-421)

## சுருக்கெழுத்துக் கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு

வடமராட்சி, செப். 26

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டி, வதிரி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கழகத் தலைவர் வ.சிவசந்திரதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ்.எம்.நசீரும், சிறப்பு விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் சு.வரதபாஸ்கரனும் கலந்து கொள்வர். (வ-8)

## யோகர் சுவாமியின் குருபூசையை முன்னிட்டுக் கட்டுரை போட்டி

யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசையை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

தரம் - 7,8,9 என்பன கீழ்ப்பிரிவாகவும், தரம்-10,11 என்பன மத்திய பிரிவாகவும், தரம் -12,13 என்பன மேற்பிரிவாகவும் போட்டி இடம்பெறும்.

கட்டுரைக்கான தலைப்புகளாக

**கீழ்ப்பிரிவு**

யாழ்ப்பாணத்துச் சித்தர் வரிசையில் சிவயோக சுவாமிகள், சிவயோக சுவாமிகள் ஆற்றிய சமய, சமூகப் பணிகள், சிவதொண்டன் நிலையங்களும் அவற்றின் பணிகளும், சிவயோக சுவாமிகளின் குருபக்தி, சிவயோக சுவாமிகள் வகுத்துத் தந்த இளைஞர்களுக்கான ஒழுக்க விதிகள்.


**மத்திய பிரிவு**

சிவயோக சுவாமிகளின் போதனைகளும் சாதனைகளும், "சிவத்தொண்டும் சிவத்தொண்டு செய்வோர் சிறப்புக்களும்" சிவயோக சுவாமிகள் தரும் விளக்கம், சிவயோக சுவாமிகளின் தெய்வ பக்தியும் தேச பக்தியும், சிவயோக சுவாமிகளின் சீடர்களும் அவர்களின் பணிகளும், "நல்லொழுக்கம்", பற்றிய சிவயோக சுவாமிகளின் சிந்தனைகள்.

**மேற்பிரிவு**

சிவயோக சுவாமிகள் போதித்த "மகா வாக்கியங்கள்" விளக்கம், சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள், சிவயோக சுவாமிகள் காட்டும் சமரச சன்மார்க்க நெறி என்னும் பொது அறம், சிவயோக சுவாமிகளின் வழிகாட்டல்களும் தற்கால சமூகத்தவர்க்கு அவற்றின் பொருத்தப்பாடும், ஈழத்துச் சித்தர் பரம்பரை சித்தர்களின் இயல்புகளும் இலட்சணங்களும், என்னும் அடிப்படையில் போட்டி இடம்பெறும்.

கட்டுரைகளை செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு-2, என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். (வ)





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலய கேணித் தீர்த்தம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (வ-8)

### இலவச கணினி பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ்.எம்.சி.எஸ்.நிறுவனம் இந்த ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இணைய வடிவமைப்பு, பல்லூடகத் தொழில்நுட்பம், வன்பொருளும் வலைப் பின்னலும் தொடர்பான இலவச கணினிப் பயிற்சி நெறியை வழங்கி வருகின்றது. யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள இதன் வளாகத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. (வ)

## வடக்கு மக்களின் அழுத்தத்தின் குரலாகச் செயற்படவுள்ளேன்

### மன்னாரில் வெற்றி பெற்ற றிப்கான் பதியுதீன்

வடக்கு மக்களுக்கு அரசிடம் இருந்து அனைத்தையும் பெற்றுக் கொள்வதற்கான அழுத்தத்தின் குரலாக செயற்படப் போவதாக றிப்கான் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபைக்கு மன்னார் மாவட்டத்தில் ஆளும் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டவர் அவர். நடைபெற்று முடிந்திருக்கும் வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான தற்போதைய நிலவரம் குறித்து ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது:

வடக்கில் அரசைத் தோற்கடித்து மக்களை மீண்டும் ஓர் அழிவுக்கு இட்டுச் செல்ல ஆணை வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் கோஷங்களை எழுப்பியிருந்தன.

வட மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் ஆரம்பித்துள்ளன.

இலங்கையின் கட்டமைப்பு ஒன்பது மாகாணங்களைக் கொண்டதாகும். அன்றைய சூழலில் இது எட்டாக இருந்தது. பிற்பாடு ஜனாதிபதியின் முயற்சியால் ஒன்பதாக மாற்றம் கண்டுள்ளது.

எமது கட்சியின் தலைவர், அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதும் எம் மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைத்து தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கான அபிவிருத்தி பணிகள் தொடரும்-என்றார். (வ)

### இப்படியும் திருட்டு

நெல்லியடியில் பொன் கந்தையா வீதியிலுள்ள வீடொன்றில் இரவு வீட்டு முற்றத்தில் விடப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளோர் நேற்று முன்தினம் காலை வெளியே வந்து பார்த்தபோது திருடப்பட்ட சைக்கிளிலுள்ள பெரும்பாலான உதிரிப்பாகங்கள் கழற்றப்பட்டு அதற்குப் பதிலாக பழைய உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்ட நிலையில் அதே இடத்தில் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளாகினர். (வ-35)

### அதிபர்களுக்குக் கூட்டம்

வடமராட்சி வலய அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-35)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வாகனச் செலவுகள் குறையும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்க்கப்பாருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கடகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**சிங்கம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**கன்னி:** மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிடைக்கும். முன்கோபம் விலகும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**நாளை**

புரட்டாதி-11 வெள்ளிக்கிழமை 27.09.2013
திதி: அட்டமி மு.இ. 11.02 வரை
நட்சத்திரம்: திருவாதிரை முழுவதும்
சுபநேரம்: 06.02 - 07.32 வரை
இராகுகாலம்: 10.32 - 12.02 வரை

**துலாம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். அநாவ்சியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**தனுசு:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு ஏற்படும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளை வசூலிப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கும்பம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மீனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 7 | 4 | | 6 | 9 | |
| | | 7 | 2 | 3 | | 1 | 5 | |
| 2 | 9 | | | 5 | | | | |
| | | | 5 | 7 | | | 6 | |
| | 7 | 3 | | | | 5 | 4 | |
| | 8 | | | 6 | 4 | | | |
| | | | | 1 | | | | |
| | 4 | 6 | | 9 | 3 | 2 | | |
| | 1 | 8 | | 2 | 5 | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 6 | 2 | 1 | 9 | 7 | 3 |
| 3 | 7 | 6 | 5 | 4 | 9 | 2 | 8 | 1 |
| 9 | 1 | 2 | 3 | 7 | 8 | 5 | 6 | 4 |
| 8 | 5 | 3 | 4 | 6 | 7 | 1 | 9 | 2 |
| 1 | 4 | 7 | 8 | 9 | 2 | 6 | 3 | 5 |
| 6 | 2 | 9 | 1 | 5 | 3 | 7 | 4 | 8 |
| 7 | 3 | 4 | 9 | 1 | 5 | 8 | 2 | 6 |
| 5 | 9 | 8 | 2 | 3 | 6 | 4 | 1 | 7 |
| 2 | 6 | 1 | 7 | 8 | 4 | 3 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப். 26
உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பருவகாலப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கான மீள் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பப்படிவங்களை யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறு வனத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஒ-14)

# 17 சனசமூக நிலையங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,செப்.26
யாழ்.மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள 17 சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக் கென 6 லட்சத்து 30 ஆயிரத்து 800 ரூபாவை யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்துள்ளனர்.
சனசமூக நிலைய கட்டடத் திருத்தத்துக்கென அல்வாய் கிழக்கு சனசமூக நிலையத்துக்கு 97 ஆயிரம் ரூபாவும், வதிரி கதிர்காம கோவிலடி சனசமூக நிலையத்துக்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும், கரவெட்டி மத்தொளி திருவள்ளுவர் சனசமூக நிலையம், கரணவாய் அண்ணா சிலையடி வள்ளுவன் சனசமூக நிலையம், கட்டைவேலி நாமகள் சனசமூக நிலையம், வதிரி கலா நிலைய சனசமூகநிலையம், கண்ணகை சனசமூக நிலையம், கவுந்தில் சன சமூகநிலையம் ஆகியவற்றுக்கு தலா 24 ஆயிரத்து 250 ரூபாவும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
சனசமூக நிலைய அபிவிருத்தி வேலைகளுக்கென துன்னாலை கோயிற்கடவை சனசமூக நிலையத்துக்கு 72 ஆயிரத்து 750 ரூபாவும், வள்ளுவர் சனசமூக நிலையத்துக்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும்,
விளையாட்டு உபகரணக் கொள்வனவுக்கென உடுப்பிட்டி சனசமூக நிலையத்துக்கு 38 ஆயிரத்து 800 ரூபாவும், நெல்லியடி கிழக்கு சுடர் ஒளி சனசமூக நிலையம் காந்தி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு தலா 24 ஆயிரத்து 250 ரூபாவும், கலட்டி இளங்கோ சன சமூக நிலையத்துக்கு 29 ஆயிரத்து 400 ரூபாவும், கரணவாய் விபுலானந்தா சனசமூக நிலையத்துக்கு தளபாடக் கொள்வனவுக்கு 38 ஆயிரத்து 800 ரூபாவும், மலசல கூடத் திருத்தத்துக்கென கரணவாய் சோளங்கன் சனசமூக நிலையத்துக்கு 29 ஆயிரத்து 400 ரூபாவும்,
கண்ணகை அம்மன் சனசமூக நிலையத்துக்க 29 ஆயிரத்து 100 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
இது தவிர குமரன்குளம் ஒழுங்கை திருத்தத்துக்கும் 48 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்த ஒழுங்கை திருத்தம் தகுந்த பொது அமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ-8)

## பரிசளிப்பு விழா

சுழிபுரம், செப்.26
சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி திறந்த வெளி அரங் கில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக திரு ச.க.குசல குமாரன் கலந்து சிறப்பிப்பார். (வ-28)

## உண்மையான சாதனை என்பது என்ன

தன்னம்பிக்கையை விருத்தி செய்வதே உண்மையான சாதனை. ஒவ்வொருவரும் கடவுள் நம்பிக்கையுடன் பெருமுயற்சி செய்தல் வேண்டும். நாம் பெரு முயற்சியுடன் எமது வாழ்க்கையை இறைவனுக்கு நிவேதனமாக அர்ப்பணித்தால் அவர் எமக்கு வழிகாட்டலையும் நிறைவையும் அளிப்பார்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
சிவசிதம்பரப்பிள்ளை
சிவசண்முகபிள்ளை
அவர்களின் அன்பு மனைவியும்,
1979 ஆம் ஆண்டு தொடக்கம்
2012 ஆம் ஆண்டு வரையான
33 வருடகாலம் எம்முடன்
பணியாற்றி ஓய்வு பெற்றவருமான
**சிவசண்முகபிள்ளை**
**மரியகொறற்றி பத்மினி**
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
பிரிவினால் துயருறும்
மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம். (32027)(3.11)

## மரண அறிவித்தல்கள்

### முத்துராசா இளங்கோ



தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா இளங்கோ (23.09.2013) திங்கட்கிழமை அகாலமரணமானார்.
அன்னார் முத்துராசா-நாகம்மா தம்பதிய ரின் அன்பு மகனும், சுதர்சன், சுதர்சினி, சிந் துஜா, தனுஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2013) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்பிராய் பிண முருங்கை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தச்சன்தோப்பு,
கைதடி. (32015)(3.11)

தகவல்:
க.முத்துராசா (தந்தை)
077 849 3495

### திருமதி சிவசண்முகபிள்ளை பத்மினி

(இளைப்பாறிய உத்தியோகத்தர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மினி சிவசண்முகபிள்ளை நேற்று (25.09.2013) புதன் கிழமை காலமானார்.
அன்னார் சி.சிவசண்முகபிள்ளையின் (தேசிய வீட மைப்பு அதிகார சபை - யாழ்ப் பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான இராசதுரை-பாக்கியம் தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற சிவசிதம்பரப்பிள்ளை மற்றும் செல்வமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவதர்சன் (பேராதனை பல்கலைக் கழகம்), சிவாஞ்சலி (ஊவாவெலச பல்கலைக்கழகம் - பதுளை) ஆகியோரின் அன்பு மிகு தாயும், ஜீவானந்தனின் சகோதரியும்,காலஞ்சென்ற இராசதுரை மற்றும் பரி பூரணத்தின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தங்கைச்சியின் பெறாமகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் இன்று (26.09.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உடுவில் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"வத்தனவளவு"
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம். (32028)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்

(முன்னாள் பிரதிச் செயலாளர்-திறைசேரி, முன்னாள் தலைவர்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட க.சண்முகலிங்கம் நேற்று முன்தினம் 24.09.2013 செவ்வாய்க்கிழமை வெள்ளவத்தையில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அருள்மறை கண்டதேவியின் அன்புக் கணவரும், Dr சண்முக தேவா, கீதா, அருட் செல்வி, வைதேகி ஆகியோரின் அன்புத் தந்தையும், வல்லபை, Dr. குமரேஸ்வரன், வேல்நம்பி, ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், குலநாயகம், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் சரஸ்வதி(பவளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மித்ரா, மாயா, நரேன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் 25.09.2013 புதன்கிழமை மாலை முதல் அஞ்சலிக்காக இல 4. இராமகிருஷ்ண அவெனியூ இல்லத்தில் வைக்கப்பட்டு, 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் மு.ப 11.00 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4, இராமகிருஷ்ண அவெனியூ,
வெள்ளவத்தை.
தொலைபேசி : 011 250 3699 (12301)(3.11)

தகவல் :
Dr.ச. சண்முகதேவா

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் போட்டிகள்


யாழ்ப்பாணம், செப்.26
அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் புராண படனம், சைவ சமய வினாடி வினா, வில்லிசை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள் ளன. போட்டிக்கு விண்ணப்பிப்போர் பெயர், வகுப்பு, பாடசாலை, போட்டியின் பெயர், தொ.பே. இலக்கம் ஆகியவற்றுடன் அதிபரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம், இல-153, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (வ)

# டிறிபேர்க் கல்லூரிக்கு கிரிக்கெட் வளர்ச்சிக்கு நிதி உதவி

தென்மராட்சி, செப்.26
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வளர்ச்சிக்கு கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் ஒரு லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளார். கல்லூரி யின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு வருடாவருடம் நிதி உதவி வழங்க வுள்ளதாகவும் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தெரிவித்தார்.
கல்லூரி கிரிக்கெட் ஆடுகளத்தை ஜூலை மாதம் ஆரம்பித்து வைத்த அ.கிருபாகரன் கல்லூ ரியின் கிரிக்கெட் அணியின் அனுசரணையாளராக செயற்படவுள்ளதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

இளவாலை, போயிட்டியில்
26.09.1963இல்
மண்ணுலகப் பிறப்பெடுத்து
30.06.1987இல்
விண்ணகப் பிறப்பில் ஒளிரும்

இராசநாயகம்
அன்ரனிதாஸ் அருளழகனின்
பூவுலகத் தோற்றத்தின்
50ஆம் ஆண்டு நிறைவு



இராசநாயகம் குடும்பத்தினர்
போயிட்டி, இளவாலை.
(32051)(7.3)

வைகர்
அமரர் வி.சிவசுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்) அவர்களின்



17 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை வைபவம்
தலைவர்: இ.ஈஸ்வரநாதன்– அதிபர்
காலம் : நாளை (27.09.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி
இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

நிகழ்ச்சிகள்
1. இறைவணக்கம்
2. அதிபர் உரை
3. நினைவுப் பேருரை
விடயம்: "அறிவாற்றலும் ஒழுக்கமும் உள்ள சமுதாயத்தை உருவாக்குதல்"
வழங்குபவர்: திரு.S.சத்தியசீலன் (B.A, MA, SLAS-1)
(செயலாளர், கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வட மாகாணம்)
4. நிறைவுரை: வைத்திய கலாநிதி S.சிவானந்தராஜா
(யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)
5. கல்லூரிக்கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ்/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.


# சிறுவர் பாடசாலை மண்டபம் திறப்பு

சுழிபுரம், செப். 26
பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினரால் புதிதாகக் கட்டப்பட்ட சிறுவர் பாடசாலை மண்டபம் ஞாயிறு பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.
மன்றத் தலைவர் வே.குமரகுரு தலைமையில் மன்றக் காப்பாளர் திரு.இ.தம்பையா மண்டபத்தை திறந்து வைத்தார். (வ-28)

# சிறப்பாக இடம்பெற்ற தீர்த்தத் திருவிழா

சுழிபுரம், செப். 26
சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலய தீர்த்தத் திருவிழா முதல் முறையாக திருவடி நிலை வாகை வைரவர் தீர்த்த வளாகத்தில் நடை பெற்றது.
ஐயனார் ஆலய புதிய தேர்த் திருவிழாவைத் தொடர்ந்து திருவடி நிலையில் அமைந்துள்ள தீர்த்த மண்டபத்துக்கு ஐயனார் எழுந்தருளி தீர்த்த நிகழ்வுகள் நடைபெற்றன.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
நடராசர்
பாலகணேசன்

| உதிப்பு | ஒடுக்கம் |
|---|---|
| 29.05.1942 | 07.10.2012 |

திதி : ஸப்தமி

எங்கள் குல தெய்வமென
எழில் தந்த திருவே
எம்மையெல்லாம் ஏற்றிவைத்த
அற்புத நல் மணியே
இங்குமை நாமிழந்து
ஓராண்டு ஆன
தினத்திலுமை நாம் நினைந்து
அஞ்சலிகள் செய்கின்றோம்

அங்கையது கூப்பியுமை
அடிமலர்கள் பணிந்தோம்
அகலாத பெருஞ்சோகக்
கடலினிலே விழுந்தோம்
பொங்கி வரும் உம் நினைவே
எமையின்று வருத்த
இருகரமும் கூப்பியுனை
அஞ்சலிக்கின்றோம் நாமே.

(32029)(4.3)

குடும்பத்தினர்.
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

## தசாக கிருஹயக்ஞ அழைப்பிதழ்



நிகழும் விஜய வருஷம் புரட்டாதித் திங்கள்
2ஆம் நாள் (18.09.2013) புதன்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் ஸ்ரீமதி இராசம்மா
இராமநாதக்குருக்கள்

(இணுவில் கந்தசுவாமி கோயில்
பரம்பரைப் பூசகரான பிரதம குருவின் துணைவி)

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

புரட்டாதி 11ஆம் நாள் 27.09.2013 வெள்ளிக்கிழமை -மு.ப 10.00 மணி தசாகம்
புரட்டாதி 12ஆம் நாள் 28.09.2013 சனிக்கிழமை -மு.ப 10.00 மணி ஏகோதிஷ்டம், மாசிகம்
புரட்டாதி 13ஆம் நாள் 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை -மு.ப 10.00 மணி சபிண்டீகரணம்
புரட்டாதி 14ஆம் நாள் 30.09.2013 திங்கட்கிழமை -மு.ப 10.00 மணி கிருஹயக்ஞம் பகல் 12.00 மணி சமாராதனை

மேற்படி கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசுவாமி கோயிலடி, இணுவில் மேற்கு,
இணுவில். தொ.பே:021 373 4453 (32021)(10.6;3)
குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவுகளில்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30.11.1954 | 03.10.2007 |

அமரர் கந்தப்பிள்ளை
இராசரத்தினம்

திதி : ஸப்தமி



காலங்கள் மாறினாலும்- உன்
நினைவுகள் மட்டும் மாறவில்லை
ஏங்குதப்பா எம் மனம்
என்றென்றும் உனை எண்ணி
நோயில் மடிந்து பாயில் படுக்குமுன்பே
சென்ற இடத்தில் எமைப் பிரிந்து சென்றீரே
மீண்டும் பிறப்பெடுத்து எம் அருகே வர
ஆண்டவனை வேண்டுகிறோம்

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
தாவளை, இயற்றாலை, கொடிகாமம்.
(31778)(45.6)

## நினைவலைகள்

16ஆம் ஆண்டு — 8ஆம் ஆண்டு



| மலர்வு | உதிர்வு | மலர்வு | உதிர்வு |
|---|---|---|---|
| 15.01.1917 | 26.09.1997 | 05.09.1919 | 02.06.2005 |


அமரர் அரியகுட்டி நாகரத்தினம் (குகன் ஸ்ரூடியோ அதிபர்)
திருமதி சின்னம்மா நாகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை)

அன்புத் தெய்வங்களே! உங்கள் வழிகாட்டலிலே,
உங்கள் நினைவுகளோடு உங்களை வணங்கி
வாழ்ந்துவரும் எங்களுக்குத் தொடர்ந்தும்
உங்கள் நல்லாசி வேண்டி நிற்கின்றோம்.

குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(C12100)(7.6.3)

## மாணவருக்கு கருத்தரங்கு



மட்டக்களப்பு, செப். 26

பட்டிருப்பு கல்வி வயைத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 2013 ஆண்டில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான 'கல்வி மேம்படுத்தல்" கருத்தரங்கு வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் 1390 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

20 வளவாளர் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கருத்தரங்கில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான கைநூல்களும் வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ள நாயகம், வழக்கறிஞர் வே.தேவசேனாதிபதி , கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-10)

# நிக்காய பௌத்த பீடத்தையும் பொதுபலசேனா தாக்கக்கூடும்

## விக்ரமபாகு எச்சரிக்கை



கொழும்பு,செப்.26

இலங்கையில் பௌத்த படையணி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுபலசேனா, இராவணா பலய போன்ற அமைப்புகள் ஒரு நாள் ஜனாதிபதியின் வீர பௌத்த சியாம் மா நிக்காய பௌத்த பீடத்தையும் தாக்கக் கூடும்.

இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது பல சேனாவை சரியாகக் குறிப்பிட வேண்டுமானால் பலு சேனா (நாய்ப்படை) என்றே கூற வேண்டும். இராவணா சேனாவை வானர சேனை என்றே குறிப்பிட வேண்டும்.

ஒரு நாள் இவர்கள் ஜனாதிபதியின் பௌத்த சியாம் மா நிக்காய பௌத்த பீடத்தையும் தாக்கக் கூடும்.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வந்து திரும்பிச் செல்லும் போது நாட்டின் அனைத்து துறைகளிலும் சர்வாதிகாரம் பரவியுள்ளது என்று கூறினார். அவர் அப்படி கூறி விட்டு சென்ற பின்னர் அரசு பிடல் காஸ்ரே மற்றும் சாவவேஸ் போன்று ஏகாதிபத்திய விரோத கதைகளை கூறுகிறது.

அரசு இலங்கையில் பள்ளிவாசல்கள், விகாரைகள் உட்பட சகல இடங்களிலும் தனது அதிகாரத்தைப் பரப்பியுள்ளது.

நாங்கள் தேர்தல் நடத்துகிறோம்: அதனால் நாங்கள் சர்வாதிகாரிகள் இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஹிட்லரும் தேர்தல் நடத்தினார். தனது சக்திகளை நாட்டின் அனைத்துத் துறைகளிலும் நுழைத்து மதவாத, இனவாத ஜேர்மனிய படையை ஏற்படுத்தினார். அது போல் இலங்கையில் பௌத்த படையணி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

-என்றார். (ச)



யாழ்ப்பாணத்தில் பல புதிய நாடக முயற்சிகளை நடைமுறைப்படுத்தி வரும் செயற்திறன் அரங்கக் குழுவினரின் "திறந்த வெளி நாடகத்திருவிழா 2013" இன் தொடர்ச்சி கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் அண்மையில் மேடையேற்றப்பட்டது. அதில் இடம் பெற்ற நாடகக்காட்சிகள் இவை (ச-10)

# பேரவைக் கூட்டத்தை புதனில் தவிருங்கள்

## செல்வராசா எம்.பி. வேண்டுகோள்



மட்டக்களப்பு, செப். 26

புதன்கிழமைகளில் கிழக்குப் பல்கலைக்கழக பேரவைக் கூட்டம் கூட்டப்படுவதை தவிர்க்குமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா உயர் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரவைக் கூட்டம் வழமையாக புதன்கிழமைகளில் கூட்டப்படுகின்றது. அதனால் கூட்டத்தில் மட்டக்களப்பு அரச அதிபரும் கலந்து கொள்கிறார்.

பொதுமக்கள் தினமான புதன்கிழமைகளில் உயர் அதிகாரிகள் கூட்டங்களில் கலந்து கொள்வதால் பொது மக்களால் அவர்களை சந்திக்க முடிவதில்லை.

இந்த நிலையில் புதன்கிழமைகளில் பேரவைக் கூட்டம் கூட்டப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இதேவேளை புதன்கிழமைகளில் இடம்பெறும் பொது வைபவங்களிலும் உயர் அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். அதனால் கூட்டம் முடியும் வரை பொதுமக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது-என்றார். (ச-10)

> புதன்கிழமைகளில் இடம் பெறும் பொது வைபவங்களிலும் உயர் அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

# ஐ.தே.க. தலைமைத்துவத்தை மாற்ற ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றம்

கொழும்பு,செப்.26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் உட்பட கட்சி மறுசீரமைக்கப்பட்ட வேண்டும் எனத் தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர்கள் குழு செவ்வாய்க்கிழமை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

ஜோசப் மைக்கல் பெரேராவின் மகனும், மேல் மாகாண சபையின் உறுப்பினருமான ஸ்ரீநாத் மஹேந்திர பெரேரா, இதற்கான யோசனைகள் அடங்கிய பிரேரணையை உறுப்பினர் குழுவிற்கு சமர்பித்துள்ளார் என்று சிரேஷ்ட மாகாணசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்கள் முடி வடைந்துள்ள நிலையில், இனிவரும் காலத்தில் மேல் மாகாணசபை கலைக் கப்படவுள்ளதால், அந்தத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டு மாயின் நிச்சயமாக தலைமைத்துவத்தில் மாற் றம் ஏற்பட வேண்டும் என ஸ்ரீநாத் மஹேந்திர பெரேரா தெரிவித்துள்ளார் என்று அந்த சிரேஷ்ட உறுப்பினர் கூறினார்.

இந்தப் பிரேரணை விவகாரம் குறித்து ஐ.தே.க செயற்குழுவுக்கு அறி விக்கப்படும் என்று மேல்மாகாணசபையின் எதிர்க் கட்சித் தலைவர் மஞ்சு ஸ்ரீ அரங்கல குறிப்பிட்டார். (ச-சி)

## இரத்தினக்கல் தோண்டிய இருவர் கைது



கொழும்பு,செப்.26

பிபில, இப்பன்னா ஓயாவை அண்டியுள்ள காட்டில் இரத்தினக்கல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்று பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான சட்டவிரோத அகழ்வுகளால் ஆற்றின் நீரோட்டமும் காட்டின் வளமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## விகாராதிபதியின் கடனட்டையுடன் திருடன் மாயம்

கொழும்பு,செப்.26

கிரிந்திவெல, மாஹல்லொலுவ புராணடெம்பிட்டிய விகாரைக்குள் சனிக்கிழமை பகலில் புகுந்த திருடனொருவன் விகாராதிபதியின் கடனட்டையையும் 3 ஆயிரம் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக கிரிந்திவெல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விகாராதிபதியான நெலுகம நந்தசார தேரர் செய்த இந்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபரைத் தேடிப்பிடிக்கும் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது.

திருடப்பட்ட கடனட்டை மூலம் சந்தேக நபர் 3 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்று பின்னர் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

# வசதிக் கட்டணத்தை தவிர வேறு கட்டணத்தை அறவிடக்கூடாது

## மேல் மாகாண பாடசாலைகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு,செப்.26

இந்த முறை முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொளளும் போது பெற்றோரிடமிருந்து வசதிக் கட்டணங்கள் தவிர்ந்த வேறு கட்டணங்களை அறவிடக்கூடாது.

இவ்வாறு மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக, அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று மாகாண கல்விப் பணிப்பாளர் ஜி.என். அய்லப்பெரும தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திக் கட்டணம் என்ற அடிப்படையில் அதிபர்களால் பெற்றோரிடமிருந்து நிதி அறவிடப்படுவதனை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப்பரீட்சை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

சில பாடசாலைகளில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அதற்கான பட்டியலும் தயாரிக்கப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# விதிமுறையை மீறும் மருந்தகங்கள் கோரவேண்டும் மன்னிப்பு

## வருகிறது புதிய ஒழுங்கு விதி

கொழும்பு,செப்.26

சுகாதார அமைச்சு வழங்கியுள்ள ஒழுங்கு விதிகளை தனியார் மருந்தகங்கள் மீறி வருகின்றன. அவ்வாறு மீறி நடக்கும் மருந்தகங்கள் பத்திரிகைகளினூடாக மக்களிடம் மன்னிப்பு கோரும் விளம்பரமொன்றை வெளியிட வேண்டும் என்ற புதிய ஒழுங்கு விதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடத அதிகார சபை தெரிவித்துள்ளது.

தனியார் மருந்தகங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு பல ஒழுங்குவிதிகளை முன்வைத்துள்ளது.

இதனை மீறும் மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அபராதமும் அறவிடப்படுகிறது.

இதற்கு மேலதிக மாகவே புதிதாக பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டு மன்னிப்புக் கோரும் சட்ட வரைவு ஒன்றை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வாசனை திரவியங்கள் மற்றும் ஔடத அதிகார சபைத் தலைவர் ஹேமந்த பெனரகம கூறினார்.

மருந்தகத்தை கட்டாயம் பதிவு செய்தல், பயிற்றப்பட்ட மருந்தாளர்களை சேவையில் ஈடுபடுத்தல், மருத்துவர்கள் சிபார்சு செய்யாத மருந்துகளை வழங்காதிருத்தல், குளிரூட்டுதல், அரசால் பதியப்பட்ட மருந்துகளை விற்றல், காலாவதியான மருந்துகளை விற்காதிருத்தல் உட்பட பல ஒழுங்கு விதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை மீறும் மருந்தகங்கள் தமது செலவில் மக்களிடம் மன்னிப்பு கோரும் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

# அநாவசியமாக மாத்திரைகளை பயன்படுத்துவதைத் தவிருங்கள்

நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகளை அநாவசியமான முறையில் பயன்படுத்துவதை நோயாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகள் நாட்டில் அநாவசிமான முறையில் பயன்படுத்தப்படுவது அதிகரித்துள்ளதால் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகளை அநாவசியமான முறையில் நோயாளர்களுக்கு சிபாரிசு செய்ய வேண்டாம் என்று மருத்துவ அதிகாரிகளிடமும், இவ்வகை மாத்திரைகளை நோயாளர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக விநியோகிக்க வேண்டாமென்று மருந்தாளர்களிடமும், மருந்தகங்களிடமும் சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகள் நோயாளர்களுக்கென அநாவசியமான முறையில் சிபாரிசு செய்யப்படுவதும், விநியோகிக்கப்படுவதும் கண்டறியப்படுமாயின், அந்த நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மருந்துப் பொருள் அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்.

இந்த மாத்திரைகள் அநாவசியமான முறையில் பயன்படுத்தப்படும் போது, அது நோய்க்கிருமிகளுக்கு இசைவாக்கமடையும். அதனால் நோய்களுக்குப் பதிலளிக்காத நிலைமை ஏற்படும் என்று அவர் கூறினார். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**அலுவலக இணைப்பாளர் தேவை**

அலுவலகம் ஒன்றுக்கு சிங்களம், நன்கு பேசக்கூடிய ஆங்கில அறிவு ஓரளவுள்ள பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: (32023) (5.3)
071 598 0980,071 872 2353

**பணிப்பெண் தேவை**

டுபாய் நாட்டில் நிறுவனம் ஒன்றில் உயர் பதவி வகிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருடைய வீட்டுக்கு பணிப்பெண் தேவை. இலவச உணவு,போக்குவரத்து மற்றும் மெடிக்கலுடன் மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

(32035)(5.3)
தொடர்பு: 077 041 1742, 077 728 6201

## 2012 /2013 இற்கான வருமானவரிக் கொடுப்பனவுகள் மற்றும் வரிவிவரத்திரட்டுக்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக்குரிய வரிமதிப்பாண்டு 2012/2013 ற்கான வருமான வரி விவரத்திரட்டுக்கள் அஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன்படி 2012/2013 ஆம் ஆண்டுக்கான உரிய வருமானவரிக் கொடுப்பனவுகள் 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைய இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத தப்படவேண்டியதுடன் விவரத்திரட்டுக்கள் இவ்வாண்டு நவம்பர் 30ற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவ்விவரத்திரட்டு பூர்த்தி செய்வதற்குரிய அறிவுறுத்தல்கள் அடங்கிய கையேடு வரிவிவரத் திரட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் விடயங்களை வரி செலுத்துவோர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2012/2013 ஆண்டுக்கான வரியற்ற விடுதொகை தனிப்பட்ட ஊழிய வருமானம் தொடர்பில் 600,000 ரூபாவாகவும், ஏனைய வருமானங்கள் தொடர்பில் 500,000 ரூபாவாகவும் இருக்கும்.

**தனிப்பட்டவர்களின் வருமான வரி வீதம**

| வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூபா) | வரி வீதம் |
|---|---|
| முதல் 500,000 | 4% |
| அடுத்த 500,000 | 8% |
| அடுத்த 500,000 | 12% |
| அடுத்த 500,000 | 16% |
| அடுத்த 1,000,000 | 20% |
| மீதி வரிவிதிக்கத்தக்க வருமானம் | 24% |

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கு தனிப்பட்டவராக இருப்பினும் அல்லது கம்பனிகளாயினும் ஆகக்கூடிய வருமானவரி 10% ஆகும். பொருள்களை வாங்கி, விற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கோ அல்லது நிறுவன ரீதியற்ற முறையில் சேவை வழங்குனர்களுக்கோ இச்சலுகை வீதம் ஏற்புடையதல்ல.

600,000 ரூபாவை விஞ்சும் பங்குடமை வியாபாரத்தைப் பொறுத்தவரையில் அதன் பகிர்வுக்குரிய இலாபங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீது 8% வருமானவரி ஏற்புடையதாகும். மேலும் இவ்வாறு செலுத்தப்பட்ட பங்குடமை வரித்தொகையானது பங்காளர்களின் சம்பளத்தையும், உள்ளடக்கிய இலாபநட்ட விகிதங்களுக்கேற்ப வரிவரவு (Tax credit) பங்காளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் ஆயின் அதன் வரிவிதிக்கத்தக்க வருமானம் 5,000,000 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் 15% வருமானவரியும், ஏனைய கம்பனிகள் 28% இலும் வருமான வரியைச் செலுத்த வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGO) தமக்குக் கிடைத்த பெறுகைகளில் 3%த்தினை வரிவிதிக்கத்தக்க வருமானமாகக் கருதி அதன் மீது 28% வருமான வரியைச் செலுத்த வேண்டும். இதன்படி மொத்தப் பெறுகைகளில் செயற்பாட்டு வீதம் 0.84% (3% x 28%) எனக் கருதிக் கொள்ளலாம்.

ஏதேனும் களரிகள் (Clubs) அல்லது கழகங்கள் தமது வரிவிதிக்கத்தக்க வருமானம் மீது 10% வருமானவரியைச் செலுத்த வேண்டும்.

இவைதவிர வியாபார அல்லது வர்த்தக இலாபங்களை வெளிப்படுத்துவோர் வரிவிவரத திரட்டுடன் தமது இறுதிக் கணக்குக் கூற்றுக்களையும் இணைக்க வேண்டும். 2010 ஆம் ஆண்டிலிருந்து வியாபார மற்றும் வர்த்தக நிலையத்தில் ஒழுங்கான முறையில் கணக்குகளை பேணுவதன் முக்கியத்துவதை எமது திணைக்களம் வலியுறுத்தி வந்துள்ளது. அத்துடன் இது தொடர்பான கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங் களை 5 வருடங்களுக்கு பாதுகாப்பாக பேணிவரவேண்டியமை வரிச்சட்டங்களின் கட்டாயமானதாகும்.

மேலும் இறுதிக் கணக்குக் கூற்றுக்கள் பெயரளவில் இல்லாது விரிவான முறையில் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வியாபார முயற்சிகளை நடத்துவோர் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான கணக்குக் கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டும். அவ்வாறு சாத்தியமில்லையெனில் ஒரே கணக்குக்கூற்றில் வெவ்வேறு வியாபார முயற்சிகளின் கொள்வனவு மற்றும் விற்பனை களை வெவ்வேறாகக் காட்டுதல் அவசியமானதாகும்.

வியாபார முயற்சிகளை நடத்துவோர் வழமை போல் கணக்கறிக்கைகளை இணைக்காமல் உத்தேச வரிகளை மட்டும் செலுத்தி விவரத்திரட்டுக்களை சமர்ப்பிப்போர் விடயத்தில் திணைக்களம் மிகவும் கண்டிப்பாக இருக்கும். வரிவிவரத்திரட்டுக்கள், கணக்குகளின்றி சமர்ப்பிக்கப்படுமிடத்து உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 163(3)(b) பிரிவுக்கமைய வருமானத்தை மதிப்பீடு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். ஏற்கனவே காலாண்டு அடிப்படையில் சுயமதிப்பீட்டு முறையில் வருமான வரியைச் செலுத்தாதவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உரிய வரியைச் செலுத்துவதன் மூலம் தாமதத்திற்கான தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தவிர்த்துக்கொள்ள முடியும்.

(சி121551-23-14)

பா.சிவாஜி,
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ் பிராந்திய அலுவலகம்.

## தங்கத்துடன் மூவர் கைது

இலங்கையில் இருந்து சட்டவிரோத மாக மும்பைக்கு கொண்டு செல்ல முயன்ற 10 மில்லியன் ரூபா பெறுமதிக்கும் அதிகமான தங்கத்துடன் மூவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 20 தங்க பிஸ்கட்டுகளும், தங்க ஆபரணங்களுமே கைப்பற்றப்பட்டுள்ளன. கொழும்பைச் சேர்ந்த மூவரே இவ்வாறு தங்கத்தை கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர்.

அவர்கள் கடத்திச் செல்ல முற்பட்ட தங்கத்தின் மொத்த பெறுமதி 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானது என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

## 3மாகாணங்களுக்கு புத்தாண்டுக்கு முன்னர் தேர்தல்



கொழும்பு,செப்.26


2014 ஆம் ஆண்டு தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் இன்னும் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கூறப்படுகிறது.

ஊவா, வடமத்திய, மேல் ஆகிய மூன்று மாகாணங்களுக்கான தேர்தலையே அரசு நடத்துவதற்கு தீர் மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டிற்கு பின்னர் அதுதொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## துறைமுகங்களுக்கு அருகில் 3 சிமெந்து தொழிற்சாலைகள்

### புதிதாக நிறுவ திட்டமிடுகிறது அரசு



கொழும்பு.செப்.26

சிமெந்து அரைத்தல் மற் றும் பொதியிடுதல் ஆகிய வற்றுக்கான தொழிற்சா லைகளை புதிதாக நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் புதிதாக நிறு வப்பட்ட மற்றும் ஏற்கனவே உள்ள துறைமுகங்களுக்கு அருகில் உத்தேச புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய பிரதேசங் களிலுள்ள துறைமுகங்க ளுக்கு அருகில் குறித்த சிமெந்து தொழிற்சாலை கள் அமைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் ஆலோசனைக்கு அமைய ஒரு துறைமுகத்துக்கு ஒரு சிமெந்து தொழிற்சாலை என்ற அடிப்படையில் இந்தத் தொழிற்சாலைகள் நிறுவப் படவுள்ளன.

இலங்கையிலுள்ள அனைத்து துறைமுகங்களிலும் தொழிற்சாலை நிறுவுவதற்கான அமைவிடங்களை தெரிவு செய் வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடல், துறைமுக அதிகார சபையினால் முன் னெடுக்கப்பட்டு வருகின் றன.

இலங்கையிலுள்ள துறை முகங்களுக்களுக்கு அருகில் சிமெந்து தொழிற் சாலைகள் அமைப்பதற்கான இடங் களை குத்தகைக்கு வழங்கு வதற்கான அனுமதி அண் மையில் அமைச்சரவையி னால் வழங்கப்பட்டது. (ச)

**அகவை ஒன்றில் நினைவஞ்சலி**



தோற்றம்
31.03.1937

மறைவு
07.10.2012

அமரர் திருநாவுக்கரசு நாகரெத்தினம்
(சாந்தி அச்சக உரிமையாளர்)
திதி: அபரபஷ்ய ஸப்தமி

அன்பாலெமை வளர்த்தெடுத்து ஆளாக்கி விட்டு
கண்காணா (இ) விடம் புகுந்த - இன்னுயிரே
ஆண்டொன்று சென்றிடினும் ஆறாது
2ஆம் ஆண்டு நினைவு
என்றென்றும் எம் மனதில் உண்டு.

தயா அச்சகம்,
575, K.K.S. வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்.

குடும்பத்தினர்.

(32054)(10,14)

**பொது அறிவுப் போட்டி நடைபெறும் நிலைய மாற்றம்**

நவ மகாஜன சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் 100 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நான்கு நிலையங்களில் நடத்த இருப்பதாக முன்னர் அறிவித்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் அதனை இரத்துச் செய்து நாளை 27.09.2013 காலை10.00 மணிக்கு மகாஜனக் கல்லூரியில் மட்டும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

(ஒப்பம்) இணைச்செயலாளர், நூற்றாண்டு விழாச்சபை, மகாஜனக் கல்லூரி.

(c/12154)
(3.11)

**பொதுக்கூட்டம்**



மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை
சிவன்கோவில், ஈழத்து சிதம்பர தேவஸ்தானம், -
காரைநகர்.

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் (2013-2014) தெரிவும் எதிர்வரும் 06.10.2013 ஞாயிறு காலை 9.00 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களை குறித்த நேரத்தில் சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| ஆதீனகர்த்தர்கள் | தலைவர் | செயலாளர் |
|---|---|---|
| ஆ. அம்பலவிமுருகன், மு. சுந்தரலிங்கம். | E.S.P நாகரத்தினம் | நா. பாலகிருஷ்ணன் |

(32052) (10,3)

# தமிழீழத்தை அமைக்க தமிழக அரசுகளும் முயற்சி

## தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

வடக்கில் தனித் தமிழீழத்தை உருவாக்க தமிழக அரசு கடும் முயற்சி மேற்கொண்டு வருவது தெரிந்த விடயமே என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமர சேகர தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளமை குறித்து அவரிடம் கேட்டபோது மேலும் தெரிவித்தததாவது:

கடந்த கால அரசியல் நிலைமைகளை நோக்கும் போது தமிழக அரசு இலங்கை அரசுக்கு எதிராகவே செயற்பட்டு வந்ததையும் தனித் தமிழீழம் அமைக்க விருப்பம் காட்டியதையும் பலரும் அறிவர். அன்று உருவாக்க முயன்ற தமிழீழத்தை இன்று விக்னேஸ்வரனைக் கொண்டு அமைப்பதற்கு தமிழக அரசு முயற்சிக்கிறது.

தமிழக அரசு தமிழீழம் கோருவது வியக்கத்தக்க விடயமல்ல. முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்பட அனைத்துக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் பிரபாகரனை மாபெரும் வீரனாக காட்ட முயற்சித்தார்கள். விடுதலைப் புலிகள் அன்று எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டார்களோ அதைத் தான் மறைமுகமாக கூட்டமைப்பினரும் மேற்கொண்டு வருகின்றனர். கூட்டமைப்பின் வெற்றியை அடுத்து வடமாகாண சபை முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைப்பதில் கூட பிரபாகரனின் வழி பின்பற்றப்படுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. - என்றார். (ஐ-10)

## கட்சித் தாவல்களுக்கு இனிமேல் இடமில்லை

கொழும்பு,செப்.26

கட்சி தாவல்களுக்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன் சேகா தெரிவித்தார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர் இந்தமுறை மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளனர்.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் உறுப்பினர்கள் கட்சி மாறினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

எனவே மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் மக்கள் ஆணையைக் கட்சி உறுப்பினர்கள் புறக்கணிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

அவ்வாறு முயற்சித்தால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச)

# முன்னர் வெடிக்காத குண்டுகள் தேர்தலின் பின் வெடிப்பது ஏன்

## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், செப் 26

போர் முடிவடைந்து 4 வருடங்களில் வெடிக்காத குண்டுகள். தேர்தல் முடிந்த நான்கு நாள்களுக்குள் வெடிப்பது ஏன்? தமிழ் மக்களைப் பயப்பீதியில் வைத்திருக்க இராணுவமே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டிருக்க வேண்டும் என குற்றஞ்சாட்டிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்தத் தாக்குதலாளிகள் மீது எங்கள் இளைஞர்கள் மீண்டும் அடித்தால் அதற்கு இந்த அரசே காரணம் எனவும் தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தவர்கள் மீது பரவலாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணசபைத் தேர்தல் முடிவுற்ற பின்னர் யாழ். மாவட்டம் உள்ளிட்ட வட பகுதியில் வன்முறைகள் அதிகரித்திருக்கின்றன. பெரும்பாலான தாக்குதல்களில் இராணுவத்தினர் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளனர். மல்லாகத்தில் கிரனேட் வீச்சு இடம்பெற்றிருக்கின்றது. இன்று இங்கே கிரனேட் வைத்திருப்பவர்கள் இராணுவத்தினர் அல்லது அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குகுழுவினர். இந்த இரு தரப்பில் யாராவது ஒருவரே இந்தத் தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றனர்.

போர் முடிந்து 4 வருடங்களாக வெடிக்காத கிரனேட்டுக்கள், தேர்தல் முடிந்து 4 நாள்களுக்குள் வெடிப்பது ஏன் ? தமிழ் மக்களை அச்சமான நிலைக்குள் வைத்திருப்பதற்கே அவர்கள் விரும்புகின்றனர். தேர்தலில் தம்மைத் தோற்கடித்த தமிழ் மக்களை பழி வாங்குவதற்காக இராணுவத்தைப் பயன்படுத்துகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்தத் தாக்குதலாளிகளை எங்களது இளைஞர்கள் திருப்பித் தாக்கினால் நிலைமை என்னவாகும். கலவரம்தான் வெடிக்கும். இதைத்தான் இந்த அரசு விரும்புகின்றதா ?

நாங்கள் தமிழீழத்தைக் கோருவதாக குற்றம்சாட்டும் அரசு முதலில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு இராணுவத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் - என்றார். (த-5)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ்.வரும்

திகதி இலங்கைக்கு வருகை தரும் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது சல்மான் குர்ஷித் யாழ்ப்பாணத்துக்கும் வருகிறார். வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள விக்னேஸ்வரனையும் அவர் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று தெரிய வருகிறது.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்திப்பது தொடர்பில் இந்தியத் தூதரகம் தன்னுடன் கலந்துரையாடியுள்ளதாக அவர் கூறினார். (த-5)

### ஏனைய

ஒத்துப்போகும் தன்மையோடும் வட பகுதி மக்களின் அவசர தேவைகளை நிறை வேற்றிக் கொள்ளும் விதத்தில் ஆக்கபூர்வமாகச் செயற்படும் படியாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

30 வருட காலப் போரின் பிடியிலிருந்து விடுபட்டிருக்கும் அந்தப் பிரதேசத்தின் தேவைகள் அவசரமாகவும் காத்திரமாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருக்கின்றன. அவ்வாறான ஒத்துழைப்பான அணுகுமுறை மூலமே சம்பந்தப்பட்ட இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்துக்கான வழியினை உருவாக்குதல் சாத்தியமாகும் - என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ப)

### இறுதிக்

றினார் பான் கீ மூன்.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில், ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது. இந்த அறிக்கை இன்னமும் முழுமையாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே பான் கீ மூன் பொதுச் சபையில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

"இலங்கையில் ஐ.நா.வின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக மீளாய்வில் ஐ.நா. அமைப்பு ரீதியாகத் தோல்வியைத் தழுவியுள்ளது என்று தெரியவந்துள்ளது.

நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து ஆதரவை வழங்கவில்லை. ஐ.நா. அமைப்பு பொருத்தமான அல்லது முழுமையாகச் செயற்படவில்லை" என்றும் ஐ.நா.செயலர் அங்கு குறிப்பிட்டார்.

பான் கீ மூன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஐ.நா.பொதுச் சபையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இருந்தார். (த-5)

### மனித

தினம் உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

வட மாகாணத்தில் வாழ்கின்ற மக்களுக்கு, மாகாண சபைக்கான தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலின் போது கிடைத்த சந்தர்ப்பமானது முக்கியமான நிகழ்வாகும். சுமார் கால் நூற்றாண்டின் பின்னர் அதை செய்யக் கிடைத்தமை எனக்கு சட்டபூர்வமான திருப்தியைத் தரும் விடயமாகும். அரசியல் அதிகாரமளித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களை கவனத்தில் எடுத்துக்கொள்கின்ற போது இந்நடவடிக்கையின் தீர்க்கமான முக்கியத்துவத்தைப் பற்றி சந்தேகம் இருக்க முடியாது. இலங்கைவாழ் அனைத்து மக்களின் நன்மைக்காக இம் முயற்சிக்கும் அவற்றின் வெற்றிக்கும் உதவுவதற்கு சர்வதேச சமூகத்திற்கு தெளிவான பொறுப்பு இருக்கிறது.

**இலங்கை மீது பாராபட்சம்**

தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்ற முன்னேற்றத்தையும் ஐக்கிய நாடுகளின் பொறிமுறையுடன் நிலைபேறான பங்கேற்பையும் பொருட்படுத்தாமல் இலங்கை மீது காட்டப்படுகின்ற சமச்சீரற்ற தெரிவிப்பைப்பற்றியும் பல்தரப்பு வரையறையின்மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சமநிலையற்ற கவனிப்பையும்பற்றி பெரும்பாலான நாடுகள் ஆச்சரியப்படுகின்றன" என்றார். (சி)

### தமிழருக்கு

நிலையிலும் தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. இறுதிப் போரின்போது அரசுக்கு பல்வேறு நாடுகள் உதவின.

போரின்போதும் போருக்குப் பின்னரும் உலக நாடுகளுக்கும், ஐ.நா.சபைக்கும் பல்வேறு உறுதி மொழிகளை ஜனாதிபதி வழங்கியிருந்தார். இவை எவையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை" என்று சம்பந்தன் குறிப்பிட்டார்.

"மனித உரிமைகள் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வட மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் இதனையும் சர்வதேச சமூகம் கணக்கெடுக்கவில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் மக்களுக்குத் தேவை சுய கௌரவத்துடன் கூடிய அரசியல் தீர்வும் அவர்களது இழப்புக்களுக்கு உரிய நீதியும் தான். இதைவிடுத்து வீதிகளை அமைத்து மின்சாரக் கம்பங்களை நடுவது போன்றவற்றால் மக்களைத் திருப்திப்படுத்த முடியாது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"வட மாகாணத்தில் நடந்து முடிந்த தேர்தல் கூட சர்வதேச அழுத்தத்தின் பின்னணியில் தான் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் பல குறைபாடுகள் காணப்பட்டன. இருந்த போதும் மக்கள் தமது கருத்தை தெளிவாக அரசுக்கு உணர்த்தியிருக்கின்றார்கள். இத் தேர்தலை அரசு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி உண்மையான நல்லிணக்கத்தை எற்படுத்த வேண்டும்" எனவும் சம்பந்தன் வலியுறுத்தினார்.

"அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினாலே விமர்சனங்களில் இருந்து அரசினால் விடுபட முடியும். ஆனால் அரசுக்கு ஒரு திடமான நிலைப்பாடு இல்லை. எனவே தான் இந்தப் பரிந்துரைகளைக் கூட நடைமுறைப்படுத்த முடியவில்லை" என்று அவர் மேலும் கூறினார். (த-400)

### கீரிமலை

தேசத்தில் புதிதாக மூன்று மாடிகளைக் கொண்ட மிகப் பிரமாண்டமான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதிக்கான வாசஸ்தலமே இவ்வாறு பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கண்டியில் ஜனாதிபதி வாசஸ்தலம் உள்ளதைப் போன்று வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதி வாசஸ்தலமாக இது அமைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளில் முழுக்க முழுக்கச் சீருடையினரே ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### தியாகி

பனின் கோரிக்கை களைப் பாரத தேசம் கணக்கில் எடுக்கவில்லை.

இதனால் செப்ரெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை நல்லூரில் முற்பகல் 10.48 மணிக்கு திலீபன் சாவைத் தழுவிக் கொண்டார்.

திலீபன் சாவைத் தழுவிய 26 வருடங்கள் நிறைவடையும் இன்றைய நாளைத் தமிழர்கள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கின்றனர். (த-5)

### மீனவர்

திருந்தார். அவரும் மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். இந்த நிலையில் இரு தரப்பு மீனவர்களின் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக நான் தமிழக முதல் வருடன் பேசத் தயாராக உள்ளேன்" என்றும் விக்னேஸ்வரன் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள தான் எப்போதும் தயாராக இருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார். (த-5)

### 2014 இல்

ளப்பட்டதாகக் கண்டறிய முடியவில்லை.

தனிப்பட்ட குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்நிறுத்துவது உள்ளிட்ட, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, நம்பகமான தேசிய செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போது தொடக்கம், மார்ச் 2014 வரையான காலப் பகுதியைஇலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், தமது சொந்த விசாரணையை மேற்கொள்ளும் கடமை அனைத்துலகச் சமூகத்துக்கு உள்ளதாக நம்புகிறேன்.

**இடம்பெயர்ந்தோர் விவகாரம்**

இடம்பெயர்ந்த பெரும்பாலானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள போதிலும், 2008-09 காலப்பகுதிக்கு முன்னர் இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த் தப்படாதுள்ளனர்.

மீளக்குடியேறிய பலரும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இந்த விவகாரங்கள் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளை நடத்த இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமைகள் சிறப்பு அறிக்கையாளரை அழைக்கும்படி இலங்கை அரசைக் கோரியுள்ளோம்.

**இராணுவத் தலையீடு**

வடக்கு மாகாணசபைத் தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இது அதிகாரப்பகிர்வின் முக்கியமான கட்டமாக இருக்கும் என்று நம்புகிறேன். போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகளான போதிலும், வடக்கில் தொடர்ந்தும் கணிசமான இராணுவத் தலையீடுகள் காணப்படுகின்றன. மீளக் குடியமர்ந்தோர், புனர்வாழ்வு பெற்றவர்கள், தடுப்புக்காவலில் இருந்து விடுதலையானவர்கள் உயர்ந்தளவில் கண்காணிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள், குறிப்பாகப் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், இராணுவத்தினர் உள்ளிட்டோரால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவது கவலையளிக்கிறது.

பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராகக், கடுமையான சகிப்புத் தன்மையற்ற நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

**காணிகள் பறிப்பு**

திருகோணமலை, முல்லைத் தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஆகிய இடங்களில் தனியார் நிலங்கள் பலவந்தமாகச் சுவீகரிக்கப்படுவது தொடர்பான ஆவணங்கள் கிடைத்தன.

சிவில் நிர்வாகத்தின் ஏனைய பகுதிகளிலும், பொருளாதாரச் செயற்பாடுகளிலும் இராணுவம் முக்கிய பங்கு வகிக்கிறது. படைக்குறைப்பு, ஆயுதக்குறைப்பு, சிவில் செயற்பாடுகளில் இருந்து விலகுவது தொடர்பாக இலங்கை அரசு தெளிவானதொரு கால எல்லையை வகுக்க வேண்டும்.

பொலிஸ் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சில் இருந்து வேறாகப் பிரிக்கப்பட்ட போதிலும், புதிய அமைச்சும், பாதுகாப்பு அமைச்சைப் போலவே, ஜனாதிபதியின் நேரடி வழிகாட்டலில் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரின் கீழேயே இயங்குகிறது.

**காணாமற்போனோர் குறித்து விசாரணை**

காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்க, ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த ஆணைக்குழு 1990 தொடக்கம் 2009 வரை வடக்கு, கிழக்கில் காணாமற் போனவர்கள் குறித்து விசாரிக்கவே பணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும், அண்மைக்காலத்தில் நிகழ்ந்த வெள்ளை வான் கடத்தல்கள் குறித்த விசாரணைகள் இதற்குள் உள்ளடக்கப்படவில்லை. எனவே, இலங்கை அரசு ஆணைக்குழுவுக்கான பொறுப்பைப் பரவலாக்க வேண்டும். தடுப்பிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருந்தால், நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் அல்லது, விடுதலை செய்யப்பட வேண்டும், இல்லையேல் புனர்வாழ்வுக்கு அனுப்ப வேண்டும்.

**மத வன்முறைகள் அதிகரிக்கின்றன**

அண்மைக்காலமாக சிறுபான்மையினருக்கு எதிரான மத வன்முறைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாகத் தேவாலயங்களும், மசூதிகளும் தாக்கப்பட்டுள்ளன.

ஆனால், குற்றவாளிகளுக்கு எதிரான உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மனித உரிமை ஆர்வலர்கள், சட்டவாளர்கள், ஊடகவியலாளர்கள், தொடர்ந்தும் துன்புறுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

முல்லைத்தீவில் நான் பயணம் செய்த கிராமங்களுக்குச் சென்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸார், விசாரணை நடத்தியது துரதிர்ஷ்டமான கவலை தரும் விடயம்.

நிறைவேற்று அதிகாரத்தைச் சமப்படுத்தக் கூடிய சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு என்பனவற்றின் அதிகாரங்கள் 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன.

**மனிதஉரிமைகளில் முக்கிய கவனம்**

இலங்கையின் மனித உரிமைகள் நிலையை ஐ.நா மனித உரிமைகள் சபை தொடர்ந்தும் முக்கியமாக கவனம் செலுத்துவதுடன், வரும் மார்ச் மாதம் அதற்கான பரிந்துரைகளையும் முன்வைக்கும் என்றும் நம்புகிறேன். இலங்கை அரசு ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களின் உதவியையும் பெறும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை இலங்கைக்கு வழங்க ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு தயாராகவே உள்ளது - என்றுள்ளது. (த)

# கார்மேல் போய்ஸ் சம்பியன்





குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழ கம் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 1 இலக்கை மாத்தி ரம் இழந்து 105 ஓட்டங்களை பெற்றது.

வலி.வடக்கு, செப்.26
கோப்பாய் அம்மன் கிரிக்கெட் கழகத்தால் நடத்தப்பட்ட அமரர் றீற்ரா அன்ரனி ஞாபகார்த்த 6 பேர் 5 பந்து பரிமாற்றம் கொண்ட போட்டியில் குருநகர் கார்மேல் அணியினர் அபார வெற்றியை பெற்றுள்ளது.
6 பேர் 5 பந்து பரிமாற்றம் கொண்ட போட்டியில் சுன்னாகம் ஜொலி போய்ஸ் அணியை குருநகர் கார்மேல் போய்ஸ் அணி எதிர் கொண்டது .
நாணயற் சுழற்சியில் வெற்றி பெற்ற குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் முதலில் துடுப் பெடுத்தாட முடிவு செய்தனர்.
இதன்படி முதலில் துடுப்பெடு தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழ கம் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 1 இலக்கை மாத்தி ரம் இழந்து 105 ஓட்டங்களை பெற்றது.
இதில் அதிக ஓட்டங்களாக தேசியன் பதினொரு ஆறு ஓட்டங் கள் அடங்கலாக 75 ஓட்டங்க ளையும் அஜன் இரண்டு ஆறு கள் அடங்கலாக 20 ஓட் டங்க ளையும் பெற்றுக்கொடுத் தனர்.
பதிலுக்கு 106 ஓட்டங்களை என்னும் வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஜோலி போய்ஸ் அணி 5 பந்து பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களை மட்டுமே பெற்று போட்டியில் 55 ஓட் டங்களால் தோல்வியத் தழு வியது.
இதில் ஆட்டநாயகனாக கார் மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தேசிக னும் தொடர் நாயகனாக தொடர் முழுவதுமாக 154 ஓட்டங்களையும் 8 இலக்கு களையும் வீழ்த்திய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத் தினை சேர்ந்த அயனும் தெரிவு செய்யப்பட்டனர்.
எஸ்.மதுஷன் தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டி களின் பிரதம விருந்தினராக மதுரம் இயக்குனர் திரு எஸ். கே.கிருபாகரன் மற்றும் எஸ். அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங் களையும் பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர். (த-86)



## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம். செப். 26
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணியின் விவரம்:

மாலை 4 மணி
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம். (த-23)

* * *

பருத்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கரவெட்டி நவசக்தி வி.க. 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வதிரி பொமர்ஸ் மைதானத்தில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் பீ அணியை எதிர்த்து பொற்பதி ஏ அணி மோதவுள்ளது. (400-422)

* * *

வவுனியா உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பண்டார வன்னியன் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கற்குழி மருத நிலா அணியை எதிர்த்து புதுக்குளம் ஈஸ்வரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-400-422)

## நடுவரைத் தெரிவுசெய்யும் பரீட்சை



மாங்குளம்,செப்.26
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் உதைபந்தாட்ட நடுவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது. இப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் அந்தந்தப் பகுதி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர், செயலாளர்களிடம் விண்ணப்பப் படிவங் களைப் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் எஸ்.முகுந் தன் தெரிவித்துள்ளார். (த-422)

## இறுதியாட்டம் சனியன்று



யாழ்ப்பாணம், செ.26
ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடருக்காக யாழ். மாவட்டத்திலிருந்து அணி களைத் தெரிவுசெய்வதற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள் ளது.
இதில் யாழ். சென்றல் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது. (த-23)

## கிரீடா சக்தி நிகழ்ச்சி இன்று வவுனியாவில்

மாங்குளம்,செப்.26
வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கிரீடா சக்தி நிகழ்வு இன்று காலை 8.30 மணிமுதல் நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள் ளது.
இதில் 14 வயதுக்கும் 17 வய துக்கும் இடைப்பட்ட ஆண், பெண்களுக்கான உதைபந் தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு குறிப்பிடப்பட்ட அளவு மாண வர்கள் தெரிவு செய்யப்படவுள் ளனர்.
தெரிவு செய்யப்படும் மாணவர் களுக்கு மாதாந்தம் ஒரு தொகை பணமும் ஊக்குவிப்புத் தொகை யாக வழங்கப்படவுள்ளது. (த-422-400)

## சதுரங்கப் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செ.26
யாழ். மாவட்டச் சதுரங்கச் சங்கம் நடத்தும் சதுரங்க நடுவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் சனிக்கிழமை பழம் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் தற் காலிகக் காரியாலயத்தில் பிற் பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம்பெறவுள் ளது. (த-23)

## நக்கீரன், வளர்மதி, அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், செ.26
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொட ரில் நேற்று முன்தினம் செவ் வாய்க் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களில் நக்கீரன் வியைாட்டுக் கழகம், அச்செழு வளர்மதி விளையாட் டுக் கழ கம் ஆகியன வெற்றி பெற் றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத் தில் நக்கீரன் அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட் டுக் கழக அணி மோதிக்கொண் டது.
அதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலினைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவ டைந்தது.
இதனால் ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டைமன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.
இதில் அச்செழு வளர்மதி விளை யாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மூன்று முறிப்பு அ.த.க. வென்றது கிண்ணத்தை


மாங்குளம்,செப்.26
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், சமபோச நிறுவனத் தின் அனுசரைணையுடன் வவுனியா மாவட்டப் பாடசா லைகளுக் கிடையே நடத்தப் பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவு னியா மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை சம்பி யன் கிண்ணத்தை சுவீகரித் துள்ளது.
இந்தப் போட்டியின் இறுதியாட் டம் கடந்த 18ஆம் திகதி வவு னியா நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலய மைதா னத்தில் இடம்பெற்றது.
இந்த இறுதியாட்டத்தில் மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலையும் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயமும் மோதின.
ஆட்டம் தொடக்கம் முதல் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. பல தடவைகள் இரு அணியினரின் கோல் பகுதிகளைப் பந்து ஆக்கிரமித்த போதும் பின்னர் தடுத்தாடும் வீரர்களின் அபார முயற்சி யினால் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடிய வில்லை.
இறுதியில் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.
இதனை அடுத்து வெற்றியைத் தீர்மானிப்பதற்காக வழங் கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைமூலம் 3:2 என்ற கோல் கணக்கில் வவுனியா மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை வெற்றி பெற்றுச் சம்பியனாகி யது.
வெற்றிபெற்ற இவ்வணி அடுத்த கட்டப் போட்டிகளில் மன்னார் மாவட்டச் சம்பியனாகிய புனித சென்.லூசியஸ் மகாவித்தியா லய அணியுடன் மோதவுள்ளது.
இதில் வெற்றிபெறும் அணி தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற் றுக்கொள்ளும். (த-422-400)





யாழ்ப்பாணம், தெல்லிப்பழை-மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மகாஜன சிற்பி ஒறேற்றர் ஜெயரட்ணம் அவர்களின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் அயல் பாடசாலை மாணவர்கள் ஒன்றிணைக்கப்பட்ட வீதியோட்ட நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.
ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்ட வீதியோட்ட நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட ஆண், பெண் வீர வீராங்கனைகள்.

# 8 வயதில் 5 விக்கெட் வீழ்த்தி சிறுவன் சாதனை



கங்கா லீக் தொடரில் குறைந்த வயதில் 5 விக்கெட் வீழ்த்தி சாதித்தார் முஷீர்கான். மும்பை கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் 1948 ஆம் ஆண்டு முதல் கங்கா லீக் கிரிக்கெட் தொடர் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு 8 வயதில் ஸ்போர்ட்ஸ்பீல்ட் கிரிக்கெட் அணிக்காக களமிறங்கினார் முஷீர் கான்.

இடது கைசுழற்பந்து வீச்சாளரான இவர், கத்தோலிக் ஜிம் கானா அணிக்கெதிரான போட் டியில் 18 பந்துப்பரிமாற்றத்தில் 78 ஓட்டங்கள் கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தினார். 65 ஆண்டு கங்கா லீக் தொடரில், குறைந்த வயது வீரர் ஒரு வர் 5 இலக்குகளை வீழ்த்துவது இது தான் முதன்முறை.

பின்னர் களமிறங்கிய ஸ்போர்ட்ஸ் பீல்ட் அணி திணறியது. முஷீர் கான் சகோதரர் சர்ப்ராஸ் கான் 65 நிமிடம் களத்தில் நின்று போட்டியை சமன் செய்ய உதவினார்.

# திஸர பெரேரா சூதாட்டத்தில் ஈடுபடவில்லை




இலங்கைக் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் திசர பெரேரா ஐபிஎல் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள குற்றச்சாட்டை இந்திய கிரிக் கெட் சபை மறுத்துள்ளது.

கடந்த ஐ.பி.எல் போட்டியில் திசர பெரேரா, இந்தியாவின் ஹனுமா விகாரி, கரண்சர்மா, ஆஷிஸ் ரெட்டி ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இந்திய ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் நிறுவனம், பெரேரா குறித்து வெளியான தகவல் குறித்து, இந்திய தரப்பில் இருந்து எங்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இவர் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை. எங்கள் வீரர் மீது நாங்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளோம், என தெரிவித்திருக்கிறது.

# அசத் ரௌப் தொடர்பில் முடிவெடுக்கமாட்டோம்



பாகிஸ்தானைச் சேர்ந்த நடுவரான அசத் ரௌப் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவெடுக்காது என அந்தச்சபை தெரிவித்துள்ளது. அவ ருக்கு எதிராக முன்வைக்கப்பட் டுள்ள போட்டி நிர்ணயக் குற்றச்சாட் டுக்கள் தொடர்பாகவே அச்சபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறை கேடுகளில் ஒரு பகுதியாக, அத்தொடரில் நடுவராகப் பங்குபற்றிய அசத் ரௌப், ஸ்பொட் பிக்சிங் அல்லது வேறு வகையான முறைகேடு ஒன்றில் ஈடுபட்டிருக்கலாம் என இந்தியச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனைத் தொடர்ந்து அசத் ரௌப் மீது விசாரணைகள் இடம்பெறு வதாகத் தகவல்கள் வெளியாகியதை அடுத்து, இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் நடுவர் பணியிலிருந்து அசத் ரௌப்பை நீக்குவதாக சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

அதன் பின்னர் அசத் ரௌப் உடன டியாக பாகிஸ்தானுக்குத் திரும்பியி ருந்தார்.

இந்நிலையில் தற்போது கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, ஐ.பி.எல் குற்றங்கள் தொடர்பாக அசத் ரௌப் மீது விசாரணை நடாத்த மும்பை பொலிஸ் விரும்புமாயின் அவரை அது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் அழுத்தத் துக்குள்ளாக்காது எனத் தெரிவித் துள்ளது.

அசத் ரௌப் தற்போது ஓய்வுபெற்றுள்ள நிலையில், இந்த விவகாரம் இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு, மும்பை காவல்துறை, சர்வதேச கிரிக்கெட் சபை, அசத் ரௌப் ஆகியோருக்கிடையிலான விடயம் எனவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு இது தொடர்பாக அதிகாரம் கிடையாது எனத் தெரிவித்துள்ளது.

தன் மீது இந்தியாவில் சுமத்தப்பட்ட எல்லாக் குற்றச் சாட்டுக்களையும் மறுப்பதாகவும், எந்த விதமான போட்டி நிர்ணயத்திலும் தான் தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை எனவும் அசத் ரௌப் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (டு)

# இங்கிலாந்து அணியில் சர்ச்சை வீரர் பனேசர்

ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியில், சர்ச்சைக்குரிய சுழற்பந்து வீச்சாளர் மொன்டி பனேசர் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த மாதம் அவுஸ்திரேலியா செல்லும் இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இப்போட்டிக்கான 17 பேர் கொண்ட வீரர்களை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

இதில், சுழற்பந்துவீச்சாளர் மான்டி பனேசருக்கு இடம் கிடைத்துள்ளது. இவர், சமீபத்தில், இரவு நேர விடுதி ஒன்றில் அளவுக்கு அதிகமாக மது அருந்தி அங்கிருந்த பாதுகாவலர்கள் மீது சிறுநீர் கழித்து ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டதால் அபராதம் விதிக்கப்பட்டார். இந்தச் சர்ச்சையை கடந்து அணி யில் இடம் பிடித்துள்ளார்.

புதுமுக வீரர்களாக கேரி பாலன்ஸ், பென் ஸ்டோக்ஸ், பாய்டு ரான்கின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இத்தொடரில் பங்கேற்க இங்கிலாந்து அணி, அடுத்த மாதம் 25ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு புறப்படுகிறது. டெஸ்ட் தொடருக்கு முன், மூன்று பயிற்சி போட்டிகளில் பங்கேற்க உள்ளது. முதல் டெஸ்ட், எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது.

ஏனைய போட்டிகள் அடிலெய்ட் (டிசம்பர் 5-9ஆம் திகதி), பேர்த் (டிசம்பர் 13-17), மெல்போர்ன் (டிசம்பர் 26-30), சிட்னி (2014, ஜனவரி 3-7) ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளன.

> அடுத்த மாதம் அவுஸ்திரேலியா செல்லும் இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இங்கிலாந்து அணி விபரம்: அலெஸ்டர் குக் (அணித் தலைவர்), ஜோ ரூட், ஜோனாதன் டிராட், கெவின் பீட்டர்சன், இயான் பெல், ஜானி பேர்ஸ்டோவ், மாட் பிரையர், ஸ்டூவர்ட் பிராட், சுவான், ஜேம்ஸ் ஆண்டர்சன், ஸ்டீவன் பின், பாய்டு ரான்கின், பென் ஸ்டோக்ஸ், மான்டி பனேசர், கேரி பாலன்ஸ், கிறிஸ் டிரம்லட், மைக்கேல் கார்பெர்ரி. (டு)



# 100 வாரங்கள் முதலிடம் ஜோகோவிச் சாதனை



சேர்பிய ரென்னிஸ் நட்சத்திரம் நோவக் ஜோகோவிச், ஏ.டி.பி. தர வரிசையில் 100 வாரங்கள் முதலிடத்தில் இருந்து புதிய சாதனையை எட்டியுள்ளார்.

அத்துடன், 100 வாரங்கள் முதலிடத்தில் இருந்த வீரர்கள் பட்டியலில் ஆண்ட்ரே அகாசி (101 வாரங்கள்), ரபேல் நடால் (102), ஜோர்ன் போர்க் (109), ஜான் மெக்என்ரோ (170), ஜிம்மி கானர்ஸ் (268), இவான் லெண்டில் (270), பீட் சாம்ப்ராஸ் (286), ரோஜர் பெடரர் (302) ஆகியோருடன் 9வது வீரராக ஜோகோவிச் இணைந்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஜோகோவிச் முதலிடத்தை பிடித்தார். அதன்பின்னர் 2012ஆம் ஆண்டு 3 மாதங்கள் பெடரரிடம் முதலிடத்தை இழந்தார். ஆனால் அந்த ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் முதலிடத்தை பிடித்தார். நம்பர்-1 வீரர் என்ற பெருமையுடன் இந்த ஆண்டை நிறைவு செய்யும் முனைப்பில் உள்ள ஜோகோவிச் குக்கு நடால் கடும் சவாலாக இருக்கிறார்.

ஜோகோவிச் 11 ஆயிரத்து 120 புள்ளிக ளுடனும், நடால் 10 ஆயிரத்து 860 புள்ளிக ளுடன் உள்ளனர். இரண்டு வீரர்களும் அடுத்த வாரம் நடைபெற உள்ள சீன ஓபனில் விளையாடுகின்றனர்.

அந்த தொடரில் நடப்பு சாம்பியனான ஜோகோவிச் வெற்றி பெற்று பட் டத்தை தக்க வைக்க போராடுவார். அதேசமயம் நடால் இறுதிப் போட்டி வரை முன்னேறினால் அவரால் முதலிடத் துக்கு வர முடியும். (டு)

# திஸர பெரேரா அதிரடி; சண் றைசர்ஸ் வெற்றி

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் 7ஆவது போட்டியில் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றுள்ளது. ட்ரினிடாட் அன்ட் டுபாக்கோ அணிக்கெதிரான இந்தப் போட்டியில் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி திஸர பெரேராவின் சிறப்பான சகலதுறைப் பெறுபேறுகளின் உதவியுடன் வெற்றிபெற்றது.

மொஹாலியில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய ட்ரினிடாட் அன்ட் டுபாக்கோ அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

இன்னிங்ஸின் முதலாவது பந்திலேயே தனது முதலாவது இலக்கை இழந்த ட்ரினிடாட் அன்ட் டுபாக்கோ அணி, அதன் பின்னர் சிறப்பான இணைப் பாட்டங்களைப் புரிந்து 160 ஓட்டங்கள் என்ற சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் டுபாக்கோ அணி சார்பாக டெரன் பிராவோ 44 பந்துகளில் 66 ஓட்டங்களையும், எவின் லூயிஸ் 14 பந்துகளில் 22 ஓட்டங்களையும், டினேஷ் ராம்டின் 15 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக டெரன் சமி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், திஸர பெரேரா 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், இஷாந்த் சர்மா 36 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், டேல் ஸ்ரெய்ன் 41 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

161 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண் றைசர்ஸ் ஹைதராபாத்அணி 19.3 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்குக்காக 35 ஓட்டங்களைப் பகிர்ந்த அந்த அணி, 10.1 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களுடன் காணப்பட்டது. இதன்படி, இறுதி 59 பந்துகளில் 91 ஓட்டங்கள் தேவைப்பட்டிருந்தன. அதன் பின்னர் அதிரடி ஆட்டம் நிகழ்த்திய திஸர பெரேரா அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.



துடுப்பாட்டத்தில் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக திஸர பெரேரா 32 பந்துகளில் 57 ஓட்டங்களையும், ஷீகர் தவான் 18 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ட்ரினிடாட் அன்ட் டுபாக்கோ அணி சார்பாக சுனில் நரைன் 4 பந்துப்பரிமாற்றங்களில் 9 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், நிக் ஸ்ருவேர்ட் 3.3 பந்துப் பரிமாற்றங்களில் 32 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் நாயகனாக திஸர பெரேரா தெரிவானார். (த)

# பிறிஸ்பேண் ஹீற்றை வென்றது றைற்றன்ஸ்



சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் முதலாவது போட்டியில் றைற்றன்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. பிறிஸ்பேண் ஹீற் அணிக்கெதிரான இப் போட்டியில் றைற்றன்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சண்டிகாரில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பிறிஸ்பேண் ஹீற் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய றைற்றன்ஸ் அணி 18.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

முதலாவது இலக்கை ஓர் ஓட்டத்திற்கே அவ்வணி இழந்த போதிலும், இரண்டாவது இலக்குக்காக 69 ஓட்டங்கள் பகிரப்பட்டு, ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 70 ஓட்டங்களுடன் பலமாகக் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட, அவ்வணி மிகக் குறைவான ஓட்ட எண்ணிக்கையையே பெற்றது.

துடுப்பாட்டத்தில் றைற்றன்ஸ் அணி சார்பாக ஹென்றி டேவிட்ஸ் 31 பந்துகளில் 39 ஓட்டங்களையும், ஹெய்னோ குன் 27 பந்துகளில் 31 ஓட்டங்களையும், ஏபி.டி.வில்லியர்ஸ் 19 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் 10 ஓட்டங்களைத் தானும் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் பிறிஸ்பேண் ஹீற் அணி சார்பாக மத்தியூ கேல் 2.5 பந்துப்பரிமாற்றங்களில் 10 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், டானியல் கிறிஸ்ரியன் 3 பந்துப்பரிமாற்றங்களில் 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பென்கட்டிங், நேதன் ஹொாரிட்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

124 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிறிஸ்பேண் ஹீற் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்று 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்திலேயே இலக்குகளை இழந்த அவ்வணி, மெதுவான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. இறுதி 4 பந்துப்பரிமாற்றங்களில் 41 ஓட்டங்கள் தேவைப்பட, அவ்வணி சார்பில் 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்களும், 19ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 10 ஓட்டங்களும் பெறப்பட்டு, இறுதி பந்துப்பரிமாற்றத்தில் 10 ஓட்டங்கள் தேவைப்பட, அந்த பந்துப்பரிமாற்றத்தில் 5 ஓட்டங்கள் பெறப்பட்டு, 3 இலக்குகளும் இழக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் ஹோப்ஸ் 44 பந்துகளில் 37 ஓட்டங்களையும், டானியல் கிறிஸ்ரியன் 24 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றதோடு, கிறிஸ் சபர்க் இறுதி நேரத்தில் 7 பந்துகளில் 19 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் றைற்றன்ஸ்அணி சார்பாக மார்ச்சன்ட் டீ லாங்க 4 பந்துப்பரிமாற்றங் களில் 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், றொவான் றிச்சர்ட்ஸன் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், வன்டர் மேவா, மோர்னி மோர்க்கல், டேவிட் வியஸி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப்போட்டியின் நாயகனாக மார்ச் சன்ட் டீ லாங்க தெரிவானார். (த)

# பலோடெல்லிக்கு போட்டித்தடை



மிலன் அணியின் வீரர் பலோ டெல்லிக்கு மூன்று போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி உதைபந்து அணியின் நட்சத்திர வீரர் மரியோ பலோடெல்லி. தற்போது மிலன் அணி சார்பில் விளையாடி வரு கிறார்.

இந்நிலையில், கடந்த 22ஆம் திகதி நபோலி அணிக்கு எதிரான இத்தாலி லீக் போட்டியில் மிலன் அணி 1-2 என தோல்வியடைந்தது. இதில், பலோ டெல்லி மஞ்சள் (57ஆவது நிமிடம்) மற்றும் சிவப்பு அட்டை (90ஆவது நிமிடம்) பெற்று வெளியேற்றப்பட்டார்.

இதனால், ஆத்திரமடைந்த இவர் போட்டி முடிந்தபின், நடு வரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து, இத் தொடரின் அடுத்த மூன்று போட்டியில் விளையாட பலோ டெல்லிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இத்தாலி லீக் தொடர் நிர்வாகம் வெளியிட்ட செய்தியில், போட்டி நடுவரை அவமானப் படுத்துதல், பய முறுத்துதல் போன்ற வற்றில் பலோ டெல்லி ஈடுபட்டதால், இவருக்கு 3 போட்டியில் விளையாட தடை விதிக்கப்படுகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து முறையீடு செய்யப் போவதாக மிலன் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது (த)

பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கான இலவச சேவை முகாம்

பஜாஜ் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் வாடிக்கையாளர்களுக்கான இலவச சேவை முகாம்

* தர நிலை பரிசோதனை
* வாயுப்பரிசோதனை (புகைப் பரிசோதனை)
* அசல் உதிரிப்பாகங்கள் மற்றும் M.R.F ரயர்கள் விசேட விலைக்கழிவு

இடம்: சிவசக்தி மோட்டார் சைக்கிள் மெக்கானிக் & சேவிஸ்
தெல்லிப்பளை றோட், வட்டுக்கோட்டை
காலம்: 26.09.2013
நேரம்: 9.30AM-4.30PM
அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி பிறைவேற் லிமிற்டெட்
021 770 0600
077 235 6690 (c121570) (10,14)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர்,உயர்கல்வி மாணவர்கள்,இளைஞர்,யுவதிகள் மற்றும் தொழில்தேடுவோர் இணைந்துகொள்ள முடியும்
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது இப் பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
பயிற்சி நெறி ஆரம்பம் 30.09.2013 திங்கட்கிழமை காலை 09.00
10 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப் பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் எம்மால் வழங்கப்படும்.
சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றிதழுடன் கூடிய கற்கைநெறி.
SAAMSON Easy Way English
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்
077 621 4567



Training
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP

வீட்டுடன் கடை வாடகைக்குண்டு
தொடர்பு: 0773606835
திருநெல்வேலி MPCS லேனிற்கு அருகில் ஆடியபாதம் றோட்டில் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

அடையாள அட்டை தவறிவிட்டது
தர்மன் கலட்டி,தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்வநேசன் கிருஸ்ணபிரசாத் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (892893616 V) K.K.S. வீதியில் 24.09.2013 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
077 432 3509 (32063) (10,14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.